REGISTERED AS NEWSPAPER

# உதயன்

பக்கங்கள் - 28 | விலை - ரூபா 30 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111


சுடர் :35 கதிர் :281 ஆவணி 21 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை 06 செப்ரெம்பர் 2020 வள்ளுவர் ஆண்டு 2051

## 2 கிலோ கஞ்சாவுடன் சந்தேகத்தில் பெண் கைது

வவுனியா, செப். 6

2 கிலோ கிராம் கேரளக் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் பெண் ஒருவர் 26 >

# நான் சாவைக் கண்டு அஞ்சப் போவதில்லை



## வன்னி மண்ணில் வைத்து பொன்சேகாவுக்கு விக்கி பதிலடி

கிளிநொச்சி, செப்ரெம்பர் 6

உண்மைகளை அழுத்தம் திருத்தமாக எடுத்துச் சொல்ல வேண்டும் என்பதை இப்போது உணர்ந்துகொண்டுள்ளேன். அதைத் தடுக்க சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்கள் அல்லது உயர் இராணுவ அதிகாரிகள் எனக்கு மரண பயம் ஊட்டுவதால் ஆவதொன்றுமில்லை. எத்தகைய அச்சுறுத்தல்களைக் கடந்தும், அரசியல் மிரட்டல்களைக் கடந்தும் என்னுடைய குரல் உங்களுக்காக ஒலிக்கும். 26 >

## 15 பவுண் நகை திருட்டு

சந்தேகத்தில் ஒருவர் கைது

கைதடி, செப். 6

கைதடியில் நள்ளிரவு வீடு புகுந்த திருடர்கள் 15 பவுண் நகைகள் மற்றும் 30 ஆயிரம் ரூபா பணம் என்பன திருடப்பட்டுள்ள என சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடளிக்கப்பட்டுள்ளது. சம்பவம் நேற்று அதிகாலை 26 >

### முச்சந்தி முரளி




## உறுப்புரிமையிலிருந்து மணி இடைநிறுத்தம்

கட்சியின் பெயரைப் பயன்படுத்தவும் தடை விதித்தது மக்கள் முன்னணி

யாழ்ப்பாணம், செப். 6

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பெயரைப் பயன்படுத்தி மணிவண்ணன் இனிச் செயற்பட முடியாது என்றும், அவர் கட்சியின் அடிப்படை உறுப்புரிமையிலிருந்தே இடைநிறுத் 27 >

## 20ஆம் திருத்தத்தை முன்னணி எதிர்க்கும்

கஜேந்திரகுமார் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 6

நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ள 20ஆம் திருத்தச் சட்டவரைவை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி எதிர்க்கும். இவ்வாறு அந்தக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திர 26 >

## தமிழர்களுக்கான சரியான பாதை திறக்கப்பட்டுள்ளது

சுரேஸ் தெரிவிப்பு



கிளிநொச்சி, செப். 6

நாடாளுமன்றத்தில் தமிழ்த் தேசியத்தின் பாதுகாவலர்களாக தங்களைக் கருதக் கூடியவர்கள் விக்னேஸ்வரனின் கருத்துக்கு ஆதரவாக குரல் கொடுத்தி 26 >

## இந்தியா தலையிட்டும் பயனில்லை புதிய அரசமைப்பில் 13இற்கு சமாதி



விமல் வீரவன்ச திட்டவட்டம்

கொழும்பு, செப். 6

புதிய அரசமைப்பின் ஊடாக 13ஆவது திருத்துத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும். இந்த நிலைப்பாட்டில் நாம் உறுதி 26 >

## உள்விவகாரங்களில் தலையிடாது இந்திய அரசு வாய்மூடவேண்டும்

சரத் வீரசேகர மிரட்டல்

கொழும்பு, செப். 6

இலங்கை விவகாரத்தில் இந்தியா தலையிடவே முடியாது. அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் இலங்கை இந்திய உடன்படிக்கையின் பிரகாரம் அன்று நிறைவேற்றப்பட்டமை உண்மை. அதற்காக இந்தியா இன்று சொல்வதையெல்லாம் நாம் ஏற்கவேமாட்டோம். இந்த விவகாரத்தில் இந்தியா அமைதியாக இருப்பதே நல்லது. இவ்வாறு மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் இராஜாங்க 26 >

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணின் கரட் எதுவாயினும் அதிகூடிய முற்பணம்

அதிகபட்ச முற்பணத் தொகை
ரூ.66,000/-
0.79% மாதாந்த வட்டி வீதம் மட்டுமே

- அதிகபட்ச இரகசியத் தன்மை
- சிநேகபூர்வமான உடனடி சேவை
- சிறந்த பாதுகாப்பு

இச்சலுகை வரையறுக்கப்பட்ட காலத்திற்கு மட்டுமே

சந்தை நிலைவரங்களின் அடிப்படையில் குறிப்பிட்ட முற்பணமானது முன்னறிவித்தலின்றி மாற்றப்படலாம்.
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள் அல்லது,

செலான் தங்கக் கடன் 011 200 88 88 செலான் வங்கி

Brand Finance Rating "A+" Fitch Rating: "A" (lka) கம்பனிப் பதிவிலக்கம் PQ 9
இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்யப்பட்ட வர்த்தக வங்கி

# சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் அதிகரிப்பு

## சுட்டிக்காட்டியது சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை

**கொழும்பு, செப்.6**

**சிறுவர்கள் மோசமான முறையில் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. பதிவாகும் துஸ்பிரயோகங்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ள போதிலும், குரூரமாக இடம்பெறும் துஷ்பிரயோகங்கள் அதிகரித்துள்ளன என்று தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் முதித விதானபதிரன தெரிவித்துள்ளார்.**

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த வருடம் துஷ்பிரயோகச் சம்பவங்கள் தொடர்பில் அதிகார சபைக்கு 8 ஆயிரத்து 558 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன. எனினும் இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 4 ஆயிரத்து 471 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. இந்த நிலையில் அரசாங்கம் அனைத்து அமைச்சுக்களினூடாகவும், சிறுவர் துஸ்பிரயோகங்களைக் கட்டுப்படுத்த பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளது. இதேவேளை மிகவும் குரூரமான முறையில் சிறுவர்கள் பாலியல் ரீதி யில் துன்புறுத் தப்படும் சம்பவங்கள் தற்போது அதிகரித்துள்ளன.

அவ்வாறான சம்பவங்கள் பதிவாகும்போது சந்தேக நபர்கள் உடனடியாகக் கைதுசெய்யப்படுவார்கள். பெற்றோர்கள், முதியவர்கள் உட்பட முழுச் சமூகத்துக்கும் சிறுவர்களைப் பாதுகாப்பதற்கான பொறுப்பு காணப்படுகின்றது. தேசிய பாதுகாப்பு அதிகார சபையும் தற்போது மிகுந்த அர்ப்பணிப்புடன் சிறுவர்கள் தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளது - என்றார். (ப)

# புவனேகபாகு கட்டட வழக்கு ஒத்திவைப்பு

குருநாகல், செப்.6

குருநாகல் புவனேகபாகு கட்டடத் தொகுதி தகர்க்கப்பட்டமை தொடர்பான வழக்கு குருநாகல் பிரதான நீதவான் சம்பத் ஹேவாவசம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு ஒத்திவைக்கப்பட்டுள்து.

குருநாகல் பொலிஸ் நிலையத்தின் குற்ற விசாரணை விசேட பிரிவுக்கு சம்பவம் தொடர்பான சி.சி.ரி.வி காட்சிகளை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

வழக்கு எதிர்வரும் 23ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ப)

# பட்டதாரிகளுக்கு இராணுவ பயிற்சிகள் தேவையற்றதே

## தென்னே ஞானாநந்த தேரர் தெரிவிப்பு

கொழும்பு, செப்.6

பட்டதாரிகளுக்கு வழங்கப்படும் இராணுவப் பயிற்சிக்கு மாறாக முறையாக அரச நிர்வாகச் செயற்பாடுகள் தொடர்பான பயிற்சிகளை வழங்குமாறு தென்னேஞாணாநந்ததேரர், கோரிக்கை விடுத்துள் ளார். அரச தொழிலில் இவ்வாறு இணைத்துக்கொள்ளப்பட்ட பட்டதாரிகளுக்கு 5 படிமுறைகளில் பயிற்சிகள் வழங்கப்பட உள்ளன. அவற்றில் முதல் பயிற்சி முழுமையான இராணுவப் பயிற்சியெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பட்டதாரிகளை இராணுவ முகாம்களுக்குள் முடக்கி வைப்பதால் அரசாங்கம் எவ்வாறான பலன்களை எதிர்பார்க்கிறது. பட்டதாரிகளுக்கும் இந்தப் பயிற்சி தொடர்பில் மீள் பரிசீலனை ஒன்று அவசியம் என்றார். (ப-இ)




# 100 நாள்களில் 6ஆயிரம் இளைஞரை இணைத்தல்

## திட்டம் நேற்று ஆரம்பம்

மட்டக்களப்பு. செப்.6

நூறு நாள்களில் ஆயிரம் இளைஞர்களை உள்ளீர்த்தல்' திட்டம் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு வாலிபர் முன்னணியினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பில் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள இரா. சாணக்கியன்,உட்பட செயற்குழுவினால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டு முதற்கட்டமாக வாலிபர் முன்னணியில் இணைந்துகொண்ட புதிய உறுப்பினர்களுக்கான விண்ணப்பப் படிவங்களும் வழங்கிவைக்கப்பட்டன. நிகழ்வில் நாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கௌரவிக்கப்பட்டிருந்தார். (ப-இ)

# இலங்கையின் கடன் நிலுவை அதிகரிப்பு

கொழும்பு, செப்.6

2020 ஆம் ஆண்டில் முதல் 6 மாதங்களுக்குள் இலங்கை அரசின் கடன் நிலுவைத் தொகை ரூ.1000 பில்லியனால் அதிகரித்துள்ளதாக மத்திய வங்கியின் வாராந்த பொருளாதார அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டின் இறுதியில் கடன் நிலுவைத் தொகை ரூ.13,031.5 பில்லியனாக இருந்தது. ஆனால் 2020ஆம் ஆண்டின் ஜூன் மாத இறுதியாகும் போது நிலுவையில் உள்ள மொத்த கடன் தொகை ரூ.14,052.2 பில்லியனாக உயர்வடைந்துள்ளது.

அதன் பிரகாரமே கடந்த 6 மாதத்தில் மாத்திரம் கடன் நிலுவை ரூ.1000 பில்லியனால் அதிகரித்துள்ளது. (ஐ-இ)

# நாடாளுமன்ற தேர்தலில் தோல்வியடையவில்லை

## ஹிஸ்புல்லாஹ் தெரிவிப்பு



மட்டக்களப்பு, செப்.6

கடந்த நாடாளுமன்றத் தேர்தலை வெற்றி கொள்ள என்னால் முடிந்த சகல முயற்சிகளையும் மேற்கொண்டிருந்தேன். தேர்தலில் நான் தோல்வியடையவில்லை என்று கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்

காத்தான்குடி ஹிஸ்புல்லாஹ் மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

என்னைப் பொறுத்தவரை நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றிபெற்று, அமைச்சராக நான் தெரிவு செய்யப்பட்டிருந்தால் இருக்கின்ற மனோநிலையிலேயே தற்போதும் நான் உள்ளேன். நாடாளுமன்றத் தேர்தலில் நான் தோல்வியைத் தழுவியதாகக் கருதவில்லை. எனது தோல்வி மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்களுக்கு ஏற்பட்டுள்ள தோல்வியாகும் என்றே கருதுகிறேன் என்று அவர் மேலும் தெரிவித்தார். (பு-இ)

# குட்டிமணியின் மனைவி நேற்று உயிரிழந்தார்!



**யாழ்ப்பாணம், செப். 6**

**தமிழீழ விடுதலை இயக்கமான ரெலோவின் ஸ்தாபகர்களில் ஒருவரான குட்டிமணியின் பாரியார் திருமதி இரா சரூபராணி நேற்று உயிரிழந்தார். அவரது மறைவுக்கு தமிழீழ விடுதலை இயக்கம் இரங்கல் தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:
தமிழீழ விடுதலை இயக்கத்தின் ஸ்தாபகராக எமது இயக்கத்தின் முதுகெலும்பாக செயல்பட்டவர் குட்டிமணி. இவரது துணைவியார் இன்று (நேற்று) உயிரிழந்த செய்தியறிந்தோம். அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தினர்மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் தமிழ் ஈழ விடுதலை இயக்க உறுப்பினர்கள் சார்பாக எமது ஆழ்ந்த இரங்கல்களையும், கண்ணீர் அஞ்சலிகளையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-110)

# நீராடச் சென்ற சிறுமி இறப்பு!!

கொழும்பு, செப். 6
வாகரை பிரதேச செயலர் பிரிவில் மீள் குடியேற்ற கிராமமான குகணேசபுரம் கிராமத்தில் குளத்தில் நீராடச் சென்ற சிறுமி நீரில் மூழ்கி உயிரிழந்தார். நேற்று மாலை இந்தத் துயரச் சம்பவம் இடம்பெற்றது என்று வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.
சண்முகநாதன் விஜய ரூகினி என்ற 12 வயதுச் சிறுமி தனது சகோதரியுடன் நீராடச் சென்றபோதே இந்தத் துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-150)

# மத்திய சுகாதார கட்டமைப்பினுடைய அவசியம் கொரோனாவால் தெரிந்தது

## ஜனாதிபதி கோத்தாபய தெரிவிப்பு

கொழும்பு, செப்ரெம்பர் 6
மத்திய சுகாதாரக் கட்டமைப்பின் அவசியம் கொரோனா பெருந்தொற்று நிலைமையின்போது வெளிப்பட்டது என்று தெரி வித்துள்ளார் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ.
சுகாதார சேவை அதிகாரம் முழுமையாக மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டிருந்தால் கொரோனா பெருந்தொற்றுக்கு இலங்கை முகங்கொடுக்கும்போது அதன் செயற்திறன் இதற்கு மாற்றமாக அமைந்திருக்கலாம் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.
களனி பொல்லேகல, மானெல்வத்த நாகானந்த சர்வதேச பௌத்த கல்வி நிலையத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார் என்று அவரின் ஊடகப்பிரிவால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:
கொவிட் 19 நோய்த் தொற்றை வெற்றிகரமாக கட்டுப்படுத்துவதற்கு இலங்கைக்கு முடியுமாக இருந்தமைக்கான காரணம் அரசாங்கத்தின் பல்வேறு பிரிவினர் மேற்கொண்ட தீர்மானமிக்க மற்றும் உடனடி நடவடிக்கைகளோடு எமது சுகாதார சேவையாளர்களின் உன்னத அர்ப்பணிப்பும் ஆகுமென்று ஜனாதிபதி குறிப்பிட்டார். இம்முயற்சிக்கு பங்களித்த அனைத்து சுகாதார சேவையாளர்களுக்கும் அவர் தனது நன்றிகளையும் பாராட்டையும் தெரிவித்தார்.
உலகின் பல்வேறு அபிவிருத்தி அடைந்த நாடுகளுக்கும் கூட வெற்றிகரமாக நோய்த் தொற்றுக்கு போதுமான நடவடிக்கைகளை எடுக்க முடியாது போயுள்ளது. தாமதித்து அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுதல் மற்றும் பொது சுகாதார பாதுகாப்பு கட்டமைப்பின்மை இதற்கான காரணமாகும். முன் தயார் இல்லாமை, போதுமானளவு பரிசோதனைகள் செய்யாமை இதனை மேலும் அதிகப்படுத்தியது. இதன் பிரதிபலனாக தொற்றுக்குள்ளானவர்கள் மற்றும் மரணித்தவர்களின் எண்ணிக்கை உயர்ந்தது. கொவிட் தொற்றுக்குள்ளாகி இருக்கலாம் என்று சந்தேகித்த எந்தவொரு நோயாளியையும் நாம் திருப்பி அனுப்பவில்லை. உலக சுகாதார அமைப்பு மற்றும் யுனிசெப் உள்ளிட்ட சர்வதேச அமைப்புக்கள் உட்பட பல்வேறு நாடுகள் நாம் அடைந்த வெற்றியைப் பாராட்டுகின்றன.
அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடாக இருந்தாலும் இலங்கை இவ்வாறான வெற்றியை அடைந்து கொள்வதற்கு எமது இலவச சுகாதார கட்டமைப்பே காரணமாக அமைந்தது என்பதை மிகப் பெருமையுடன் கூறிக்கொள்கி றேன்' என ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டார் என்றுள்ளது. (ம-இ)

# உடுப்பிட்டியில் விபத்து இருவர் காயமடைந்தனர்



கரணவாய், செப். 6
உடுப்பிட்டி யாழ் பிரதான வீதியில் சமுர்த்தி மகா சங்கத்துக்கு அண்மையில் இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்தனர்.
யாழ்ப்பாணத்தில் இருந்து உடுப்பிட்டி நோக்கிவந்த படி ரக வாகனமும் உடுப்பிட்டியில் இருந்து யாழ் நோக்கி சென்றுகொண்டிருந்த ஸ்கூட்டி ரக மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதியே இவ்விபத்து ஏற்பட்டது.
வல்வெட்டித்துறையில் இருந்து சுன்னாகம் நோக்கிச் சென்றுகொணடிருந்த இருவரே இந்த விபத்தில் காயமடைந்தனர். பருத்தித்துறை போதனா மருத்துவமனையில் அவர்கள் சேர்க்கப்பட்டனர். மேலதிக விசாரணைகளை வல்வெட்டித்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம26)

# மஞ்சளை கொள்ளையிட்ட 9 நபர்களுக்கும் மறியல்!

கொழும்பு கிராண்பாஸ் பகுதியிலுள்ள சுங்க திணைக்களத்திற்குச் சொந்தமான களஞ்சிய சாலையில் மீள் ஏற்றுமதிக்காகக் களஞ்சியப் படுத்தப்பட்டிருந்த 18 ஆயிரத்து 180 கிலோகிராம் மஞ்சளை கொள்ளையிட்டதற்காக கைது செய்யப்பட்ட ஒன்பது சந்தேக நபர்களும் எதிர்வரும் 18ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.
களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த மஞ்சள் கொள்ளையிடப்பட்டுள்ளதாக ஓகஸ்ட் 28ஆம் திகதி சுங்க திணைக்களத்தினால் பொலிஸாரிடம் முறைப்பாடளிக்கப்பட்டிரு ந்தது. அதற்கமைய கிராண்ட்ஸ் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்திருந்ததுடன், பதில்பொலிஸ்மா அதிபரின் ஆலோசனைக்கமைய குற்றப் புலனாய்வு பிரிவினரும் விசாரணைகளை முன்னெடுத்திருந்த னர். இதன்போது ஒன்பது சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டிருந்தனர். அவர்கள் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த ப்பட்டனர். சந்தேக நபர்களை எதிர்வரும் 18ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ம-இ)

வடக்கு தனிமைப்படுத்தல் நிலையங்கள்

# கடந்த 8 நாள்களில் 11 பேருக்கு தொற்று

வடக்குத் தனிமைப்படுத்தல் நிலையங்களில் கடந்த 8 நாள்களில் நடத்தப்பட்ட சோதனைகளில் 11 பேருக்கு கொரோனாத் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
இலங்கைவிமானப்படை முல்லைத்தீவு தனிமைப்படுத்தல் மையத்தை சேர்ந்த மூவருக்கும், விடத்தல்பளை தனிமைப்படுத்தல் மையம் மற்றும் முழங்காவில் தனிமைப்படுத்தல் மையத்தை சேர்ந்த ஆறு பேருக்கும், பலாலி தனிமைப்படுத்தல் நிலையத்தைச் சேர்ந்த இருவருக்குமே இவ்வாறு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (மஇ)

# சுங்க மோசடியில் பரிசோதகர்கள் கைது

வெளிநாட்டிலிந்து மதுபானம் இறக்குமதி செய்து அதை மீள் ஏற்றுமதி செய்யும் சுங்க தீர்வையற்ற திட்டத்தின் கீழ், மோசடி செய்த சுங்கத் பரிசோதகர்கள் மூவர் கைது செய்யப்பட்டு எதிர்வரும் 14ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். சந்தேக நபர்கள் நீண்டகா லமாக இவ்வாறு மோசடிகளைச் செய்து வந்துள்ளனர் என்று ஆரம்ப விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது எனபொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினர் கொழும்பு பிரதான நீதவான் லங்கா ஜயரத்ன முன்னிலையில் தெரியப்படுத்தியுள்ளனர். சீதுவையிலுள்ள வெளிநாட்டு மதுபான வகைகளை இறக்குமதி செய்யும் தனியார் நிறுவனமொன்றால், தீர்வையற்ற களஞ்சியங்களிலிருந்து மீள் ஏற்றுமதி செய்வதற்காக கொண்டுவரப்பட்ட குறித்த வெளிநாட்டு மதுபானங்களான, உயர் ரக விஸ்கி, பிராண்டி, வொட்கா போன்ற 924 மதுபான போத்தல்களுக்கு பதிலாக அதற்கு சம அளவிலான தண்ணீர் போத்தல்களை நிரப்பி இம்மோசடியை மேற்கொண்டு வந்துள்ளமை, குற்றப் புலனாய்வு பிரிவின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. சுங்கத் திணைக்கள பிரதம பணிப்பாளரின் வேண்டுகோளின் பேரில் இரகசிய பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ம-இ)

# அந்தோனியார் ஆலயம் கிளிநொச்சியில் திறப்பு


கிளிநொச்சி,செப்.6
கிளிநொச்சி பரந்தன் முல்லைத்தீவு பிரதான வீதியில் வழிப்போக்கர்களின் வணக்கத்துக்காக புனித அந்தோனியார் ஆலயம் ஒன்று நேற்று திறக்கப்பட்டது.
யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயர் வணக்கத்துக்குரிய யஸ்டின் ஞானப்பிரகாசம் ஆண்டகையால் இவ்வாலயம் ஆசீர்வதிக்கப்பட்டுதிறக்கப்பட்டது. கல்லறை ஆண்டவர் திருச் சொருபமும் புதிதாக அமைக்கப்பட்டு மக்களின் வழிபாட்டுக்காக கையளிக்கப்பட்டது. ஆலயப் பங்கு தந்தை ஆர்.எச்.சகாய நாயகம் அடிகளாரின் தலைமையில் ஒழுங்கமைக்கப்பட்ட நிகழ்வில் புனருத்தானம் செய்யப்பட்ட ஆலயக் கிணறு ஆண்டகையால் ஆசீர்வதிக்கப்பட்டு பாவனைக்காக கையளிக்கப்பட்டது. (ஐ-இ)

# கைதடி மக்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை

சாவகச்சேரி,செப்.6
கைதடி பிரதேச மக்களுக்கான எழுந்தமான பி.சி.ஆர் பரிசோதனைகள் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை இடம்பெறும் என்று சாவகச்சேரி சுகாதார திணைக்களத்தினர் அறிவித்துள்ளனர்.
திணைக்களத்தால் ஏற்கனவே நாவற்குழி, சாவகச்சேரி, கொடிகாமம் மற்றும் தென்மராட்சி பிரதேச செயலகம் போன்ற இடங்களில் இந்தப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.
இதில் ஒருவருக்கும் கொரோனாத் தொற்று இல்லையென உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரியின் ஏற்பாட்டில் வாரத்தில் ஒருநாள், ஒவ்வொரு பொது சுகாதாரப் பரிசோதகர் பிரிவுகளில் குடியிருப்புகள் அதிகம் உள்ள பகுதிகளில் எழுந்தமான பி.சி. ஆர் பரிசோதனைகள் நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-9)

# வீதியோரத்தின் மரங்கள் முறிந்து விழும் அபாயம்

வவுனியா, செப்.6
வவுனியாவில் கடந்த சில நாள்களாக பலத்த காற்றுடன் கூடிய சீரற்ற காலநிலை நிலவி வருகின்ற நிலையில் வீதியோரத்திலுள்ள பழமைவாய்ந்த மரங்கள் முறிந்து விழும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.
குருமன்காடு ரயில் நிலைய வீதியில் வீதியோரங்களில் காணப்படும் பழமைவாய்ந்த சில மரங்கள் பட்டுப்போயுள்ளதுடன் சரிந்து விழும் நிலையில் காணப்படுகின்றன.
வவுனியாவில் பலத்த காற்று வீசி வருகின்ற நிலையில் அம் மரங்கள் சரிந்து விழும் அபாயம் ஏற்பட்டுள்ளது. அந்த வீதியூடாகத் தினசரி ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் பயணித்து வருகின்றனர்.
அவர்கள் ஆபத்துக்களைச் சந்திக்கவேண்டிய சூழ்நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளனர். இவ்விடயம் தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனம் எடுத்து நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-18)



# கண்டியில் இடம்பெற்றது நில நடுக்கம் அல்ல

## வெளிவந்தது ஆய்வறிக்கை

**கண்டி, செப்.6**
**அண்மையில் கண்டி திகன பகுதியில் கிராமங்களில் உணரப்பட்ட நில அதிர்வுகள் நிலநடுக்கம் அல்ல என்று அது தொடர்பான ஆய்வு அறிக்கை தெரிவித்துள்ளது.**

குறித்த நில அதிர்வுகள் தொடர்பில் ஆராய்வதற்கென நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.
நிலத்துக்கடியில் சுண்ணாம்புக் கற்களுக்கிடையிலான உராய்வே அதிர்வுக்குக் காரணமென அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய தயாரிக்கப்பட்ட ஆய்வறிக்கை எதிர்வரும் திங்கட்கிழமை ஊடகங்களுக்கும், உரிய பிரிவினருக்கும் அனுப்பிவைக்கப்படுமென பூகோள மற்றும் சுரங்க அகழ்வு பணியகத்தின் தலைவர் அநுர வல்பொல தெரிவித்தார்.
"நில அதிர்வு தொடர்பில் மூன்று கோணங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்கமைய இந்த அதிர்வு நில நடுக்கம் அல்லவென உறுதி செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான சம்பவங்கள் சர்வதேச ரீதியில் அடிக்கடி இடம்பெறுகின்றன. நில அதிர்வு இடம்பெற்ற கிராம மக்கள் எதிர்வரும் காலங்களிலும் குறித்த விடயம் தொடர்பில் அவதானத்துடன் இருப்பது முக்கியமாகும்.
கட்டட நிர்மாணங்களின்போது பூகோள மற்றும் சுரங்க அகழ்வுப் பணியகத்தின் அனுமதியைப் பெற்றுக் கொள்வது சிறந்தது" என அநுர வல்பொல மேலும் தெரிவித்தார் (ஐ-இ)

## நூல் வெளியீடு

தெல்லிப்பழை,செப்.6
தெல்லிப்பழை மழலைகள் பூங்கா முன்பள்ளியால் கற்றல் ஊக்க நூல் வெளியீட்டு நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு முன்பள்ளி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண போதனா மருத்துவமனைப் பொது மருத்துவர் ரி.பேரானந்தராஜா கலந்துகொள்ளவுள்ளார். (ஐ)

# இல்மனைட் அகழ்வுக்கு எதிராக அம்பாறையில் கவனவீர்ப்பு

அம்பாறை, செப்.6
அம்பாறை திருக்கோவில் பொத்துவில் பிரதேச செயலாளர் பிரிவுகளில் இடம்பெறும், இல்மனைட் அகழ்வுக்கு எதிராக திருக்கோவில் மற்றும் தாண்டியடி மக்கள் நேற்று கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.
தாண்டியடி பிரதான வீதியில் ஆரம்பிக்கப்பட்ட ஆர்ப்பாட்ட பேரணி அங்கிருந்து பிரதான வீதியாகத் தாண்டியடி பேருந்து தரிப்பிடத்துக்குச் சென்று வாகனப் பேரணியாக திருக்கோவில் மணிக்கூட்டுக் கோபுரம் வரை சென்றடைந்தது.
திருக்கோவில் பிரதேசத்தில் 2018 ஆம் ஆண்டு இல்மனைட் அகழ்வுக்கான முன்னெடுப்புக்கள் வெளிநாட்டு நிறுவனம் ஒன்றினால் முன்னெடுக்கப்பட்டிருந்தது. எனினும் மக்களின் எதிர்ப்பால் அகழ்வு வேலைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன. மீண்டும் கடந்த வாரம் திருக்கோவில் தாண்டியடி கடற்கரையில் அரச துறைசார் அதிகாரிகள் களப் பயணம் ஒன்றை மேற்கொண்டு இருந்த நிலையில், மக்கள் இல்மனைட் அகழ்வுக்கு அரசு அனுமதி வழங்க வேண்டாம் எனக் கோரி நேற்று கவனவீர்ப்பை முன்னெடுத்தனர்.
திருக்கோவில் பிரதேச செயலாளர் ரீ.கஜேந்திரனிடம் இல்மனைட் அகழ்வுக்கு அரசு அனுமதி வழங்க வேண்டாம் என்ற கோரிக்கை கடிதமும் கையளிக்கப்பட்டது. (ஐ-இ)

# பட்டப்படிப்புக்கான பதிவுகள் நிறுத்தம்

கொழும்பு, செப்.6
கலைத்துறைக்கான வெளிவாரி பட்டப்படிப்புக்கான புதிய பதிவுகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.
கலைத்துறைக்கான பாடநெறிகளை மீளாய்வுக்கு உட்படுத்தவும், புதிய பாடநெறிகளை சேர்ப்பதற்காக புதிய நிபுணர் குழுவொனஙறு நியமிக்கப்படவுள்ளது என ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்தார்.
எதிர்கால தொழில்வாய்ப்புகளை இலக்காகக் கொண்டு குறித்த நிபுணர் குழுவின் பரிந்துரைகளுக்கு அமைய புதிய பாடத்திட்டங்களை கலைத்துறைக்கு அறிமுகப்படுத்த எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.
புதிய பாடத்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டதன் பின்னர் கலைத்துறைக்கான வெளிவாரி பட்டப்படிப்புக்கு புதிய மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.
எனினும், நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களினூடாக முன்னெடுக்கப்படும் முகாமைத்துவம் மற்றும் விஞ்ஞானம் உள்ளிட்ட ஏனைய வெளிவாரி பட்டப்படிப்புக்கான பதிவுகள் நிறுதப்படவில்லை எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (ஐ-இ)

# மாற்றுத் திறனாளிகளுக்கு உதவுவதற்கு முன்வாருங்கள்

## வலுவிழந்தோர் மறுவாழ்வு சங்கம் கோரிக்கை

வவுனியா, செப்.6
வலுவிழந்தோரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு சமூக ஆர்வலர்களின் ஆதரவு தேவையென வலுவிழந்தோர் மறுவாழ்வு சங்கத்தின் உபதலைவர் மருத்துவர் க.நந்தகுமார் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;
வலுவிழந்தோர் மறுவாழ்வுச் சங்கம் மாற்றுவலுவுடையவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக அமைக்கப்பட்டிருக்கின்றது. 1990 ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த நிறுவனம் ஆரம்பத்திலிருந்து இன்றைய தினம் வரை மாற்றுத்திறனாளிகளுக்கான வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான திட்டங்களை முன்னெடுத்து வருகின் றது.
இந்தச் செயற்பாடு மேலும் விரிவடைய வேண்டுமாயின் சமூக ஆர்வலர்கள் மற்றும் கொடையாளிகளின் ஆதரவு கிடைக்க வேண்டும். இதன்மூலமே மாற்றுத்திறனாளிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த முடியும்- என்றார். (ஐ-111)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## தொல்பொருள் செயலணியின் நம்பகத்தன்மை யாதெனில்...!

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச நியமித்த கிழக்கு மாகாணத் தொல்பொருள் தொடர்பான ஜனாதிபதி செயலணி மீது தமிழர்களுக்கு ஏற்கனவே இருந்த பேரச்சம் தற்போது மேலும் வலுப்பெற்றுள்ளது. அந்தச் செயலணியின் உறுப்பினராக இருக்கும் மேதானந்த தேரர் இலங்கைத் தமிழர்களை 'வாடகை வீட்டில் இருப்பவர்கள்' என்ற அடைமொழியால் அழைத்துள்ளார். மட்டுமன்றி வடக்கு - கிழக்கு தமிழர்கள் தாயகம் இல்லை என்றும் பூர்வீக மொழி தமிழ் என நிரூபிப்பதற்கான ஆதாரங்கள் கிடைக்கவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் க.வி.விக்னேஸ்வரன் முன்வைத்த தமிழ்மொழியின் தொன்மை தொடர்பாகக் கருத்துரைக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். தற்போது கேள்வி என்னவென்றால், கிழக்கின் தொல்பொருள்களுக்காக அமைக்கப்பட்டுள்ள செயலணியின் நம்பகத்தன்மை என்பது என்ன?. கிழக்கு தமிழர்களுக்கானது அல்ல. அது தமிழர்களின் பூர்வீகம் அல்ல என்று நிரூபிப்பதுதான் இந்தச் செயலணியின் நோக்கமா?.

கிழக்கின் பாரம்பரியங்களைப் பாதுகாக்கவும், அதன் தொன்மைத்தனத்தைப் பேணவும், அடையாளப்படுத்தவும், அது தொடர்பான ஆய்வுகளுக்காகவும் அமைக்கப்பட்ட மேற்படி செயலணியின் உறுப்பினர் ஒருவர் வடக்கு - கிழக்கு தமிழர்கள் தாயகம் இல்லை என்றும் பூர்வீக மொழி தமிழ் என நிரூபிப்பதற்கான ஆதாரங்கள் கிடைக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளார் என்றால் அந்தச் செயலணியே இந்த எண்ணப்பாட்டில் இருக்கின்றது என்றுதானே அர்த்தம். இவ்வாறிருக்கையில் இந்த செயலணியின் செயற்பாடுகள் எந்தளவு இதயசுத்தியுடனும் நேர்மைத் தன்மையுடனும் இருக்கப்போகின்றன என்பது மலையில் ஏற்றி வைத்த தீபம் போன்று தெட்டத்தெளிவாகவே புலப்படுகின்றது. ஆக, பதிலை ஏற்கனவே எழுதிவைத்துவிட்டு அதற்கேற்ற கேள்விகளைத் தேடவுள்ளது கிழக்கு மாகாண தொல்பொருள்களுக்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி செயலணி.

மேதானந்த தேரர் மட்டுமல்ல ஞானசார தேரரும்கூட கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இதே சாரப்பட ஒரு கருத்தைத் தெரிவித்திருந்தார். 'இலங்கை சிங்களவர்களுக்கு உரிய நாடு. ஒரு தென்னந்தோப்பில் ஊடு பயிர்களாக வாழை, கடுகு என்பவை இருப்பதைப்போன்று சிறுபான்மை மக்கள் இங்கு இருக்கலாம். ஊடு பயிர்கள் இருக்கின்றன என்பதற்காக தென்னந்தோப்பு எவ்வாறு பெயர்மாற்றம் பெறவில்லையோ அதேபோன்று சிறுபான்மை மக்கள் இருக்கின்றனர் என்பதற்காக இது சிங்களவர்களின் நாடு அல்ல என்று ஆகிவிடாது' என்றும் ஞானசாரர் குறிப்பிட்டிருந்தார். ஆக, சிறுபான்மை மக்களின் இருப்புக்கு இங்கு இடமில்லை என்பதில் இத்தகைய தேரர்கள் பலர் உறுதியாக உள்ளனர். இனவாதத்தை வெளிப்படுத்தும் தேரர்களுக்கு இலங்கையில் பஞ்சமே இல்லை. இந்தப் பட்டியல் நீண்டு செல்லும். இத்தகைய தேரர்களின் இனவாதக் கருத்துத்தான் இலங்கையின் தலைவிதியை பல தடவைகள் தீர்மானித்துள்ளது. தற்போது தீர்மானித்துக் கொண்டிருக்கின்றது. இனியும் தீர்மானிக்கும்.

இத்தகையவர்களின் இதயங்களில் எழும் பரிவும், இயல்பான மாற்றமும்தான் இலங்கையில் சிறுபான்மை மக்களின் இருப்பைப் பாதுகாக்கும். அந்த் மாற்றம் நிகழாத வரையில் எம்மவர்களுக்கு இங்கு இருப்பென்பது கேள்விக்குறி.

# ஏற்றுமதிப் பொருளாதாரத்தை வென்ற நாடாக இலங்கை மாறும்

### அமைச்சர் விமல் நம்பிக்கை



**கொழும்பு, செப்.6**

**எதிர்காலத்தில் இறக்குமதிகளால் நிறைந்த நாடு என்பதற்கு அப்பால் ஏற்றுமதிப் பொருளாதாரத்தை வெற்றி கொண்ட நாடாக இலங்கையை மாற்றியமைக்க வேண்டும்.**

அதற்குத் தேவையான தொழில்நுட்ப வசதிகளையும் மனித வளத்தையும் விருத்தி செய்வது உட்பட ஏனைய காரணிகள் குறித்து அரசு கவனம் செலுத்தவுள்ளது என்று கைத்தொழில்துறை அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

கைத்தொழில் அமைச்சில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

கொரோனாவுக்கு முன்னர் தேசிய ஆடை உற்பத்தியாளர்களுடன் நடத்திய சந்திப்பின்போது அவர்களது பிரச்சினைகள் குறித்து ஆழமாக ஆராயப்பட்டதுடன், அவர்களின் ஆடைகளை ஏற்றுமதி செய்வதற்குள்ள தடைகள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது. இதற்காக 'சர்வதேச ரீதியான சாதாரண சந்தை வாய்ப்புகள் என்ற தொனிப்பொருளில் இவர்களுக்கு சர்வதேச சந்தை வாய்ப்புகள் மற்றும் ஏற்றுமதி தொடர்பான விழிப்புணர்வுகளை ஏற்படுத்தத்திட்டமிட்டிருந்தோம்.

மக்களுடைய அரசு என்ற அடிப்படையில் மக்களுக்கான பணிகளைச் செய்வது எமது பொறுப்பு - என்றார். (ப-இ)

## அரச சார்பற்ற நிறுவனங்களை கட்டுப்படுத்த புதிய சட்டம்

கொழும்பு, செப்.6

இலங்கையின் தேசிய பாதுகாப்பு மற்றும் அரசியல் விவகாரங்களில் நேரடியாகத் தலையிட்டுள்ள அரசசார்பற்ற நிறுவனங்களைக் கட்டுப்படுத்துவதற்காக புதிய சட்டம் ஒன்றைக் கொண்டுவர அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதற்கான புதிய சட்ட வரைவை உருவாக்க அரசாங்கம் கலாநிதி சுசந்த குணதிலக்கவை நியமித்துள்ளது. இலங்கையில் உள்ள அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு வருடாந்தம் 36 பில்லியன் நிதி கிடைப்பதாகவும் அவற்றை வழங்கும் நாடுகள் தொடர்பான தகவல்கள் வெளியாவதில்லை எனவும் கூறப்படுகிறது.

அரசசார்பற்ற நிறுவனங்களில் சில நிறுவனங்கள் அரசியல் கட்சிகளுடன் சம்பந்தப்பட்டவை. இந்த நிறுவனங்கள், அரசாங்கங்களைக் கவிழ்க்கவும் தலையீடுகளைச் செய்திருந்ததாக தற்போதைய அரசாங்கத்தின் உயர் மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதனால் அரசசார்பற்ற நிறுவனங்கள் சம்பந்தமாக இந்தியா நிறை வேற்றியுள்ள சட்டத்திற்கு நிகரான சட்டமொன்றை உருவாக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இந்த சட்டவரைவு அடுத்த இரண்டு மாதங்களுக்குள் அமைச்சரவையில் தாக்கல் செய்யப்பட உள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

(ப-இ)

## 485 பேர் நேற்று வீடு திரும்பினர்

கொழும்பு, செப். 6

தனிமைப்படுத்தலை நிறைவு செய்த 485 பேர் நேற்று அவர்களது வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர்.

கல்பிட்டி, பூவரசன்குளம், முல்லைத்தீவு, அநுராதபுரம், நுரைச்சோலை மற்றும் பணிச்சங்கேணி ஆகிய மத்திய நிலையங்களில் தனிமைப்படுத்தலை வெற்றிகரமாக நிறைவு செய்தவர்களே நேற்று வீடு திரும்பினர். அதேவேளை நேற்றுக் காலை வரை புதிதாக 4 கொரோனாத் தொற்றாளர்கள் நாட்டில் அடையாளம் காணப்பட்டனர். இந்தியா மற்றும் பிலிப்பைன்சிலிருந்து நாட்டுக்கு வருகைதந்த நிலையில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்தவர்களே் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ப)

# 20 ஆவது திருத்தத்தை ஆராய்ந்த பின்னரே நிறைவேற்ற வேண்டும்

### மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் வலியுறுத்து

கொழும்பு, செப்.6

நாட்டின் ஜனநாயகம், சட்டத்தின் ஆட்சி மற்றும் மக்களின் இறையாண்மை ஆகிய விடயங்களில் தாக்கங்களை ஏற்படுத்தக்கூடிய அரசியலமைப்பின் 20ஆவது திருத்தம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னர் அது விரிவான கலந்துரையாடல்களுக்கும் ஆராய்வுகளுக்கும் உட்படுத்தப்பட வேண்டியது அவசியமாகும் என்று மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

அரசால் முன்மொழியப்பட்டு, வர்த்தமானி அறிவித்தலாக வெளியிடப்பட்டிருக்கும் அரசமைப்பின் 20ஆவது திருத்தத்தின் விளைவாக நாட்டின் அரசமைப்பு ரீதியிலான ஜனநாயகத்தின் மீது ஏற்படவிருக்கும் தாக்கம் குறித்து நாம் வெகுவாக விசனமடைந்திருக்கி ன்றோம். 20ஆவது திருத்தத்தின் மூலம் கடந்த 2015 ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட 19ஆவது திருத்தத்தின் ஊடாக அறிமுகப்படுத்தப்பட்ட ஜனநாயக மறுசீரமைப்புக்கள் நீக்கப்பட்டு, கடந்த 2010ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட 18ஆவது திருத்தத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட தடங்கலற்ற நிறைவேற்றதிகாரம் மீண்டும் உட்புகுத்தப்படுவதை அவதானிக்க முடிகின்றது. எனினும் 20வது திருத்தத்தில் முன்மொழியப்பட்டுள்ள ஏனைய மாற்றங்கள் அதிகாரங்கள், சட்டத்தின் ஆட்சி, அடிப்படை சுதந்திரம் ஆகியவற்றைப் பரவலாக்கம் செய்வதை வெகுவாக வலுவிழக்கச்செய்யும் என்றுள்ளது. (ப-இ)

# உறவுகளின் போராட்டத்துக்கு அரசே பதிலளிக்க வேண்டும்

## மக்கள் மறுமலர்ச்சி மன்றம் வலியுறுத்து

**யாழ்ப்பாணம், செப். 6**

**காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்துமாறு வீதியில் போராடும் உறவுகளின் போராட்டம் நியாயமானதே. அந்தப் போராட்டத்துக்கு அரசு தகுந்த பதிலை வழங்கவேண்டும் என்று மக்கள் மறுமலர்ச்சி மன்றத்தின் யாழ். கிளிநொச்சி மாவட்டங்களின் தலைவர் மௌலவி சுபியான் வலியுறுத்தியுள்ளார்.**

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வடக்கு - கிழக்கைச் சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தாங்கள் நேரடியாக இலங்கை இராணுவத்திடம் ஒப்படைத்த அல்லது சரணடைந்த தங்களது பிள்ளைகள் எங்கே என்று கேட்டு கடந்த 10 வருடங்களாகப் போராடி வருகின்றனர். இவர்களின் போராட்டத்தில் நியாயம் உண்டு. இதற்கு ஒரு நீதி வேண்டும். இது தொடர்பாக ஆட்சியாளர்கள் ஆராய்ந்து பார்ப்போம் அல்லது அவ்வாறு தங்களிடம் யாருமில்லை என்ற விதத்திலேயே பதிலளித்து வருகின்றனர். இவர்களும் தொடர்ந்து போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர் உள்நாட்டுப் போரால் காணாமல் போன இந்த நாட்டின் பிரஜைகள் எவராக இருந்தாலும் அரசாங்கம் இவர்களது பிரச்சினைகளுக்குத் தேவையான தீர்வை வழங்கி இப்பிரச்சினைகள், இக்கோஷங்கள், போராட்டங்கள் தொடராமல் முடிவுக்கு கொண்டுவர வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றோம்-என்றுள்ளது. (ப)

# கிழக்கு ஜனாதிபதி செயலணியில் இணையத் தயாராக இருக்கின்றேன்

## கூறுகின்றார் சமுதாய மருத்துவ நிபுணர்

கிழக்கு தொல்பொருள்களை அடையாளம் காணும் ஜனாதிபதி செயலணியில் இணைந்து செயற்பட இலங்கையில் உள்ள தமிழ் புத்தி ஜீவிகள் ஆர்வம் காட்டாதன் காரணமாக தமிழர்களை நியமிப்பது சவாலாக உள்ளதென அமைச்சர் டக்ளஸ் தேவானந்த தெரிவித்துள்ளார். எனினும், அந்தச் செயலணியில் இணைய நான் தயாராக இருக்கின்றேன் என்று சமுதாய மருத்துவ நிபுணர் முரளி வல்லிபுரநாதன் தெரிவித்துள்ளார்.

கிழக்கு தொல்பொருள் ஜனாதிபதி செயலணியில் இணைந்து செயற்பட இலங்கையில் உள்ள தமிழ் புத்தி ஜீவிகள் ஆர்வம் காட்டாதன் காரணமாக தமிழர்களை நியமனம் செய்வது சவாலாக இருக்கிறது என்று அரசாங்க அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அறிவித்து இருப்பதாக ஊடகங்கள் மூலம் தெரிந்துகொண்டேன்.

எனவே நான் இந்த நியமனத்தை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன் என்பதை வெளிப்படையாக அறிவிக்கிறேன். தொல்பொருளியல் துறையை நான் சாராதவனாக இருந்த போதிலும், ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவில் தொல்பொருளியல் துறை சாராத மகப்பேற்றியல் மருத்துவ நிபுணர் கபில குணவர்தன உட்பட பலர் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ள நிலையில் சமு தாய மருத்துவ நிபுணராக கடமையாற்றிவரும் எனக்கு ஒரு துறை சார் நிபுணராக செயலணியில் கடமையாற்ற முழுமையான தகுதி இருக்கிறது என்பதனையும் கூறவிரும்புகின்றேன் என்று குறிப்பிட்டுள்ளார். (கு-214)

# எக்னெலிகொட தொடர்பான வழக்கு விசாரணை ஆரம்பம்

கொழும்பு, செப்.6

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமல் ஆக்கப்பட்ட வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக விசாரணைகளை மேற்கொள்ளும் மூவரடங்கிய விசேட மேல் நீதிமன்ற வழக்கின் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட் டுள்ளது.



எக்னெலிகொடவின் மனைவியான மனித உரிமை செயற்பாட்டாளர் சந்தியா எக்னெலிகொட, கடந்த ஓகஸ்ட் 2ஆம் திகதி விசாரணைக்கு அழைக்கப்பட்டநிலையில், நாளையதினமும் அவரிடம் விசாரணைகள் இடம்பெறவுள்ளன.

பிரகீத் எக்னெலிகொடவுக்கு நீதி கோரி, கடந்த பத்து வருடங்களுக்கும் மேலாக போராட்டத்தில் ஈடுபட்டுள்ள விருது வென்ற மனித உரிமைச் செயற்பாட்டாளர் சந்தியா எக்னெலிகொட, தாம் விசாரணைக்கு அழைக்கப்பட்ட தினம், தனக்கு ஆறுதலான நாள் எனக் குறிப்பிட் டுள்ளார்.

"பிரகீத் இல்லாமல் போனதன் பின்னரான 3,873 நாள்களில் மிகவும் திருப்திகரமான நாளாக ஓகஸ்ட் 2ஆம் திகதி அமைந்தது. ஏனெனில் அவர் காணாமல் போனமை தொடர்பாக இலங்கை அரசு தாக்கல் செய்த வழக்கில் நான் முதல் சாட்சியாக அழைக் கப்பட்டேன். பழைய உண்மையில் புதிய வெளிச்சத்தை வெளிப்படுத்த எனக்கு வாய்ப்பளித்த அனைவருக்கும் நன்றி." என ருவிட்டர் தளத்தில் சந்தியா எக்னெலிகொட பதிவிட்டுள்ளார். (ப)

# பெரமுனவை அசைக்கவே முடியாது

## ஜோன் அமரதுங்க தெரிவிப்பு

கொழும்பு, செப்.6

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தை இன்னமும் பத்து ஆண்டுகளுக்கு எவராலும் அசைக்க முடியாது என நம்புவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

பலருக்கு தொழில் வாய்ப்புகளை வழங்கி, பொதுஜன பெரமுன மேற்கொண்டு வரும் சேவையும், அரசாங்கத்தின் செயற்பாடுகள் காரணமாகவும் நாட்டு மக்கள் தெளிவாக இருக்கின்றனர். இதனால், அரசாங்கத்தை பத்து ஆண்டுகளுக்கு அசைக்க முடியாது. நல்லாட்சி அரசாங்கம் மக்களின் பிரச்சினைகளைத் தேடி அறிந்து, அர்ப்பணிப்புடன் செயற்பட்டிருந்தால், ஐக்கிய தேசியக் கட்சிக்கு தற்போது இந்த நிலைமை ஏற்பட்டிருக்காது என்றார். (ப)

# தடைசெய்யப்பட்ட பொருள்கள் வெலிக்கடைச் சிறையில் மீட்பு

கொழும்பு, செப்.6

வெலிக்கடை சிறைச்சாலைக்குள் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையில் தடைசெய்யப்பட்ட பல பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சிறைச்சாலைப் புலனாய்வு அதிகாரிகளால் நேற்று முன்தினம் குறித்த சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. சிறைச்சாலையின் மகளிர் பிரிவில் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையில் 13 கையடக்கத் தொலைபேசிகள் , 4 சிம் அட்டைகள் 150 மின்கலங்கள் என்பவை கைப்பற்றப்பட்டுள்ளன என்று சிறைச் சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. சிறைச்சாலைகளுக்குள் போதைப் பொருள் பாவனை மற்றும் கடத்தல் சம்பவங்களைத் தடுப்பதற்காக புலனாய்வு அதிகாரிகளின் ஆலோசனைக்கு அமைய சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ப)

# 130 ரயில்களே சேவையில்

## ரயில் இயந்திர சாரதிகள் சங்கம் சுட்டிக்காட்டு

கொழும்பு, செப்.6

ரயில் திணைக்களத்தின் இயந்திரங்கள் மற்றும் வேகக் கட்டுப்பாட்டுடன் 300 ரயில்கள் காணப்பட்டாலும், அவற்றில் 130 ரயில்கள் மாத்திரமே சேவையில் ஈடுபட்டு வருகின்றன என்று ரயில் இயந்திரச் சாரதிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதன்படி, சுமார் 150 இயந்திரங்கள் தற்போது பாவனையின்றிக் காணப்படுகின்றன என்று அதன் செயலாளர் இந்திக தொடங்கொட தெரிவித்துள்ளார்.

ரயில் திணைக்களத்தில் இவ்வாறான வளங்கள் காணப்பட்டபோதிலும் அவைகள் முறையாகச் செயற்படுத்தப்படாமைக்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளே பொறுப்பு எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ப)

# அரசமைப்பு வரைபுக் குழுவில் எமது பங்களிப்பும் அவசியம்


## த.மு.கூ தலைவர் ஜனாதிபதியிடம் வலியுறுத்து

கொழும்பு, செப்.6

புதிய அரசமைப்பு வரைபுக் குழுவில் மலையகத் தமிழ்ப் பிரதிநிதி ஒருவரையும் நியமிக்குமாறு, தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக் ஷவை எழுத்து மூலம் கோரியுள்ளார்.

"புதிய அரசமைப்பை வரைவதற்கான ஒரு குழுவை ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா தலைமையில் நீங்கள் நியமித்துள்ளீர்கள். இதை நாங்கள் சாதகமாகவே பார்க்கிறோம். இதன் மூலம் இந்நாட்டில் நிலவி வரும் அரசியல், சமூக, கலாசார, பொருளாதார பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வுகளுக்கான வழிகளை புதிய அரசமைப்பு ஏற்படுத்திட வேண்டும் என நாம் விரும்புகிறோம். அந்தக் குழுவில் இந்நாட்டில் வாழும் இந்திய வம்சாவளி மலையக மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யக்கூடிய சமீபத்திய பிரதிநிதி இடம்பெறாமை எமக்குக் கவலை தருகிறது. இது தற்செயலாக ஏற்பட்ட இடைவெளி என நாம் கருதுகின்றோம். எனவே தங்களால் நியமிக்கப்பட்டுள்ள குழுவில், சமீபத்திய இந்திய வம்சாவளி மலையக மக்களைப் பிரதிநிதித்துவம் செய்ய தகுதி வாய்ந்த ஒரு பிரதிநிதியை நியமிக்கும்படி வேண்டுகிறேன்" என்று அவர் மேலும் கோரியுள்ளார். (ப)

## மரண அறிவித்தல்



### தேவராசா ரதீஸ்வரன்

**தோற்றம்: 22.11.1995** **மறைவு 04.09.2020**

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தேவராசா ரதீஸ்வரன் கடந்த (04.09.2020) வெள்ளிக்கிழமை அகாலமரணமடைந்து விட்டார்.

அன்னார் தேவராசா மல்லிகாதேவி தம்பதியரின் அன்பு மகனும், ரமணன் (இந்தியா), சிந்துஜா (ஆசிரியை- யா/மத்திய கல்லூரி), ரமேஸ், ரவிராஜ் (டுபாய்), ரதீபன், தனுசியா ஆகியோரின் பாசமிகு சகோதரனும், அயசோக் அவர்களின் அன்பு மைத்துனரும், உதேஸ், ஆதிரா ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான இராசையா, செல்லம்மா மற்றும் சின்னன், சின்னம்மா மற்றும் தேவச்சந்திரன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும், தவமணி, பரமேஸ்வரி, மதி ஆகியோரின் பாசமிகு மருமகனும், செல்வராசா, இந்திரராசா, தெய்வேந்திரன், மயூரி (கனடா) ஆகியோரின் பெறாமகனும், ஆனந்தகுமார், ஜெயபாலசிங்கம் (கனடா), கணபதிப்பிள்ளை (கனடா) ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக அவரது இல்லத்தில் வைக்கப்பட்டு, இன்று (06.09.2020) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக கட்டையாலடி இந்து மயானத்துக்கு (கோண்டாவில்) எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**92, கலாசாலை வீதி,**
**திருநெல்வேலி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 921 5572**

# பொலிஸ் சேவை மறுசீரமைக்க பரிந்துரைகள் ஆராயப்படும்

*சமல் ராஜபக்ஷ தெரிவிப்பு*



கொழும்பு, செப்.6


முன்னாள் பொலிஸ் மா அதிபர் இலங்ககோனினால் சமர்பிக்கப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகள் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பின்னர் பொலிஸ் சேவையை மறுசீரமைப்பதற்கு குறித்த பரிந்துரைகள் அமைச்சினால் அமுல்படுத்தப்படவுள்ளன என்று நீர்ப்பாசன அமைச்சர் சமல் ராஜபக் ஷ தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள பொலிஸ் தலைமையகத்துக்குச் சென்றபோதே அமைச்சர் சமல்ராஜபக் ஷ,இதனைத் தெரிவித்துள்ளார்.

மறுசீரமைப்புக்களை அறிமுகப்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் தமது சொந்தக் கருத்துக்களை வழங்குமாறு பொலிஸ் அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டதுடன்,பொலிஸ் சேவையை மேலும் வினைத்திறன் கொண்டதாக மாற்றி அமைக்க அவர்களது கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளும் வகையில் தொடர்ச்சியாக சந்திக்க திட்டமிட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ப-இ)

## மரண அறிவித்தல்

### சங்கரப்பிள்ளை (தம்பாபிள்ளை) சண்முகநாதன்



**தோற்றம்** **மறைவு**
**15.05.1938** **05.09.2020**

மாரிதோட்டம், தாவடி வடக்கைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை (தம்பாபிள்ளை) சண்முகநாதன் நேற்று (05.09.2020) இறை வனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை (தம்பாபிள்ளை) - கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மகா லட்சுமி அம்மா, கமலேஸ்வரி (லோகேஸ்), வேலும் மயிலும் (வடிவேலு) ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான கனகராசா - பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், அருந்தவமலரின் பாசமிகு கணவரும், கலைமதி (கொழும்பு), நவநீசன் (நவநீதன்- ஆசிரியர் - யா/ உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்), கஜேந்தினி (ஆசிரியர் -யா/ வேலணை மத்திய கல்லூரி), ஆகியோரின் அன்புத் தந்தையும், நந்தகுமார் (மஸ்கன் கொழும்பு), சரிதா (ஆசிரியர் - யா/ அச்செழு மெ.மி.த.க. பாடசாலை ஆசிரிய மாணவி - 2 ஆம் வருடம் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை) ஆகியோரின் பாசமிகு மாமனும், லோஜன், பவகீர்த், பவஜித் ஆகியோரின் பேரனும், சாந்த குமாரி (தேவி), இரசவரோதயம், ஜெயக்குமாரி (கிளி), சிவபாலு ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.09.2020) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது கலட்டி ஒழுங்கை கோண்டாவில் மேற்கில் அமைந்துள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் : குடும்பத்தினர்**

**077 767 2093 077 899 9249**

## மரண அறிவித்தல்

**பிறப்பு** 04 . 09 . 1922



**மறைவு** 05 . 09 . 2020

### திருமதி நடராசா நாகம்மா

(ஓய்வுபெற்ற ஆசிரியை -
யா/சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாலயம்)

சுழிபுரத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடராசா நாகம்மா (ஓய்வுபெற்ற ஆசிரியை-யா/சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாலயம்) நேற்று (05.09.2020) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சதாசிவம் நடராசாவின் அன்பு மனைவியும், சிறிதரன் (ஆஸ்திரேலியா), கலாராணி (ஆஸ்திரேலியா), சித்திரா, சிறீகாந்தன் (ஆஸ்திரேலியா), லலிதா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற செல்லம்மா ரீச்சர், இரட்ணவேலு ஆகியோரின் சகோதரியும், பூபாலசிங்கத்தின் (ஓய்வுபெற்ற தபால் அதிபர்) உடன் பிறவா சகோதரியும், சுந்தரம் பிள்ளையின் (ஓய்வுபெற்ற விரிவுரையாளர்) மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.09.2020) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் திருவடிநிலை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு, தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குகதாசன் மாஸ்ரர் - சுழிபுரம்.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



**தோற்றம் : 30.06.1943** **மறைவு : 06.08.2020**

**காலஞ்சென்ற தவில் மாமேதை**
**NR சின்னராஜா அவர்களின் துணைவியார்**

### அமரர் இராஜேஸ்வரி சின்னராஜா

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (06.09.2020) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அமரர் அமரத்துவம் அடைந்த நேரம் சகல வழிகளிலும் உறுதுணை புரிந்து அஞ்சலி செலுத்திய உற்றார், உறவினர், சகல நண்பர்கள் மற்றும் கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள் பதாகைகள் வெளியிட்டோருக்கும் மற்றும் தேவையான உதவிகளைச் சேவையாக வழங்கியோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**கந்தசாமி கோயில் வீதி,**
**இணுவில் மேற்கு,**
**இணுவில்.**

**குடும்பத்தினர்.**

# புதிய அரசமைப்புக் குழுவில் மலையகத்துக்கும் முன்னுரிமை

## இராதாகிருஸ்ணன் கோரிக்கை

ஹற்றன்,செப்.6

**புதிய அரசமைப்பைக் கொண்டுவருவதற்கு அரசு, முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. அதற்காக ஒன்பது பேர் கொண்ட குழுவை நியமிக்கவுள்ளது. இந்தக் குழுவில் மலையக மக்களைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற ஒருவரையும் நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்தார்.**

டிக்கோயா நகர சபை மண்டபத்தில் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திய டைந்த மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு நேற்று சனிக்கிழமை நடைபெற்றது.



அதில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

இந்த நாட்டில் வடக்குகிழக்கு தமிழர்கள், மலையகத் தமிழர்கள் என இரண்டு பிரிவுகளான தமிழர்கள் வாழ்கின்றனர்.

அவர்களுடைய பிரச்சினைகள் வெவ்வேறானவை.

எனவே இவை இரண்டையும் தனித்தனியாக கையாள வேண்டும். மலையக மக்களுடைய பிரச்சினைகளை அடையாளப்படுத்த வேண்டுமாக இருந்தால், அவர்களுடைய பிரதிநிதித்துவம் கட்டாயமானதாகும். இதனை அரசு புரிந்துகொண்டு மலையக மக்களின் பிரதிநிதி ஒருவரையும் அரசமைப்புக்குழுவில் நியமிக்க வேண்டும்.

இந்த நாட்டை அபிவிருத்தி செய்து அனைத்து மக்களும் சகோதரத்துவத்துடன் வாழக்கூடிய ஒரு நிலைமையை அரசு உருவாக்குமானால், அதற்கு நாங்கள் முழுமையாக ஒத்துழைப்பு வழங்கத் தயாராக இருக்கின்றோம்.

புதிதாக கொண்டுவரப்படுகின்ற 20 ஆவது அரசமைப்பு சீர்திருத்தத்தில் இரட்டை பிரஜா உரிமை தொடர்பாக பேசப்படுகின்றது.

இந்த நாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டுமாக இருந்தால், திறமையானவர்களை இணைத்துக் கொள்ள வேண்டும்.

நாம் திறமையானவர்களை ஒதுக்கி வைத்து, இந்த நாட்டை அபிவிருத்திசெய்ய முடியாது.

உலகளாவிய ரீதியில் ஏற்பட்டுள்ள கொவிட் தொற்று காரணமாக நாட்டில் பொருளாதாரப் பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

அதனைச் சீர்செய்ய வேண்டிய பொறுப்பு அரசிடமே இருக்கின்றது. அதற்காக அனைவரையும் இணைத்துக்கொண்டு செயற்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். என்றார். (க)

## குப்பை கொட்டியோருக்கு எதிராக வழக்குகள் பதிவு

சாவகச்சேரி செப், 6

வீதியோரங்களில் தரம் பிரிக்காத நிலையில் குப்பைகளைக் கொட்டிய குடியிருப்பாளர்களுக்கு எதிராக சாவகச்சேரி நகர சபையின் சுகாதாரப் பிரிவால் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன

செப்ரம்பர் முதலாம் திகதி தொடக்கம் உக்கக்கூடிய மற்றும் உக்காத கழிவுகளை தரம் பிரித்து வீதியோரங்களில் அல்லது வளவுக்குள் வைத்திருந்து குப்பை அகற்றும் வாகனம் வரும் போது கையளிக்குமாறு சபையால் அறிவிக்கப்பட்டிருந்தது.



இதன் பிரகாரம் சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 90 விதமான வரியிறுப்பாளர்கள் சபையின் அறிவித்தலை ஏற்று கழிவுகளை தரம் பிரித்து வழங்குகின்றனர்.

அறிவித்தலை மீறி தரம் பிரிக்காமல் வீதியோரங்க ளில் கொட்டப் படும் அல்லது உரப்பைகளில் வைக்கப்படும் கழிவுகளை வாகனங்களில் எடுத்துச் செல்வதில்லை எனவும், அவ்வாறு ஒத்துழைக்காத வரியிறுப்பாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்றும் சுகாதார பிரிவினர் தெரிவித்துள்ளனர். (ஐ-9)

## மணல் ஒழுங்கைக்கு ஒளியூட்டக் கோரிக்கை

சாவகச்சேரி,செப். 6

சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட மிருசுவில் ஆயத்தடிப் பிள்ளையார் கோவிலுக்கு முன்பாக உள்ள மணல் ஒழுங்கைக்கு வீதி விளக்குகள் பொருத்தித் தருமாறு அப் பகுதியில் வதியும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஆலய தரிசனத்துக்கு வருகின்ற அடியார்கள் இரவு வேளைகளில் பய அச்சத்துடன் ஒழுங்கையில் செல்வதாகவும், மிருசுவில் மருத்துவமனைக்கு முன்பாக உள்ள வீதியிலிருந்து பிரிந்து கோவிலுக்குச் செல்லும் மணல் ஒழுங்கைக்கு வீதி மின்விளக்கு பொருத்தித் தருமாறும் கேட்டுள்ளனர்.

இது தொடர்பாக பலதடவைகள் உரிய அதிகாரிகள், அரசியல்வாதிகள் போன்றோரிடம் முறையிட்டும் பயன் கிடைக்கவில்லை எனவும் அவர்கள் தெரிவித்தனர். (ஐ-9)



வடமராட்சி கிழக்கின் கரையோர வீதியான மாமுனை தொடக்கம் கட்டைக்காடு வரையான 18 கிலோ மீற்றர் வீதியின் சீரமைப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தற்போது இந்த வீதியின் ஆரம்பப் பணிகள் கட்டைக்காட்டிலிருந்து வெற்றிலைக்கேணி கோரியடி வரைக்கும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. (ஐ-70)

## உரமானியத்துக்கு டோக்கன் வழங்கல்

சாவகச்சேரி,செப். 6

தென்மராட்சி தெற்கு மறவன்புலவு கமக்கார அமைப்புக்கு உட்பட்ட விவசாயிகளுக்கு மானிய உரவகைகள் பெறுவதற்கான டோக்கன்கள் வழங்கப்படவுள்ளன.

நாளை திங்கட்கிழமை மறவன்புலவு பொது நோக்கு மண்டபத்திலும்,நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை சாவகச்சேரியில் உள்ள முன்னாள் தலைவர் சி. திருஞானசம்பந்தரின் இல்லத்திலும் வைத்து இவை வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

✦ ✦ ✦ ✦

சாவகச்சேரி,செப். 6

தென்மராட்சி தெற்கு தனங்களப்பு கமக்கார அமைப்புக்கு உட்பட்ட விவசாயிகளுக்கு மானிய உர வகைகள் பெறுவதற்கான டோக்கன்கள் வழங்கப்படவுள்ளன.

எதிர்வரும் 9 ஆம் ,10 ஆம் திகதிகளில் சாவகச்சேரி தபால் நிலைய வீதியில் உள்ள வ.சதானந்தனின் இல்லத்தில் வைத்து டோக்கன்கள் வழங்கப்படும் என்று அமைப்பின் செயலாளர் அறிவித்துள்ளார் . (ஐ-9)

## மாட்டுவண்டிச் சவாரி

கிளிநொச்சி, செப்.6

மாபெரும் மாட்டுவண்டிச் சவாரி போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை மதியம் ஒரு மணிக்கு வட்டக்கச்சி கலைவாணி சவாரித்திடலில் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட சவாரிச் சங்கத்தின் ஒழுங்குபடுத்திலில் வட்டக்கச்சி இராமநாதபுரம் கல்மடு வர்த்தக சங்கத்தினரின் ஏற்பாட்டில் இந்த மாட்டு வண்டிச் சவாரி நடைபெறவுள்ளது.

இதேவேளை காலை 9 மணிக்கு மோட்டார் வண்டி மெதுவாக ஓடும் போட்டி, உழவியந்திரம் பெட்டி கொழுவும் போட்டி என்பனவும் நடைபெறவுள்ளன் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஐ-21)

## ஒரு மில்லியனில் வீதி விளக்குகள்

சாவகச்சேரி நகரசபையால் ஒரு மில்லியன் ரூபா செலவில் கொள்வனவு செய்யப்பட்ட வீதி விளக்குகளை நகரசபை வட்டாரங்களில் பொருத்தும் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

சபையின் இவ்வருட உத்தேச வரவு செலவுத் திட்டத்தில், சபையின் 11 வட்டாரங்களிலும் வீதி விளக்குகள் பொருத்தப்படவுள்ளன. கொள்வனவு செய்யப்பட்ட 150 மின்விளக்குகளும் 11 வட்டாரங்களில் தலா 13 மின்விளக்குகள் வீதம் பொருத்தப்படவுள்ளன. (ஐ-9)



# நகைகள் திருடி ஓடியவர்கள் கையும் மெய்யுமாக சிக்கினர்

*சாவகச்சேரியில் சம்பவம்*

**சாவகச்சேரி, செப். 6**

**நள்ளிரவில் வீடு புகுந்து தங்க நகைகளைத் திருடினர் என்ற குற்றச்சாட்டில் இரண்டு சிறுவர்கள் துரத்திப் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப் பட்டனர்.**

சம்பவம் சாவகச்சேரி நகரை அண்டிய கண்டுவில் இரண்டாம் ஒழுங்கையில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

இந்த ஒழுங்கையில் அடிக்கடி திருட்டுக்கள் இடம்பெறுகின்றன என்று அந்தப் பகுதியிலுள்ளவர்கள் கூறியுள்ளனர். அதற்காக அங்குள்ளவர்கள் இரவில் விழித்திருப்பதும் வழமையாகிவிட்டது.

இந்த நிலையில் ஓடு பிரித்து உள்நுழைந்த அந்த இருவரும் நகைகளை எடுத்துக்கொண்டு தப்பியோட முயற்சிக்கையில் வீட்டுக்காரர் கூக்குரல் இடவே அயலவர்கள் வந்துவிட்டனர். அனைவரும் சேர்ந்து இருவரையும் துரத்திப் பிடித்து முறையான கவனிப்பின் பின்னர் சாவகச்சேரி பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

சாவகச்சேரி வடக்கைச் சேர்ந்த16 வயதுடைய இருவரும் மருத்துவ பரிசோதனையின் பின்னர் நீதிவானிடம் முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-9)

## போதைப்பொருள்கள் தொடர்பு: இந்த வருடம் 48,000 பேர் கைது

கொழும்பு, செப். 6

இலங்கையில் இந்தவருடம் மட்டும் போதைப்பொருள் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் 48 ஆயிரம் குற்றவாளிகள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதுவரை 12 தொன் நிறையுடைய போதைப்பொருள்கள் போதைத்தடுப்புப் பிரிவு பொலிஸாரால் நாட்டின் பல்வேறு இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அதில் ஐஸ், மண்டி, கஞ்சா, போதை ரொபிகள் மற்றும் மருந்துகள் என பல அடங்கியுள்ளன.

போதைப்பொருள் கடத்தலை ஒழிப்பதற்கு ஜனாதிபதி முப்படையினருக்கும் பொலிஸாருக்கும் அதிகாரங்கள் வழங்கியுள்ளார்.

இந்த வருடம் பாதுகாப்பு அதிகாரிகள், சிறைச்சாலை அதிகாரிகள், அரச அதிகாரிகள் உட்படப் பலர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். (த-இ)

## வீதி விபத்தில் பெண் காயம்

சாவகச்சேரி,செப். 6

வீதியில் சென்ற பெண் ஒருவரை அவ்வழியாக வந்த வாகனம் மோதியது. இதில் மீசாலை வடக்கைச் சேர்ந்த 29 வயது பெண் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்று மதியம் மீசாலை வடக்கில் இடம்பெற்றது. (ஐ-9)



## மரக்கன்றுகள் நட்ட வவுனியா இளைஞர்கள்

வவுனியா, செப். 6

வவுனியா நெளுக்குளம் இளைஞர்கள் வவுனியா நெளுக்குளம் இராசேந்திரகுளம் வரையிலான பகுதியில் மரநடுகையில் நேற்று ஈடுபட்டிருந்தனர்.

இதன் ஆரம்ப நிகழ்வு நெளுக்குளம் சந்தியில் நேற்றுமுற்பகல் 10.30 அளவில் நடைபெற்றது.

நிகழ்வில் வவுனியா பிரதேச செயலாளர் ந.கமலதாசன், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை தவிசாளர் து.நடராஜசிங்கம், கிராம அலுவலர் சாந்தரூபன், வவுனியா மருத்துவமனை மருத்துவர், இளைஞர்கள், அரசியல் பிரமுகர்கள் மற்றும் பொதுமக்கள் பலரும் இதில் கலந்துகொண்டிருந்தனர். (த-18)

## புனர்வாழ்வு நிலையம் வடக்குக்கு வேண்டும்

*கோருகின்றார் மருத்துவமனைப் பணிப்பாளர்*

யாழ்ப்பாணம், செப். 6

வடக்கில் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்களை மீட்டெடுப்பதற்கு புனர்வாழ்வு நிலையம் அவசியம் என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

வடக்கில் போதைவஸ்து பாவனை தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரைக்கும் போதை வஸ்து பாவனை அதிகரித்துக் காணப்படுகின்றது. அதனை உடனடியாகக் கட்டுப்படுத்தவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

வடபகுதிக்கு கொண்டுவரப்படுகின்ற கஞ்சா ஹெரோய்ன் போன்ற பொருள்களை தடைசெய்ய வேண்டும். அதேபோல் அரசின் பல வகையான கட்டுப்பாட்டு நிலைமைகளை மேலும் கட்டுக் கோப்புக்குள் கொண்டுவரும்படி கேட்டிருக்கிறோம்.

போதைவஸ்துக்கு அடிமையானவர்களை உடனடியாக புனர்வாழ்வளித்து அவர்களை மீட்க வேண்டும். ஏனெனில், ஹெரோய்ன் போன்ற போதை வஸ்தை பாவிப்பவர்கள் அவற்றை தினசரி பாவிக்க வேண்டும் என்ற நிலைக்கு தள்ளப்படுகின்றார்கள். அதாவது அந்த போதைவஸ்துக்கு அடிமையானவர்கள் அவ்வாறானவர்களை புனர்வாழ்வளித்து சிகிச்சை வழங்குவதற்கு பொருத்தமான நிலையம் வடபகுதியில் இல்லை.

ஆகவே வட பகுதியில் புனர்வாழ்வு நிலையம் ஒன்றை அமைக்க வேண்டும் என நாங்கள் ஏற்கனவே கோரிக்கை விடுத்திருக்கின்றோம். இதற்கான முயற்சியிலும் ஈடுபடுகின்றோம்.

புனர்வாழ்வு நிலையம் இன்றி குடும்ப உறுப்பினர்களும் சமுதாயமும் பல சிக்கல்களையும் சவால்களையும் எதிர்நோக்குகின்றன. குறிப்பாக போதைப் பொருளுக்கு அடிமையானவர்கள், அந்த அடிமை நிலையிலிருப்பவர்கள் தொடர்ச்சியாக அந்த போதைப்பொருளை நாடிச் செல்வர். தவிர பல்வேறு குற்றச் செயல்களிலும் ஈடுபட வாய்ப்புக்கள் அதிகம் காணப்படுகின்றன.

பணம் கையில் இல்லாதவிடத்தில் அவர் பல்வேறுபட்ட குற்றச் செயல்களில் ஈடுபடுவார். அதாவது களவு அல்லது வேறு ஏதாவது செயற்பாட்டில் ஈடுபட்டு பணத்தைப் பெற்று தேவையான போதைப்பொருளைக் கொள்வனவு செய்ய முயற்சிப்பார்- என்றார்.

இதேவேளை, சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்களுக்கு சிகிச்சை வழங்கும் பிரிவு உள்ளது குறிப்பிடத்தக்கது. (த-111)

## புதையல் தோண்ட முற்பட்டனரென பொலிஸ் உட்பட எண்மர் கைது

வவுனியா, செப். 6



வவுனியா பூவரசங்குளம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அரபாநகர் பகுதியில் புதையல் தோண்ட முற்பட்டனர் என்ற குற்றச்சாட்டில் 8பேர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பூவரசங்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு, வவுனியா உட்பட பல்வேறு பகுதிகளைச் சேர்ந்தவர்களே கைதுசெய்யப்பட்டுள்ளனர். நிலம் தோண்டுவதற்கு பயன்படும் மண்வெட்டி உட்பட சிலபொருள்களையும், இரண்டு சொகுசு கார்களையும் அவர்களிடமிருந்து கைப்பற்றியுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களுள் ஒருவர் பொலிஸ் அலுவலராக பணிபுரிகின்றார் என்றும் தெரிவித்த பொலிஸார், அவர்கள் அனைவரும் வவுனியா நீதிவான் நீதிமன்றில் இன்று முற்படுத்தப்படுவர் என்று மேலும் தெரிவித்தனர். (த-110)

## இலங்கையை சேர்ந்தவர் தமிழகத்தில் கைதானார்!

மன்னார், செப்.6

இலங்கையில் இருந்து சட்டவிரோதமாக ஊடுருவியிருக்கலாம் என்ற சந்தேகத்தில் தமிழகம், இராமேஸ்வரத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் மன்னாரைச் சேர்ந்த பிரதீப்குமார் பண்டாரநாயக்க (வயது-30) என்பவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தனுஷ்கோடி கடற்கரைப் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இரவு தமிழக கடலோரக் காவல் படையினர் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். இலங்கையில் இருந்து சட்டவிரோதமாக சிலர் இந்தியாவுக்குள் நுழைந்துள்ளனர் என்ற தகவலை அடுத்தே இந்த ரோந்து நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. அப்போது கம்பிப்பாடு கடற்கரையில் சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடிய ஒருவர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

அவர் சிங்கள மொழியில் முன்பின் முரணாக உரையாடியதை அடுத்து கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் தீவிர விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று தமிழகப் பொலிஸார் தெரிவித்தனர். (எ-56)

## தேசிய நிதியில் சீராகின்றன உள்ளூராட்சி சபை வீதிகள்

கொழும்பு, செப். 6

தேசிய நிதியை மாத்திரம் பயன்படுத்தி மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்குரிய வீதிகளை சீரமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மொத்தமாக சுமார் ஓர் இலட்சம் கிலோமீற்றர் நீளமான வீதிகள் சீரமைக்கப்படவுள்ளன என்று பிரதமர் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

சுற்றாடலை பாதுகாக்கும் வகையில் இந்த வீதிகளின் சீரமைப்பு பணிகள் இடம்பெறவுள்ளன என்றும் பொருளாதார புத்தெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அலரி மாளிகையில் விசேட கலந்துரையாடல் இடம்பெற்றதாக பிரதமரின் ஊடகப்பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'சுபீட்சத்தின் நோக்கு' வேலைத்திட்டத்தின் கீழ் இந்த செயற்றிட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

வீதிகளை சீரமைக்கும் பணிகளின்போது இலங்கை மின்சார சபை மற்றும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையினரும் இணைத்துக்கொள்ளப் படவுள்ளனர். என்று தெரிவிக்கப்பட்டது. (த)


# தீப்பற்றிய கப்பலால் எண்ணெய்க் கசிவு அபாயம்

## பாதிப்பு 30 ஆண்டுகள் நீடிக்கும் என எதிர்வுகூறல்

அம்பாறை, செப். 6

**அம்பாறை சங்கமன்கண்டி கடற்பரப்பில், தீ விபத்தை எதிர்கொண்டுள்ள நியூ டய மண்ட் கப்பலில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள எண்ணெய் கசிந்து நாட்டின் கிழக்குக் கரையோரப்பகுதிகளில் படியுமானால் அவற்றில் 60 சதவீதமானவற்றை மாத்திரமே அகற்றக்கூடியதாக இருக்கும் என்று கடற்பாதுகாப்பு அதிகாரசபை சுட்டிக்காட்டியுள்ளது.**

அதுமாத்திரமன்றி, எண்ணெய்க் கசிவால் அந்தப்பகுதிகளில் ஏற்படத்தக்க நச்சுத்தன்மை, மாசடைவு என்பவை முற்றாக நீங்கி அவை பழைய நிலைக்குத் திரும்புவதற்கு 25 முதல் 30 வருடங்கள் ஆகலாம் எனவும் சிலவேளைகளில் அது பழைய நிலைக்குத் திரும்பாமலே போகக்கூடிய வாய்ப்புக்களும் உள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



அம்பாறை, சங்கமன்கண்டி இறங்குதுறையிலிருந்து 38 கடல் மைல் தொலைவுக்கு அப்பால், கடற்பிராந்தி யத்தில் இந்தியா நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த எம்.டி.நியூ டயமன் என்ற கப்பலில் தீப்பரவல் ஏற்பட்டது.

இந்தத் தீப்பரவலைத் தொடர்ந்து கப்பலில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த எண்ணெய் கொள்கலன்களில் கசிவு ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றனவா என்றும் ஆராயப்படுகின்றது. அவ்வாறு கசிவு ஏற்படும் பட்சத்தில் அதனால் ஏற்படக்கூடிய சூழலியல் பாதிப்புக்கள் எத்தகையதாக இருக்கும் என்பது போன்ற பல்வேறு கேள்விகள் தற்போது எழுந்திருக்கின்றன என்று கடற்பாதுகாப்பு அதிகாரசபையின் தலைவர் சட்டத்தரணி தர்ஷனி லஹதபுர தெரிவித்தார்.

"இந்தக் கப்பலில் களஞ்சியப்படுத்தப்பட்டிருக்கும் எண்ணெய் வெளியில் கசிய ஆரம்பிக்குமானால், அது இந்தப் பிராந்தியம் மாத்திரமன்றி முழு உலகமுமே எதிர்கொள்ள நேரிடும் மிகமோசமான சுற்றாடல் மாசடைவாக இருக்கும் என்றே நாம் கருதவேண்டும்.

அந்தளவிற்கு ஏற்படக்கூடிய பாதிப்பு மிகவும் உயர்வானதாக இருக்கலாம். அதேவேளை எண்ணெய் கடற் பிராந்தியத்திற்குள் கசிய ஆரம்பிக்குமானால், அது கட்டுப்படுத்தக்கூடிய நிலையைத் தாண்டிய சூழல் மாசடைவை ஏற்படுத்துவதாகவே அமையும். கப்பலில் இருந்து எண்ணெய் கசிய ஆரம்பிக்குமானால் அதனைத் தடுப்பதற்கோ அல்லது எதிர்கொள்ளத் தயாராகுவதற்கோ எமக்குப் போதியளவு கால அவகாசம் இல்லை.

இந்த எண்ணெய் கடலில் கலக்கும் போது அது கிறீஸ் போன்று மாற்றமடையும். அந்த கிறீஸ் அருகம்பை, நிலாவெளி, காயாங்கேணி, வாகரை, திருகோணமலை ஆகிய பகுதிகளுக்குப் பரவலடையுமாக இருந்தால் அந்தப் பகுதிகளில் சுற்றுலாத்துறை வெகுவாகப் பாதிப்படையும். அருகம்பை என்பது உலகலாவிய ரீதியில் மிகவும் பிரசித்திபெற்ற ஒரு சுற்றுலாத்தளம் ஆகும். என்றும் தெரிவித்துள்ளார். (து)

# இழுத்துச் செல்லப்பட்டது விபத்துக்குள்ளான கப்பல்

அம்பாறை, செப்.6

கிழக்கு கடற்பரப்பில் தீப்பற்றி எரிந்த நியூ டயமண்ட் எண்ணெய்க் கப்பல் இலங்கை கடல் எல்லையிலிருந்து 40 மைல் தூரத்துக்கு இழுத்துச் செல்லப்பட்டுள்ளது என்று கடற்படைப் பேச்சாளர் இந்திக்க டி சில்வா தெரிவித்தார்.

பெரும் கப்பல் மற்றும் 11 டக் ரகக் கப்பல்கள் இதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. தீ விபத்துக்குள்ளான கப்பலின் தற்போதைய நிலவரம் தொடர்பில் ஆராய்வதற்காக விசேட விமானம் ஒன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என்று கடற்படைப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

இதே வேளை இலங்கை விமானப்படைக்குச் சொந்த மான வை12 ரக விமானமே அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என்று விமானப்படை பேச்சாளர் குரூப் கெப்டன் துஷாந்த் விஜயசிங்க தெரிவித்தார். (ப-இ)



# மரக்கடத்தல் வாகனத்தை துரத்திப் பிடித்தது எஸ்.ரி.எவ்.

## தப்பியோடினர் சாரதிகள்

வவுனியா, செப். 6

வவுனியா ஓமந்தை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பாலமோட்டை பகுதியில் சட்டவிரோதமான முறையில் கடத்திச்செல்லப்பட்ட முதிரை மரக்குற்றிகளை பூவரசங்குளம் விசேட அதிரடிப் படையினர் மீட்டுள்ளனர்.

பாலமோட்டை பகுதியில் முதிரை மரங்கள் கடத்தப்படவுள்ளன என்று பூவரசங்குளம் விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்து நேற்று அதிகாலை குறித்த பகுதியில் விசேட அதிரடிப்படையினர் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தனர். அதன்போது மரக்குற்றிகளை ஏற்றிச் சென்ற இரண்டு வாகனங்களை வழி மறித்துள்ளனர். எனினும், வாகனம் நிறுத்தாமல் சென்றதால் அதனை துரத்திச்சென்று, தடை (கல்ரொப்ஸ்) ஏற்படுத்தினர். இதனால் நிலைகுலைந்த சாரதிகள் வாகனங்களை வீதியில் நிறுத்திவிட்டு தப்பி ஓடியுள்ளனர்.

அந்த வாகனத்திலிருந்து 18 முதிரை மரக் குற்றிகள் மீட்கப்பட்டன. அவற்றின் பெறுமதி சுமார் பத்து இலட்சம் ரூபா என்று தெரிவிக்கப்பட்டது. அவற்றைக் கடத்திச்செல்ல பயன்படுத்தப்பட்ட இரண்டு 'கப்' ரக வாகனங்களையும் அவர்கள் மீட்டுள்ளனர். முதிரைக் குற்றிகள் வனவளத்திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்படும் என்று விசேட அதிரடிபடையினர் தெரிவித்தனர். (த-110)

### எண்ணெய்க் கப்பல் விபத்து;

# கடற் சூழலின் பாதிப்பை தடுக்க பிரதமர் பணிப்பு

கொழும்பு, செப்.6

சங்கமன்கண்டி இறங்குதுறையில் தீ விபத்திற்குள்ளாகியுள்ள எண்ணெய் கப்பலினால் கடற் சூழலுக்கு பாதிப்பு ஏற்படுவதைத் தடுப்பதற்குத் தேவையான உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பிரதமர் அறிவுறுத்தியுள்ளார்.

24 மணிநேரமும் செயற்படக்கூடிய ஒரு கூட்டு நடவடிக்கையின் ஊடாக விபத்திற்குள்ளான கப்பலினால் கடல் சூழலுக்கு ஏற்படக்கூடிய பாதிப்பைத் தடுப்பதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுக்குமாறு குறித்த விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் பிரதமர் பணிப்புரை விடுத்துள்ளார்...



குவைத் மீனா அல் அஹமதியா துறைமுகத்திலிருந்து இந்தியாவின் ஒடிசா பிராந்தியத்தின் பெரடிப் துறைமுகம் நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த பனாமா இராஜ்சியத்திற்குச்சொந்தமான எண்ணெய்க் கப்பலில் இலங்கைக்கு 38 கடல் மைல் தொலைவிலுள்ள சங்கமன்கண்டியை அண்மித்த பகுதியில் வைத்து, நேற்று முன்தினம் திடீரென தீப்பரவல் ஏற்பட்டது. குறித்த கப்பலில் 270,000 மெட்ரிக் தொன் கச்சா எண்ணெய் கொண்டு செல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. (ப-இ)

# படைகளுக்கு ஜனாதிபதி நன்றி

கொழும்பு, செப். 6

தங்கள் உயிரைப் பணயம் வைத்து ஆழ்கடல் பரப்பில் தீ விபத்துக்கு உள்ளாகியிருந்த எம்.ரி.நியூ டயமண்ட் கப்பலில் ஏற்பட்டிருந்த தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்குப் பாடுபட்ட இலங்கை கடற்படை, விமானப்படை, இலங்கை துறைமுக அதிகாரசபை மற்றும் இந்திய பாதுகாப்பு பிரிவினருக்கு தமது நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

டுவிட்டர் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவொன்றின் ஊடாகவே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (கு-இ)

# விசேட அமர்வை உடன் கூட்டுங்கள்

## கரைச்சி உறுப்பினர்கள் கடிதம்

கிளிநொச்சி, செப். 6

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையின் ஆளுகைக்குள் வரும் பொதுச் சந்தையின் விடயங்கள் தொடர்பில் ஆராய்வதற்கு விசேட சபை அமர்வை கூட்டுமாறு சமத்துவக் கட்சியின் உறுப்பினர்கள் எழுத்து மூலம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த 25ஆம் திகதி சந்தையில் 38 மரக்கறிக்கடைகள் சீல் வைக்கப்பட்டமை சட்டவிரோதமானது என்று குறிப்பிடும் உறுப்பினர்கள் அதுபற்றிக் கலந்துரையாடவும், சீல் வைக்கப்பட்டமையால் வியாபாரிகளுக்கு ஏற்பட்ட நெருக்கடி மற்றும் சந்தை வர்த்தகர்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள் பற்றியும் சந்தைக்கு வரும் உற்பத்தியாளர்கள் மற்றும் பொதுமக்களின் நலன்கள் தொடர்பிலும் ஆராய்வதற்கே விசேட சபை அமர்வைக் கூட்டுமாறு சமத்துவக் கட்சி உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (கு-214)

# சூலம் குத்தி ஒருவர் காயம்

சாவகச்சேரி, செப். 6

கோவிலில் கலையாடி அருள்வாக்கு சொல்லும் 47 வயது நபர் கால் தடுக்கியதில் அங்கு நடப்பட்டிருந்த சூலத்தின் மீது வீழ்ந்து காயமடைந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தென்மராட்சியிலுள்ள ஒரு கோவிலில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றது. அவர் சாவகச்சேரி மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். (கு-9)

### கொரோனா தொடர்பில்

# அவதானம் குறைந்துள்ளதால் மீண்டும் ஆபத்து நெருங்கலாம்

### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு,செப்.6

**கொரோனா வைரஸ் தொடர்பில் மக்கள் மத்தியில் காணப்பட்ட அவதானம் குறைவடைந்துள்ளது. அதனால் மீண்டும் ஆபத்தை எதிர்கொள்ள நேரிடலாம் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.**

சமூகத்தில் நோய்த் தொற்றாளர்கள் அடையாளம் காணப்படாமையால்,மக்கள் மத்தியில் அவதானம் குறைவடைந்துள்ளது என்று மருத்துவர் பிரசாத் கொலம்பகே சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கொவிட்-19 தொற்றால் இலங்கையில் இதுவரை 12 மரணங்கள் பதிவாகியுள்ளன. நோய்த் தொற்றுப் பரவல் குறைவடைந்துள்ள தால், மக்கள் மத்தியில் அது தொடர்பிலான அக்கறை வீழ்ச்சி கண்டுள்ளது.

இதன் காரணமாக வைரஸ் தொற்று சமூகத்தில் இலகுவாகப் பரவும் தன்மை உள்ளது.

நோய்ப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. எனினும் அவற்றுக்கு மக்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும் பட்சத்திலேயே அவை வெற்றியளிக்கும். இதனால் கொரோனா வைரஸ் தொடர்பில் மக்கள் கூடுதல் விழிப்புணர் வுடன் இருக்க வேண்டும் - என்றார். (க-இ)

## சுகாதார வசதிகளற்ற ரியூசனுக்குப் பூட்டு



பருத்தித்துறை,செப்.6

மாணவர்களுக்கான அடிப்படை சுகாதார வசதிகளை ஏற்படுத்தாத தனியார் கல்வி நிறுவனங்களின் கல்விச் செயற்பாடுகளை உடனடியாக நிறுத்துமாறு சுகாதார பகுதியினர் உத்தரவிட்டனர்.

பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரிப் பிரிவுப் பொது சுகாதாரப் பரிசோதகர்கள், பிரதேசத்தில் இயங்கும் தனியார் கல்வி நிறுவனங்களில் நேற்றுச் சனிக்கிழமை குழுப் பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

இதன்போது மாணவர்களுக்கான அடிப்படை சுகாதாரப் பாதுகாப்பு வசதிகள் மற்றும் கொரோனா தடுப்பு நடைமுறைகளின் கடைப்பிடிப்பு என்பவை பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதில் கொரோனா பாதுகாப்பு நடைமுறைகளை கடைப்பிடிக்காமல், சமூக இடைவெளியின்றியும், கை கழுவும் வசதிகளை ஏற்படுத்தாமலும் பாதுகாப்பற்ற கட்டடத்தில் வகுப்புகளை நடாத்த முயன்ற தனியார் கல்வி நிலையத்தின், கல்விச் செயற்பாடுகளை உடனடியாக நிறுத்துமாறு அறிவுறுத்தப்பட்டது. மாணவர்களுக்கும் இது தொடர்பாகத் தெளிவூட்டப்பட்டது.

பூரண பாதுகாப்பு வசதிகள் இன்றி மீண்டும் இயங்க முற்படும் தனியார் கல்வி நிலையங்களுக்கு எதிராக, சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் சுகாதாரப் பகுதியினர் தெரிவித்துள்ளனர். (க-9)

## விமான நிலையம் திறப்பு மேலும் தாமதமாகலாம்?

கொழும்பு,செப்.6

சுற்றுலாப் பயணிகளுக்காக, கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் திறக்கப்படுவது மேலும் தாமதமாகும் என்று சுற்றுலா அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சுகாதார விதிமுறைகள் இல்லாமல் விமான நிலையத்தை முழுமையாகத் திறக்கக்கூடிய காலத்தை நிச்சயப்படுத்த இயலாது என்று சுற்றுலா அமைச்சின் செயலாளர் எஸ். ஹெட்டியாராச்சி ஆங்கில ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.


இருப்பினும், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் ஒக்ரோபரில் திறக்கப்படும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் சுகாதார அதிகாரிகள் அளித்த அறிவுறுத்தலின் அடிப்படையில், விமான நிலையத்தை வெளிநாட்டினருக்கு முழுமையாகத் திறக்க முடியும் என்று சுற்றுலா அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

எனினும் உலக சுகாதார அமைப்பின் கருத்துப்படி, கொவிட்-19 தொற்று நோயை ஒழிக்க இன்னும் இரண்டு ஆண்டுகள் ஆகும்.

இந்த விடயத்தைக் கவனத்தில் எடுத்துக்கொள்ளும் போது, சுகாதார விதிமுறைகளை விரைவாகத் தளர்த்துவது கடினம்.

அதனால் விமான நிலையத்தைத் திறக்க இரண்டு ஆண்டுகள் செல்லுமா என்றும் சந்தேகம் எழுந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (க-இ)



## வேப்பங்குளம் வீதிக்கு காப்பெற்

வவுனியா,செப்.6

வேப்பங்குளம் 5 ஆம் ஒழுங்கைக்கு காப்பெற் இடும் பணிகள் நேற்றுச் சனிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டன.

முன்னாள் அமைச்சர் றிசாட் பதியூதீன் மற்றும் நகரசபை உறுப்பினர்களான லரீப்,மற்றும் பாரியின் முயற்சியில், ஆர்.ஐ.டி.பி திட்டத்தின் கீழ் குறித்த வீதி புனரமைக்கப்படுகிறது.

9.5 மில்லியன் ரூபா செலவில் வீதிக்குக் காப்பெற் இடும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

ஆரம்ப நிகழ்வில் வீதி அபிவிருத்தித் திணைக்கள உத்தியோகத்தர்கள், நகரசபை உறுப்பினர்களான லரீப் மற்றும் பாரி ஆகியோர் கலந்து கொண்டனர். (க-110)

## இந்தியத்தூதுவர் பந்துல சந்திப்பு

கொழும்பு,செப்.6



இந்தியத்தூதுவர் கோபால் பாக்லே, இலங்கையின் வர்த்தகத் துறை அமைச்சர் பந்துல குணவர்த்தனவைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

சந்திப்பில் வர்த்தகத் துறை அமைச்சராகப் பதவியேற்றமைக்காக இந்தியத் தூதுவர், பந்துல குணவர்தனவுக்கு தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

இரு தரப்பினரும் இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையிலான முதலீடுகள், அடிப்படையிலான உறவுகள் மற்றும் பரஸ்பர நலன்களை அடிப்படையாகக் கொண்ட வர்த்தக நடவடிக்கைகள் தொடர்பாக சந்திப்பின் போது கவனம் செலுத்தினர்.

முதலீடு மற்றும் வர்த்தகம் உள்ளிட்ட துறைகளில் இலங்கையுடனான பொருளாதாரப் பங்குடமையை மேலும் வலுப்படுத்துவதற்கான இந்தியாவின் உறுதிப்பாட்டை தூதுவர் தெளிவுபடுத்தினார்.

தற்போதைய சூழ்நிலையில் இரு தரப்பினருக்கும் இடையிலான வர்த்தக மற்றும் அரச தரப்பினரின் தொடர்புகளை நிலைபேறானதாக மாற்றுவதற்கு டிஜிட்டல் கட்டமைப்பைப் பயன்படுத்த வேண்டியதன் அவசியம் தொடர்பாக தூதுவர் கருத்துக்களை வெளிப்படுத்தினார்.

அந்த அடிப்படையில் இரு நாடுகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வர்த்தக சமூகங்கள் இடையில் குறிப்பிடத்தக்க கலந்துரையாடல்களை நடத்துவதற்குரிய சாத்தியங்களை ஆராய்வதற்கும் இணக்கம் காணப்பட்டது. (க-இ)

## நிலந்த ஹீனடிகல சேவையிலிருந்து ஓய்வு

கொழும்பு,செப்.6



ரியர் அட்மிரல் நிலந்த ஹீனடிகல, 34 ஆண்டுகளுக்கும் மேலான கடற்படை சேவையில் இருந்து நேற்றுமுன்தினத்துடன் ஓய்வு பெற்றுள்ளார்.

கடற்படை பாரம்பரியத்தின்படி, வீதியின் இருபுறமும் மூத்த மற்றும் இளைய கடற்படை வீரர்கள் அணி வகுத்து நின்று அவருக்குப் பிரியாவிடை செலுத்தினர்.

1986 ஆம் ஆண்டில் கடற்படையில் இணைந்து கொண்ட ரியர் அட்மிரல் நிலந்த ஹீனடிகல, தனது பதவிக் காலத்தில் வடக்கு, வட மத்திய மற்றும் தெற்கு கடற்படைக் கட்டளைகளில் துணைத் தள பதியாகவும், கடற்படை நல இயக்குநர், கடற்படை தகவல் தொடர்பு மற்றும் இயக்குநர், பொது சேவைகள் போன்ற மூத்த பதவிகளை வகித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-இ)

## 18 பேருக்கு எதிராக வழக்கு

திருமலை,செப்.6

திருகோணமலை கோமரங்கடவல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சட்டவிரோதச் செயற்பாடுகளில் ஈடுபட்ட 18 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சட்டவிரோதமான முறையில் அனுமதிப்பத்திரம் இல்லாமல் மணல் ஏற்றிச்சென்ற சந்தேகத்தின் பெயரில் ஒருவருக்கும், கஞ்சா மற்றும் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டு வந்த 17 நபர்களுக்கு எதிராகவும் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. (க-இ)



## விசுவமடு கிழக்கு புத்தடி வீதி: செப்பனிடலில் சிக்கல்

முல்லைத்தீவு, செப்.6
முல்லைத்தீவு விசுவமடு கிழக்கு புத்தடி வீதி, மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினரால் செப்பனிடப்படு கின்றது. இந்தச் சங்கத்தினர் பொருத்தமில்லாத கிர வலைப் பரவி செப்பனிட்டுக் கொண்டிருந்தவேளை, அப்பிரதேச மக்கள் மற்றும் பொது அமைப்புக்களைச் சார்ந்த சிலரும் குறித்த வேலையை நிறுத்துமாறு கூறியுள்ளனர்.
இதனால் மாதர் அபிவிருத்தி சங்கத்தினர் தமது பணிக்கு ஒரு தரப்பினர் இடையூறு விளைவிக்கின்றனர் என புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள் ளனர். சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் நிலமையை ஆராய்ந்த வேளை, பொருத்தமற்ற மண ணைப் பரவுவது இனங்காணப்பட்டுள்ளது. இது தொடர்பில் பொலிஸார் கிராமத்தைச் சேர்ந்தவர்களி டம் வினவியபோது வீதிக்கு பொருத்தமற்ற மண்ணை பரவுவதை நாம் இனங்கண்டு உயர் அதிகாரிகளுக்கு கூறியும் அவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்க வில்லை. புதுக்குடியிருப்பு உதவித்திட்டமிடல் பணிப் பாளர் சம்பவ இடத்துக்கு வருகை தந்து மண்ணின் மாதிரியை எடுத்துக்கொண்டு சென்றுள்ளார். உரிய அதிகாரிகள் இதனைக் கவனத்தில் கொண்டு சரியான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்தனர். (ந-222)

## ஒரு வாரத்தில் 10 டெங்கு நோயாளர்

மட்டக்களப்பு, செப்.6
மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்கு நுளம்பு தாக்கம் அதிகரித்து வருகின்ற நிலையில் கடந்த ஒகஸ்ட் 22 ஆம் திகதி தொடக்கம் 28 ஆம் திகதி வரை 10 பேர் டெங்கு நோய்த் தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளனர்.
ஆரையம்பதி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 5 நோயாளர்களும், ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதி காரி பிரிவில் 3 நோயாளர்களும், செங்கலடி மற்றும் களுவாஞ்சிக்குடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு களில் தலா ஒரு நோயாளருமான மொத்தம் 10 பேர் மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்கு நோயாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர். இதனால் ஆரையம்பதி மற்றும் ஓட்டமாவடி பிரதேச மக்கள் சற்று விழிப்புடன் செயற்பட்டு வீடுகளில் தேங்கிக் கிடக்கின்ற குப்பைகள், நீர் தங்கியுள்ள இடங்கள் போன்றவற்றை அகற்றி டெங்கு நுளம்புகள் பரவுவதற்கு இடமளிக்காதவகை யில் சூழலைத் துப்பரவாக வைத்துக்கொள்ளுமாறு மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணி மனையின் டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவுக்கு பொறுப் பான வைத்திய கலாநிதி வே.குண ராஜசேகரம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ந-46)

# தீவிரவாத இயக்க பட்டியலில் இருந்து புலிகளை நீக்குக

### மலேசிய முன்னாள் பிரதமர் வலியுறுத்து



கொழும்பு, செப்.6
தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை தீவிரவாத இயக்கங்களின் பட்டியலில் இருந்து நீக்குமாறு, தமது அமைச்சரவையில் உள்துறை அமைச்சராகப் பொறுப்பு வகித்த மொகிதின் யாசினுக்கு கடிதம் மூலம் வலியுறுத்தி னேன் என மலேசிய முன்னாள் பிரதமர் மகாதீர் மொகமட் தெரிவித்துள்ளார்.

புத்ராஜெயாவில் நடைபெற்ற ஊட கவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறியுள் ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக் கத்தை நான் ஆதரிக்கவில்லை என் றாலும் தீவிரவாத இயக்கங்களின் பட்டியலில் இருந்து அந்த இயக் கத்தை நீக்குவது மலேசியாவுக்கு நல்லது.
ஏனைய நாடுகளைப் போல மலே சியாவும் எந்தவொரு குழுவையும் 'தீவிரவாதிகள்' என சுலபமாக முத் திரை குத்திவிடக் கூடாது.
நான் தமிழீழ விடுதலைப் புலி களை ஆதரிக்கவில்லை. அவர்க ளுடைய பிரச்சினை இலங்கையில் இடம்பெற்ற ஒன்று. மலேசியா வுக்கு அதில் தொடர்பில்லை. அத் துடன், மலேசியாவில் அவர்கள் தவறான செயல்களில் ஈடுபடாத போது அந்த இயக்கத்தின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் எமக்கு கிடையாது. விடு தலைப் புலிகள் இயக்கத்தை இலங்கை அரசே தீவிரவாத இயக் கம் என்று பட்டியலிடாதபோது, மலேசியா ஏன் அந்த இயக்கத்தைத் தீவிரவாத பட்டியலில் வைத்தி ருக்க வேண்டும்.
இன்றைய மலேசியப் பிரதமரும் அண்மையில் ஆட்சி மாற்றம் நிகழ்ந்தவரை உள்துறை அமைச் சராக இருந்தவருமான மொகிதீன் யாசினுக்கு எழுதிய கடிதத்தில், புலிகள் இயக்கத்தை இன்னமும் தீவிரவாத பட்டியலில் வைத்திருப்ப தற்கான காரணம் ஏதும் இருப்பதா கத் எனக்குத் தெரியவில்லை.
ஆகவே, தமிழீழ விடுதலைப் புலி கள் இயக்கத்தை தீவிரவாத இயக் கங்களின் பட்டியலில் இருந்து நீக்குவது மலேசியாவுக்கு நல்லது எனக் கடிதத்தில் வலியுறுத்தி இருந்தேன்" என அவர் குறிப் பிட்டுள்ளார். (ந-இ)

## முட்டை விலை அதிகரிப்பு; பேக்கரி உற்பத்திகள் பாதிப்பு



கொழும்பு, செப்.6
கோழி முட்டையின் விலை அதி கரிப்பால் பேக்கரி உற்பத்திக ளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரி வித்துள்ளது.
இது தொடர்பில் ஜனாதிபதிக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்தப் பட்டுள்ளது என சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்தன தெரிவித்துள்ளார். தற்போது உள்நாட்டு சந்தையில் கோழி முட்டையின் விலை பெருமளவு அதிகரித்துள்ளது. கோழி முட்டை ஒன்று 23 - 28 ரூபாவரை விற் பனை செய்யப்படுகிறது.
உள்நாட்டு சந்தையில் முட்டை யின் விலையைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்றால் அதனை இறக்குமதி செய்வ தற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரப்பட்டுள்ளது. இதேவேளை நாட் டில் முதன்முறையாக கோழி முட்டையின் விலை வழ மையை விட பெரிய அளவில் அதி கரித்துள்ளது என வர்த்தகர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். (வ-இ)





## உயிருடன் பிடிபட்ட சிறுத்தைக்குட்டி

கொழும்பு, செப்.6
மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக் குட்பட்ட ஹப்புகஸ்தனை தோட்ட மேற்பிரிவில் சிறுத்தைக்குட்டி யொன்று நேற்று உயிருடன் பிடிக கப்பட்டுள்ளது.
சுமார் 2 வயது மதிக்கத்தக்க அந்த சிறுத்தை, தொழிலாளர் ஒருவரின் பண்ணையில் இருந்த வேளையிலேயே உயிருடன் பிடிக் கப்பட் டுள்ளது.
நல்லதண்ணி வனபாதுகாப்பு அதிகாரிகளிடம் சிறுத்தைக்குட்டி கையளிக்கப்பட்டது. (வ-இ)

## ரவி உள்ளிட்டோரின் மனுக்களுக்கு ஆட்சேபனை தெரிவிக்க அவகாசம்

கொழும்பு, செப்.6
ரவி கருணாநாயக்க உள்ளிட்ட 7 பேர் மீதான பிடியாணைக் குரிய எதிர் மனுக்களுக்கு எதி ரான ஆட்சேபனைக்கு கால அவகாசம் வழங்கப்பட்டுள் ளது. கடந்த 2016ம் ஆண்டு இடம்பெற்ற மத்திய வங்கி யின் இரண்டு பிணைமுறி வழங்கல்களில், சுமார் 52 பில்லியன் ரூபா அரசு நிதியை முறைகேடாகப் பயன்படுத்தி னர் என்று முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநா யக்க உள்ளிட்ட 7 பேர் மீது குற்றஞ்சாட்டப் பட்டது. அதை டுத்து அவர்களைக் கைது செய்ய பிடியாணை பிறப்பிக் கப்பட்டது. இதனை நடைமு றைப்படுத்துவதற்கு எதிராக 7 பேரினால் தாக்கல் செய்யப் பட்டிருந்த மனுக்கள் நேற்று முன்தினம் மீண்டும் மேன் முறையீட்டு நீதிமன்ற தலைவர் ஏ.எச்.எம்.டி நவாஸ், சோபித ராஜகருணா ஆகியோர் அடங் கிய நீதி பதிகள் குழாம் முன் னிலை யில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது, சட்டமா அதிபரின் சார்பில் முன்னிலை யாகிய பிரதி சொலிசிட்டர் நாயகம் மிலிந்த குணதிலக, குறித்த மனுக்களுக்கு ஆட்சேபனை தெரிவிப்பதற்காக காலஅவ காசம் கோரினார். அந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட நீதிபதிகள் குழாம், ஆட்சேப னையை முன்வைப்ப தற்காக சட்டமா அதிபருக்கு எதிர்வரும் 14ஆம் திகதி வரை கால அவ காசம் வழங்கியுள்ளது. முன் னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க, பேர்பச்சுவல் ட்ரசரீஸ் நிறுவனத்தின் தலை வர் ஜெப்ரி அலோசியஸ், அந் நிறுவனத்தின் உரிமையாளர் அர்ஜுன் அலோசியஸ், பணிப்பாளர்களான கசுன் பலிசேன, சித்த ரஞ்சன் ஹுலு கல்லே மற்றும் இலங்கை மத் திய வங்கியின் இரு அதிகாரிக ளான எஸ். பத்மநாதன், இந் திக சமன் குமார ஆகியோரினால் இந்த மனுக்கள் தாக் கல் செய் யப்பட்டிருந்தன. (வ-இ)

# 12 சரத்துக்களை விட அனைத்தும் மாறும்!

## புதிய அரசமைப்பு உருவாக்கம் டிசெம்பருக்குள் நிறைவுறும்

**கொழும்பு, செப்.6**

**நாட்டில் தற்போது நடைமுறையிலுள்ள அரசமைப்பில் 12 சரத்துகளைத் தவிர ஏனைய அனைத்து விடயங்களும் புதிய அரசமைப்பின் ஊடாக மாற்றியமைக்கப்படவுள்ளன எனத் தெரியவருகின்றது.**

புதிய அரசமைப்பு இயற்றுவதற்காக நியமிக்கப்பட்டுள்ள நிபுணர் குழு உறுப்பினர் ஒருவரை மேற்கோள் காட்டி சிங்கள வார இதழொன்று இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது. பௌத்த மதம், தேசிய கீதம், தேசியக் கொடி மற்றும் நாட்டின் ஒருமைப்பாடு ஆகியவற்றில் தாக்கம் செலுத்தக்கூடிய 12 சரத்துகளில் எவ்வித மாற்றமும் வராது எனவும், ஏனைய சரத்துகளில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கோ அல்லது நீக்குவதற்கோ நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பங்கு பெரும்பான்மை பலம் போதும் என்பதால் சர்வஜன வாக்கெடுப்பை நடத்தவேண்டிய தேவை ஏற்படாது எனவும் அந்த நிபுணர் குறிப்பிட்டார் என்று அந்த வார இதழ் தெரிவித்துள்ளது. அதை 21 ஆவது திருத்தச் சட்டமாக கருதாமல் புதிய அரசமைப்பாகவே அடையாளப்படுத்த முடியும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எனினும், சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவதா அல்லது இல்லையா என்பது தொடர்பில் நிபுணர் குழு கூட்டத்தில் விரிவாகக் கலந்துரையாடப்படவுள்ளது. புதிய அரசமைப்பை டிசெம்பர் மாதத்துக்குள் இயற்றமுடியும் எனவும், அதை 2021 ஜனவரியில் அரசிடம் கையளிக்கக் கூடியதாக இருக்கும் என எதிர்பார்ப்பதாகவும் நிபுணர் குழு உறுப்பினர் கருத்து வெளியிட்டுள்ளார். அத்துடன், பல்துறையினரிடமும் புதிய அரசமைப்புக் குறித்துக் கருத்துகள், ஆலோசனைகள் உள்வாங்கப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-44)

# தங்காலை சிறை இனி தடுப்புக்காவல் நிலையம்

## வர்த்தமானி வெளியானது

கொழும்பு, செப்.6

தங்காலையில் உள்ள பழைய சிறைச்சாலைக் கட்டடத்தைத் தடுப்புக் காவல் நிலையமாக மாற்றுவதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் பிரகாரம் ஜனாதிபதிக்கு உள்ள நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அதேவேளை, போல்ரூம் டான்சிஸ் விளையாட்டுக்கான தேசிய மாநாட்டின் பதிவு உடன் நடைமுறைக்கு வரும் வகையில் இரத்துச் செய்வதற்கான வர்த்தமானி அறிவிப்பும் வெளியாகியுள்ளது.

விளையாட்டு சட்டத்தின் கீழ் உள்ள அதிகாரங்களின் படி, இந்த நடவடிக்கையானது விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் நாமல் ராஜபக்சவால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (எ-இ)

# விபத்தில் இருவர் உயிரிழப்பு

கொழும்பு, செப்.6

இரு வேறு வீதி விபத்துக்களில் இருவர் உயிரிழந்துள்ளனர். கரவனெல்ல - அவிசாவளை வீதியில், மாகம்மன பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அவிசாவளை நோக்கிப் பயணித்த முச்சக்கர வண்டியும், மோட்டார் சைக்கிளொன்றும் நேருக்கு நேர் மோதியுள்ளன. விபத்துக்குள்ளான முச்சக்கரவண்டி லொறி ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. விபத்தில் முச்சக்கர வண்டி சாரதி உயிரிழந்துள்ளார்.

அதேவேளை, தம்புள்ளை - குருநாகல் வீதியில் பயணித்த லொறியொன்று, முச்சக்கர வண்டியுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில், முச்சக்கரவண்டி சாரதி உயிரிழந்துள்ளார். சம்பவங்கள் தொடர்பில் பொலிஸ் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (எ)

# 164 பேர் வீடுகளுக்கு திரும்பினர்

வவுனியா, செப்.6

வவுனியா, வேலங்குளம் விமானப்படைத் தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்க வைக்கப்பட்டிருந்த 164 பேரின் தனிமைப்படுத்தல் காலம் நிறைவடைந்ததை அடுத்து அவர்கள் வீடுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

இவர்கள் சிங்கப்பூரில் இருந்து நாடு திரும்பிய நிலையில் வவுனியா வேலங்குளம் விமானப்படைத் தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்க வைக்கப்பட்டிருந்தனர். மாத்தறை, காலி, கொழும்பு, கண்டி, பேராதெனியா, மாத்தளை, அனுராதபுரம் ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்களே தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர். அவர்களின் தனிமைப்படுத்தல் காலம் நிறைவடைந்ததை அடுத்து அவர்கள் இன்று வீடுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். (எ-110)

# தேசியப் பட்டியல் விவகாரம் தொடர்பில் அடிப்படை உரிமை மீறல் மனுத்தாக்கல்

## அபேஜன பலவேகய கட்சியின் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, செப்.6

அபேஜன பலவேகயக் கட்சியின் தேசியப் பட்டியல் விவகாரம் தொடர்பில், உயர்நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என அபேஜன பலவேகய என கட்சியின் தலைவர் சமன்பெரேரா தெரிவித்துள்ளார்.

இந்த அடிப்படை உரிமை மனுத் தாக்கலானது தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர், ஆணைக்குழுவின் உறுப்பினர்கள், சட்டமா அதிபர், அத்துரலிய ரத்னதேரர் மற்றும் வேதிரிகம விமலதிஸ்ஸ தேரர் ஆகியோருக்கு எதிராகவே செய்யப்பட்டுள்ளது.

பொதுஜனபலசேன கட்சிக் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அபேஜன பலவேகய கட்சிக்கு கிடைக்கப்பெற்ற ஒரு தேசியப்பட்டியல் ஆசனம் யாருக்கு வழங்கப்பட வேண்டும் என்று கட்சியின் செயற்குழு எடுத்த தீர்மானத்தைத் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு உத்தியோகப்பூர்வமாக அறிவித்தோம்.

ஆனால் எமது தீர்மானத்தைப் பொருட்படுத்தாது தேர்தல்கள் ஆணைக்குழு தேசிய பெயர் பட்டியலை வர்த்தமானியில் வெளியிட்டுள்ளமை தவறான செயற்பாடாகும். இந்தத் தவறான செயற்பாட்டுக்கு நியாயம் பெற்றுக் கொள்ளும் வகையிலேயே உயர்நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் வழக்குத் தாக்கல் செய்துள்ளோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-இ)

# முத்துறை அதிகாரங்கள் தனிநபரிடமெனின் ஆபத்து

## முன்னிலை சோசலிச கட்சி சுட்டிக்காட்டு

கொழும்பு, செப். 6

தனி நபரிடம் முத்துறை அதிகாரங்களை பொறுப்புக் கொடுப்பது எதிர்காலத்தில் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும். பெயரளவில் நாடாளுமன்றம் செயற்படுவதால் எவ்வித பயனும் நாட்டுக்கு ஏற்படாது என்று முன்னிலை சோசலிச கட்சியின் செயலாளர் புபுது ஜயகொட தெரிவித்தார். கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். ஆகவே ஆளும் தரப்பின் உறுப்பினர்கள் தங்கள் சுயநல வரப்பிரசாதங்களை புறந்தள்ளி நாட்டுக்காக 20 ஆவது திருத்தத்தை எதிர்க்க முன்வர வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். (த-இ)



# மன்னிப்பு கோரினார் யஸ்மின் சூக்கா?

கொழும்பு, செப்.6

மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலியின் படத்திற்கு பதிலாக இலங்கை ராணுவத்தின் பிரிகேடியர் ரவீந்திர டயஸின் படத்தை தவறாக பயன்படுத்தியதற்காக சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்திட்டத்தின் நிறைவேற்று பணிப்பாளர் யஸ்மின் சூக்கா மன்னிப்பு கோரியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஜூலை மாதம் நான்கு இராணுவத்தினர் பிரிகேடியர் தரத்தில் இருந்து மேஜர் ஜெனரல்களாக பதவி உயர்த்தப்பட்டமை தொடர்பில் கடந்த ஜுன் முதலாம் திகதி விசேட ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார் யஸ்மின் சூக்கா.

இந்த அறிக்கையில் சுரேஷ் சாலியின் படத்துக்கு பதிலாக பிரிகேடியர் ரவீந்திர டயஸின் படத்தை பயன்படுத்தினர் என்று தெரிவிக்கப்படுகின்றது. அதனால் பிரிகேடியர் ரவீந்திர டயஸின் வாழ்க்கையை ஆபத்தில் ஆழ்த்தியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. யாஸ்மின் சூகா தனது வழக்கறிஞர்களின் ஆலோசனையில் "குறித்த படத்தை தவறாகப் பயன்படுத்தியதற்காக பிரிகேடியர் ரவீந்திர டயஸிடம் மன்னிப்பு கோரினார் என்றும், பொது மன்னிப்பு மற்றும் திருத்த அறிக்கையை வெளியிட்டுள்ளார் என்றும்" ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (எ-இ)

# அம்பாறை கடற்பகுதியில் எண்ணெய்ப் படலங்கள்?

## மீனவர்களும் நேற்று கடலுக்கு செல்லவில்லை

அம்பாறை, செப்.6

சங்கமன்கந்தை கடற்பரப்பில் இருந்து 38 கடல் மைல் தொலைவில் எரிபொருள் கப்பல் ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்து முடிவிற்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள போதிலும், கிழக்கு மாகாண அம்பாறை மாவட்ட மீனவர்கள் எவரும் நேற்று மீன்பிடிப்பதற்கு கடலுக்குச் செல்லவில்லை.



பனாமா அரசுக்கு சொந்தமான கப்பலொன்று கடந்த இரு தினங்களுக்கு முன்னர் இவ்வாறு தீ விபத்துக்குள் ளாகியிருந்தது. கடும் சிரமங்க ளுக்கு மத்தியில் இலங்கை கடற்படை, விமானப்படையினரின் ஒத்துழைப்புடன் ஏனைய நாடுகளும் இணைந்து செயற்பட்டு குறித்த கப்பலில் ஏற்பட்ட தீ கட்டுப்பாட்டுக் குள்கொண்டுவரப்பட்டது. இந்தத் தீ விபத்தால் கடலில் கச்சா எண்ணெய் கசிவு ஏற்படாது என பல்வேறு தரப்பினரும் அறிவித்துள்ள நிலையில் அம்பாறை மாவட்டத்தில் பாண்டிருப்பு, கல்முனை உள்ளிட்ட பகுதிகளின் கடற்பரப்பில் எண்ணெய் பரவல் அடையாளங்கள் தென்பட்டுள்ளன.

இந்த எண்ணெய் பரவலானது விபத்திற்குள்ளான கப்பலின் எண்ணெய் கசிவா அல்லது வேறு படகில் இருந்து வெளியாகிய எண்ணெய் கசிவா என அறிய முடியவில்லை.

அத்துடன் குறித்த விபத்துத் தொடர்பாக முன்னெச்சரிக்கையாக இருக்குமாறு அம்பாறை மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்கள் மாநகர சபைகளுக்கு இடர் முகாமைத்துவ நிலையம் அறிவித்திருந்தது. அதேவேளை நேற்று கரையோர மீனவர்கள் மீன்பிடிப்பதற்காக கடலுக்கு செல்லவில்லை. (ஏ-இ)

## எம்.சீ.சீ. உடன்படிக்கை பற்றி பணிப்பாளர் சபை ஆராய்வு!

கொழும்பு, செப்.6

அமெரிக்காவின் எம்.சீ.சீ. உடன்படிக்கை தொடர்பாக இலங்கையில் ஏற்பட்டுள்ள கடும் எதிர்ப்பு காரணமாக அதைத் தொடர்ந்தும் முன்னெடுப்பதா? இல்லையா? என்பதை தீர்மானிக்க எம்.சீ.சீ. உடன்படிக்கை திட்டத்தின் பணிப்பாளர் சபை அடுத்த வாரம் வொஷிங்டனில் கூடவுள்ளது.

அமெரிக்காவின் எம்.சீ.சீ. திட்டத்தின் ஊடாக தெரிவு செய்யப்பட்ட நாடுகளின் அபிவிருத்திக்காக நிதியுதவியை வழங்கி வருவதுடன் இலங்கைக்கு 480 மில்லியன் டொலரைப் பெற்றுக்கொடுப்பதற்காக இலங்கையிடம் அந்த உடன்படிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அந்த உடன்படிக்கையில் காணப்படும் பல்வேறு விடயங்கள் மற்றும் நிறைவேற்ற வேண்டிய நிபந்தனைகள் சம்பந்தமாக சமூகத்தில் கடும் எதிர்ப்புகள் உருவாகியுள்ளன. இந்த உடன்படிக்கை தொடர்பாக ஆராய்ந்த நிபுணர்கள் குழு, உடன்படிக்கையின் சில நிபந்தனைகள் நாட்டின் பொதுச் சட்டத்துக்கு மட்டுமல்லாது அரசமைப்புச் சட்டத்துக்கு முரணானது என கூறியது. அதையடுத்து உடன்படிக்கை தொடர்பான செயற்பாடுகள் செயலிழந்தன.

அமெரிக்கா தெற்காசியாவில் இலங்கையைத் தவிர நேபாளத்துக்கும் இவ்வாறு உடன்படிக்கைத்திட்டத்தை முன்வைத்துள்ளது. அதற்கு இதுவரை நேபாள நாடாளுமன்றம் அனுமதி வழங்கவில்லை. (ஏ-இ)

## கட்சிக்குள் மாற்றம் ஏற்படுத்தத் தயார்!

### தேசிய மக்கள் சக்தி தெரிவிப்பு



கொழும்பு, செப்.6

கட்சிக்குள் மாற்றங்களை ஏற்படுத்துவதற்குத் தயாராகவுள்ளோம் என்று தேசிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது. இது தொடர்பாக பல்வேறு தரப்பினர்களுடன் பேச்சு இடம்பெறுகின்றது என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது

கடந்த தேர்தலில் கட்சி பின்னடைவைச் சந்தித்தது. இது தொடர்பில் கட்சியின் முக்கிய உறுப்பினர்களுடன் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன. கட்சியைப் பலப்படுத்துவதற்கான யோசனைகள் வாய்மூலம் மற்றும் எழுத்து மூலமாக முன்வைக்கப்பட்டுள்ளன.

மாவட்ட ரீதியில் இருந்து தேர்தல் தொகுதி வரை இந்தப் பேச்சுக்கள் இடம்பெற்று வருகின்றன. அவை நிறைவடைந்த பின்னர் கட்சிக்குள் மாற்றங்கள் கொண்டுவரப்படும். மக்கள் சிந்திக்கும் முறை தொடர்பில் கவனத்தில் கொண்டு அவற்றிற்கு ஏற்ற வகையில் கட்சியின் செயற்பாடுகளை மறுசீரமைக்க வேண்டும். என்றார். (ஏ-இ)

## குற்றச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் கைது

கொழும்பு, செப்.6

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களில் ஈடுபட்டு வந்த சந்தேக நபரான கெசல்வத்த தினுகவின் உதவியாளர் ஒருவர் எந்தேரமுல்ல பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

கெசல்வத்த கசுன் எனும் நபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். இந்த நபரிடம் இருந்து 6 கிராம் ஹெரோயின் மற்றும் கூரிய ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் லொறி ஒன்றும், மோட்டார் சைக்கிள் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

அந்த நபரின் வங்கிக் கணக்கின் ஊடாக 183 மில்லின் ரூபாவுக்கு அதிகமான பணக் கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்றுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ஏ-இ)

## இரட்டைக் குடியுரிமையாயின் பதவிகள் கொடுக்கக் கூடாது!

### வாசுதேவ தெரிவிப்பு

கொழும்பு, செப்.6

இரட்டை குடியுரிமை கொண்டவர்களுக்கு இலங்கையில் பதவிகளை வகிக்கும் சந்தர்ப்பத்தை 20ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டத்தின் மூலம் வழங்கக் கூடாது. இவ்வாறு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார். நீதியமைச்சர் மொஹமட் அலி சப்றி இந்த சட்டத் திருத்த வரைவை அமைச்சரவையில் தாக்கல் செய்த போதே வாசுதேவ இதனை கூறியுள்ளார். அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவின் இந்த நிலைப்பாட்டுக்கு அமைச்சரவையில் உள்ள பலர் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

அமைச்சர் வாசுதேவவின் கருத்தை தெளிவுபடுத்தியுள்ள அமைச்சர் விமல் வீரவன்ச, ஒரு நபரை இலக்கு வைத்து அல்லாது கொள்கை ரீதியான காரணத்தை முன்வைத்தே அமைச்சர் வாசுதேவ இதைக் கூறிய தாகவும் இந்தியாவில் கூட இரட்டைக் குடியுரிமை கொண்டவர்கள் அரச பதவிகளை வகிக்க இடமளிக்கப்படுவதில்லை எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். அதேவேளை இந்த 20ஆவது திருத்தச்சட்டத்தில் சிறிய குறைகள் காணப்பட்டால், அதற்கு எதிராக எதிர்க்கட்சிகள் நீதிமன்றத்தை நாடும் என்பதால், திருத்தச் சட்டத்தை தொடர்ந்தும் ஆராய்ந்து அடுத்த அமைச்சரவையில் ஒப்புதல் பெறலாம் என அமைச்சர் உதய கம்மன்பில யோசனை முன்வைத்துள்ளார். இதற்கு அமைச்சரவையில் உள்ள பலர் எதிர்ப்பை முன்வைத்துள்ளனர். (ஏ)


# எருமை மாடுகள் ஏற்றிய லொறி மடக்கிப் பிடிப்பு!

வவுனியா, செப்.6

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைக்குட்பட்ட நெளுக்குளம் பகுதியில் 14 எருமை மாடுகளை ஏற்றி வந்த லொறியை நேற்றுப் பொலிஸார் கையகப்படுத்தியுள்ளனர்.

மன்னாரிலிருந்து வவுனியா நோக்கி அனுமதிப்பத்திரமின்றி எருமை மாடுகள் ஏற்றி வரப்படுகின்றன என்று வவுனியா மாவட்ட போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்தே லொறி மடக்கிப் பிடிக்கப்பட்டது.

லொறியின் சாரதி மற்றும் நடத்துநர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்ட நபர்கள் வவுனியா புளிதறித்தபுளியங்குளம் பகுதியைச் சேர்ந்தவர்களாவார்கள். கைதுசெய்யப்பட்ட நபர்களை வவு னியா மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். (ஏ-18)



# விநாயகரின் அருகில் எலி நிற்பதன் அர்த்தம்?

விநாயகரின் உருவகத்தின் உள் அர்த்தங்கள் மிக ஆழமான ஆன்மிக தத்துவங்களை உள்ளடக்கியவை.



விநாயகர் உருவப் படங்களில் ஒரு எலி விநாயகரை வேண்டி நிற்பது போல் காணப்படும். இதன் முழுமையான அர்த்தம் என்னவென்று தெரியுமா?

உணவுப் பண்டங்களுக்கிடையே ஒரு மூஞ்சூறு உணவைத் தொடாமல் விநாயரின் அனுமதி வேண்டி நின்றிருக்கும். (மூஞ்சூறு எலி). இது ஆசைகளை உருவகப்படுத்துகிறது.

எலிக்கு சிறிய வாய் மற்றும் கூரிய பற்கள் உண்டு. ஆனால் எலி மிகுந்த பேராசை கொண்டது. அதனுடைய ஆசை எவ்வளவு பெரியது என்றால், எப்போதுமே தனது தேவைக்கு மேலேயே உணவைச் சேர்த்து வைக்கும்.

பலமுறை, எந்த இடத்தினில் சேர்த்தோம் என்ற அறிவின்றி, பல வளைகளிலும் உணவைச் சேர்த்து வைக்கும்.

எலிகள் பேராசையின் மொத்த உருவம். இத்தகைய குணம் உள்ள எலி பரப்பி வைக்கப்பட்டுள்ள உணவுப் பொருள்களின் மத்தியிலிருந்தும், அவற்றைத் தொடாமல் விநாயகரின் அனுமதி வேண்டி அமர்ந்திருக்கிறது.

இது உணர்த்துவது என்னவென்றால், பூரணத்துவம் பெற்ற மனிதன் தனது ஆசைகளின் மேல் முழுமையான ஆளுமை உடையவனாக இருப்பான். உலகச் சபலங்கள் அவனை எதுவும் செய்ய முடியாது என்பதனை உணர்த்தவே அவ்வாறு காண்பிக்கப்படுகின்றது.



# பொறுமையாளருடன் இறைவன் உள்ளான்!

■ மொகமட் அமீர்



ஏக இறைவன் அல்லாஹ் ஒருவனே என்ற கொள்கையை நிலை நாட்ட நபிகள் நாயகம் (ஸல்) மிகவும் கடுமையாகப் போராடினார்கள். அவர்களது சொல்லிலும் செயலிலும் இருந்த சத்தியத்தை உணர்ந்த மக்கள், கூட்டம் கூட்டமாக தங்களை இஸ்லாத்தில் இணைத்துக்கொண்டனர். அப்போது அவர்களுக்கு எதிராக வாள் ஏந்திப் போர் புரிய எதிரிகள் திரண்டு இருந்தனர். அல்லாஹ்வின் கட்டளைப்படியே அனைத்து தர்ம யுத்தங்களிலும் நபிகளாரும், அவரது தோழர்களும் கலந்துகொண்டு வெற்றி பெற்றனர். அதுபோன்ற ஒரு போர்க்களம் தான் உஹது போர்.


அல்லாஹ்வின் அருளால் உஹது போரில் நபிகளாரின் படைகளுக்கு வெற்றி கிடைத்தது. எதிரிகள் புறமுதுகிட்டு ஓடினர். போர்க்களத்தில் எதிரிகள் விட்டுச்சென்ற பொருள்களைச் சேகரிப்பதில் நபித்தோழர்கள் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். உஹது மலையின் உச்சியில் நின்று எதிரிப்படைகள் திரும்பி வருகிறார்களா? என்று கண்காணித்துக்கொண்டிருந்த நபிகளாரின் படையைச் சேர்ந்த வில் வித்தை வீரர்கள் இதைப் பார்த்தனர். போர் முடிந்து விட்டது என்ற எண்ணத்தில் அவர்களும் மலையில் இருந்து இறங்கி போர்க்களத்தில் சிதறிக்கிடந்த பொருள்களைச் சேகரிக்கத் தொடங்கினர்.

அப்போது, எதிரிகள் திரும்பி வந்து நபிகளாரின் படைகளை பின்புறம் இருந்து தாக்கினார்கள். இதனைச் சற்றும் எதிர்பாராத நபித்தோழர்கள் நிலைகுலைந்து போனார்கள். படைகள் அங்கும் இங்குமாகச் சிதறின, பெரும் குழப்பம் நிலவியது. தாறுமாறாக வீரர்கள் வெட்டிக் கொல்லப்பட்டனர்.

நபிகளார் மனம் புண்பட்டிருந்த அந்த நேரத்தில் அல்லாஹ், 'நபியே! நீங்கள் பொறுமையைக் கையாளுங்கள்' என்கின்றான். மனிதர்கள், மனதாலும், எண்ணங்களாலும் பலவீனமானவர்கள். எனவே அல்லாஹ்வின் உதவியின்றி பொறுமை சாத்தியப்படாது என்பதையும் சுட்டிக்காட்டுகின்றான். நிகழ்வின் யதார்த்தத்தையும், விதியின் வலிமையையும் சொல்லிக்காட்டிவிட்டு, 'எதிரிகளின் சூழ்ச்சியைப்பற்றி கவலைப்படாதீர்கள், நான் உங்களுக்கு பக்கபலமாய் உள்ளேன்' என்று இந்த திருக்குர்ஆன் வசனத்தின் மூலம் ஆறுதலும் சொல்கின்றான். அந்த பொறுமையாளர்களோடு அல்லாஹ் நம்மையும் சேர்த்தருள்வானாக!.

# வெள்ளிக் காசும் தொலைந்த ஆடும்

■ ஆர்.பி.



இயேசு கூறிய உவமைகளில், தொலைந்த வெள்ளிக்காசு, தொலைந்த ஆடு ஆகிய உவமைகள் மிக முக்கியமானவை. அவைபற்றி இயேசு கூறியதைப் பார்ப்போம்.

'இல்லத் தலைவி ஒருவரிடம் பத்துத் திராக்மா வெள்ளி நாணயங்கள் இருந்தன. அவற்றில் ஒன்று காணாமல் போய் விட்டது. அவர் எண்ணெய் விளக்கை ஏற்றி, வீட்டைப் பெருக்கி அதைக் கண்டுபிடிக்கும் வரை கவனமாகத் தேடினார். அதைக் கண்டுபிடித்ததும், அவர் தன் தோழியரையும் அண்டை வீட்டாரையும் அழைத்து, 'என்னோடு மகிழ்ந்து கொண்டாடுங்கள். ஏனெனில் காணாமல் போன எனது திராக்மாவைக் கண்டுபிடித்துவிட்டேன்' என்று கூறுவார். அவ்வாறே மனம் மாறிய ஒரு பாவியைக் குறித்து கடவுளின் தூதரிடையே மகிழ்ச்சி உண்டாகும் என உங்களுக்குச் சொல்கிறேன். மானிட மகன் பாவிகளை மீட்கவே வந்தார்' என்றார். இதற்கு தொடர்ந்து இயேசு இரண்டாம் உவமையைக் கூறினார்.

'உங்களில் ஒருவரிடம் இருக்கும் நூறு ஆடுகளுள் ஒன்று காணாமல்போனால், அவர் தொண்ணூற்றொன்பது ஆடுகளையும் விட்டுவிட்டு, காணாமல்போன ஆட்டைக் கண்டுபிடிக்கும் வரை அதைத் தேடி அலையமாட்டாரா? கண்டுபிடித்ததும், அவர் அதை மகிழ்ச்சியோடு தம் தோள்மேல் போட்டுக் கொண்டு வீட்டுக்கு வந்து, நண்பர்களையும் அக்கம் பக்கத்து வீட்டினரையும் அழைத்து, 'என்னோடு மகிழ்ந்து கொண்டாடுங்கள். ஏனெனில் காணாமற்போன என் ஆட்டைக் கண்டுபிடித்துவிட்டேன்' என்பார். அதுபோலவே மனம் மாறத் தேவையில்லாத தொண்ணூற்றொன்பது நேர்மையாளர்களைக் குறித்து உண்டாகும் மகிழ்ச்சியைவிட, மனம் மாறிய ஒரு பாவியைக் குறித்து வானுலகில் பெரு மகிழ்ச்சி உண்டாகும் என நான் உங்களுக்குச் சொல்கிறேன். அவ்வாறே இவர்களில் ஒருவர்கூட நெறி தவறிப் போகக் கூடாது என்பதே நம் விண்ணகத் தந்தையின் திருவுளம்.'

இரண்டு உவமைகளில் வெள்ளி நாணயம், ஆடு ஆகியவை காணாமல் போய் விடுகின்றன. ஆட்டைத் தொலைத்த மேய்ப்பன், 'எனது 100 ஆடுகளில் ஒன்றுதானே காணாமல்போனது. இன்னும் எனக்கு 99 ஆடுகள் இருக்கின்றனவே, காணாமல்போன ஒன்று இல்லாவிட்டால் எனக்கு எந்தப் பெரிய இழப்பும் இல்லை' என்று கூறவில்லை. அதேபோல் அந்த இல்லத் தலைவி, 'என்னிடம்தான் இன்னும் 9 வெள்ளிக்காசுகள் இருக்கின்றனவே காணாமல்போன ஒரேயொரு திராக்மா பற்றி நான் ஏன் கவலைப்பட வேண்டும்?' என்று கேட்கவில்லை. மாறாக மேய்ப்பன் தன்னிடம் ஒரேயொரு ஆடுமட்டுமே இருப்பதாக எண்ணி, காணாமல்போன அந்த ஆட்டுக்காகக் கல்லிலும் முள்ளிலும் தேடி அலைந்தான். இல்லத்தலைவியும் தன்னிடம் வேறு திராக்மாக்களே இல்லை என்பதுபோல் காணாமற்போன அந்த ஒரு காசுக்காக வருத்தப்பட்டு கையில் விளக்கை ஏற்றிக்கொண்டு பொறுப்புடன் அதைத் தேடி எடுத்தாள்.

இந்த இரண்டு உவமைகளுக்குப் பின்னும் இயேசு சொன்ன உறுதியான வார்த்தைகள் 'மனம் மாறிய ஒரு பாவியைக் குறித்து வானுலகில் பெரு மகிழ்ச்சி உண்டாகும் என நான் உங்களுக்குச் சொல்கிறேன்' ஆகவே, மேய்ப்பனின் அக்கறையும், அந்த இல்லத் தலைவியின் அக்கறையும் கடவுளாகிய பரலோகத் தந்தையின் அக்கறையைப் படம்பிடித்துக் காட்டுகிறது. கடவுள், மனிதர்கள் மீதான தன் அக்கறையையும், அன்பையும் தன் மகன் இயேசுவின் வழியாக வெளிப்படுத்தியதை இந்த இரு உவமைகளும் நமக்குச் சுட்டுகின்றன.

# நாளைய மலர்களை நசுக்காதீர்



■ உடுவிலூர் கலா

குழந்தை வளர்ப்பு அர்ப்பணிப்பு நிறைந்த, அவதானம்மிக்க, உயிரோட்டமானதொரு கலையாகும். இதில் பெற்றோரின் பங்களிப்பு காத்திரமானது. குழந்தைப்பருவமானது பெற்றோராலும், சமூகத்தினாலும் பக்குவமாகக் கையாளப்படவேண்டியதொன்று. பெற்றோரின் உலகம் குழந்தைகள் குழந்தைகளின் உலகம் பெற்றோர். சிறுபராயத்தில் இவர்களது எண்ணங்கள் சிதறல் நிலை அடைந்தால், அவர்களது எதிர்காலம் கேள்விக்குறியாவதை எவராலும் தடுக்க முடியாது. கூடி விளையாடல், மாலை நேர விளையாட்டு, பாட்டியிடம் கதைகேட்டல், போதிய தூக்கம் போன்றவற்றால் ஆரோக்கியம் அடைந்த குழந்தைப் பருவம், மனித வாழ்க்கைக்கான முழுமைத்துவத்தைப் பெற்றுக்கொள்கிறது. பாட்டியின் கதை கேட்டு வளர்ந்த குழந்தைகள், அறிவை வளர்த்துக் கொண்டார்கள் கேள்விச் செல்வத்தைப் பெற்றார்கள் வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டார்கள்.



இன்று அத்தகைய பழக்கவழக்கங்கள் மலையேறிவிட்டன. இதனால் பிள்ளைகளின் வாழ்வியல் முறைமைகளும் மாறிவிட்டன. பாட்டிமார், இன்று மூத்தோர் பேணகங்களில் சூழ்நிலைக் கட்டாயத்தால் தஞ்சம் அடைகின்றனர். குழந்தைகளும் மின்னியல் சாதனங்களோடு பயணிக்கும் நிலை தொடர்கின்றது. குறும்பு செய்யும் குழந்தைகளை, அவர்களது சிந்தனைகளை கட்டிப் போடுவது போல், ஓரிடத்தில் இருத்திவிட்டு கைபேசியையும் கொடுத்து தொலைக்காட்சி நிகழ்வுகளையும் திணிக்கின்றனர் பெற்றோர். குழந்தைகளோடு நேரம் செலவிட்டு, அவர்களது குறும்புகளைப் பார்த்து இன்புற வேண்டிய பெற்றோர், கைபேசியை விளையாட்டுப் பொருளாகக் கொடுத்துவிட்டு, தமது வேலைகளில் மூழ்கி விடுகின்றனர். அதன் விளைவு நாளடைவில் அக் குழந்தைகள் கைபேசிக்கு அடிமையாகி அடம்பிடிக்கும் குழந்தைகளாக மாறுகின்றனர்.

அது மட்டுமல்ல இன்று பெரும்பாலான குழந்தைகள் தொலைக்காட்சியில் சுட்டி அலைவரிசையில் ஒளிபரப்பாகும் "டோராவின்பயணங்கள்" நிகழ்ச்சிமூலம் டோராவை முழுதுமாக உள்வாங்கி, தம்மை டோராவாகவே நினைத்துக் கொள்கின்றனர். நடை, உடை பாவனை யாவற்றையும் டோராவாகவே மாற்றிக் கொண்டு வீடுகளில் மட்டுமல்ல, வெளியிடங்களில்கூட தம்மை டோராவாக நிலை நிறுத்துகின்றனர்.

குழந்தைப்பருவம் அழகானது குழந்தை மொழி இதயத்துக்கு மகிழ்வளிப்பது. இதனையே வள்ளுவரும், "குழலினிதும் யாழினிது என்பர் தம் மக்கள் மழலைச் சொல் கேளாதவர்" என அழகாகக் கூறியுள்ளார். தமது குழந்தைகளின் மழலைச் சொற்களைக் கேட்காது, குழந்தைகள் உள்வாங்கும் தொலைக்காட்சி உருவங்களைப் பார்த்து மகிழும், அறிவியல் பெற்றோர் வாழும் பரிதாப உலகம் இது. குழந்தைகளின் குழப்படிகளைக் குறைக்கவும், தமது சிரமங்களைத் தவிர்க்கவும், மின்னியல் சாதனங்களில் குழந்தைகளின் கவனத்தை பதிய வைக்க முயலும் பெற்றோர் அதன் காரணமாக தாம் அந்தக் குழந்தைகளை ஓரிடத்திலேயே முடக்கி விடுவதை உணர மறுக்கின்றனர். ஊடகக் காட்சிகளாய் உள்வாங்கப்பட்டு மனநிலை மாற்றம் பெறுவதால், அவர்களது இயல்பான குழந்தைப் பருவத்தை எங்கே? எப்படி? ரசிக்கமுடியும்? இப்படியான பெற்றோரின் புத்திசாலித்தனமற்ற செயல்களால், அவர்கள் தமது குழந்தைப் பருவத்தை அதிவேகமாகக் கடக்கிறார்கள் என்ற கசப்பான உண்மையை இவ்விடத்தில் பதிவு செய்கிறேன். பெற்றோரால் தமது பிள்ளைகள் மீது நிகழ்த்தப்படும் கொடூரமான வன்முறை இதுவாகும்.

இதனால் குழந்தைகளின் மென்மையான உடல் உறுப்புக்கள் மின்னியல் தாக்கத்துக்கு நேரடியாக உட்படுகின்றன. தினசரி 56 மணித்தியாலங்கள் இவ்வாறு மின்னியல் தாக்கத்துக்கு திணிக்கப்படுவது நல்லதல்ல. பசுமரத்தாணி போல் எளிதாக ஈர்க்கப்படும் தன்மைகொண்ட குழந்தைகள், சிறுபராயத்தில் வாழ்வியலுக்கு தேவையானவற்றையே கிரகித்துக் கொள்ள வேண்டும். தற்காலக்குழந்தைகளில் ஒருதொகையினருக்கு கைப்பேசியின் செயற்பாடுகள் யாவும் நன்றாகத் தெரியும்.

தொலைக்காட்சியில் சுட்டி அலைவரிசை நிகழ்ச்சி மூலம் புதிய புதிய சொந்தங்களை கிரகித்துக் கொண்டாலும், நிகழ்ச்சிக்கு அடிமையாகின்றனர். விளையாட்டை விரும்புவதில்லை. சுட்டி ரிவிக்காக அடம்பிடிக்கின்றனர். இந்நிலை மாறவேண்டும். சுதந்திரமாகவிளையாட, இயற்கையைரசிக்க, பெற்றோரின் அரவணைப்பில் மகிழ்ந்திருக்க சிந்தனையை விரிவாக்கம் செய்ய பெற்றோர் குழந்தைகளுக்காகத் தம்மை அர்ப்பணிக்க வேண்டும்.

அன்பான பெற்றோரே, உங்கள் குழந்தைகளின் வாழ்வு, ஆரோக்கியம், மகிழ்ச்சி எல்லாமே உங்கள் கைகளிலேயே. அவர்களை அறிவு நோக்கிய "தேடல்" என்னும் பாதையில் பயணிக்க வைக்கத், தடையாக இருக்கும் கற்களையும், முட்களையும் அகற்றி விடுங்கள். குழந்தைப் பருவத்தை அலட்சியம் செய்யாதீர்கள். நாளைசமுதாயத்தின் பொருத்தப்பாடுடைய பிள்ளைகள் இன்றைய குழந்தைகள் என்பதை நீங்கள் முதலில் உணர்ந்து கொள்ளுங்கள்.

உணர்வீர்களா......?

---

# ஒன்பது குழி சம்பத்

நடிப்பு : பாலாஜி மகாராஜா, நிகிலா விமல்
இயக்கம் : ஜா. ரகுபதி
இசை : வி.ஏ. சார்லி

காதல் படங்கள் என்றாலே அவற்றில் ஏதோ ஒரு விஷயம் மட்டும் உருகவைக்கும் அளவிற்கு இருந்தால் போதும் என சில இயக்குனர்கள் நினைக்கிறார்கள். அந்த ஒரு விஷயத்தைத் தவிர மற்ற விஷயங்களில் அதிக கவனம் செலுத்துவதில்லை. அப்படியான ஒருபடம்தான் இந்த 'ஒன்பது குழி சம்பத்'.

கிராமத்தில் அம்மாவிடம் கூட பல வருடங்களாகப் பேசாமல் பொறுப்பில்லாமல் 'ஒன்பது குழி' கோலி விளையாட்டை விளையாடிக் கொண்டுத் திரிபவர் பாலாஜி மகாராஜா. அதே ஊரில் இருக்கும் கல்லூரி மாணவி நிகிலா மீது விமல் ஒரு நாளில் திடீரெனக் காதல் கொள்கிறார். நிகிலா வீட்டிற்கே சென்று பெண் கேட்கிறார் பாலாஜி. நிகிலா குடும்பத்தினர் அதற்கு மறுக்க தனக்கு பாலாஜி மீது காதல் இல்லை என்பதை உணர்த்த ஊர்த்திருவிழாவில் பாலாஜியை துடைப்பத்தால் அடித்துவிடுகிறார் நிகிலா. அதன் பின் சினிமா வழக்கப்படி பாலாஜியின் காதல் தீவிரத்தை உணர்ந்து நிகிலா அவரைக் காதலிக்க ஆரம்பிக்கிறார். ஊதாரித்தனத்தை விட்டு வெளியூருக்கு வேலைக்குச் சென்று சம்பாதித்து பின் திருமணம் செய்து கொள்ள முடிவெடுக்கிறார் பாலாஜி. இரண்டு வருடம் கழித்து ஊருக்குத் திரும்பி வருபவரிடம் நிகிலா எங்கே என்று கேட்டு அதிர்ச்சி தருகிறார்கள் நிகிலா குடும்பத்தினர். அதன்பின்னென்னநடக்கிறதுஎன்பதுதான் படத்தின் மீதிக் கதை.

படத்தின் நாயகன் சம்பத் ஆக பாலாஜி மகாராஜா. சினிமாத்தனமில்லாத முகம். அந்தக் கதாபாத்திரத்தில் பொருத்தமாகவே நடித்திருக்கிறார். கிராமத்தில் ஊதாரித்தனமாக சுற்றித் திரியும் இளைஞன் ஒருவன் எப்படி இருப்பான் என்பதை கண்முன் நிறுத்தியிருக்கிறார்.

நாயகி வசந்தி ஆக நிகிலா விமல். இதுதான் இவருக்கு அறிமுகப்படமாம். நடிப்பில் தடுமாறுகிறார். அவரே டப்பிங் பேசியிருப்பார் போலிருக்கிறது. பேச்சில் மலையாளவாடை அடிக்கிறது.

பாலாஜியின் நண்பனாக அப்புக்குட்டி, பாலாஜியின் அம்மாவாக நடித்திருப்பவர் ஆகியோர் அப்படியே அச்சு அசல் கிராமத்து மனிதர்களாகவே தெரிகிறார்கள். எந்தக் காட்சியிலும் நடிக்கிறார்கள் என்பதே தெரியவில்லை.

திருச்சிபக்கத்தில் ஒருகிராமத்தில் நடக்கும் கதை. அந்தக் கிராமத்துப் பின்னணியை மிக இயல்பாக தன் ஒளிப்பதிவின் மூலம் படத்துடன் ஒன்றவைக்கிறார் ஒளிப்பதிவாளர் கொளஞ்சி குமார். கிளைமாக்சுக்கு சற்று முன்பு அந்த முக்கியமான திருப்புமுனைக்காட்சிகளில் படத்தொகுப்பாளர் தீனா தம்மைப் பற்றிப் பேச வைத்திருக்கிறார்.

வி.ஏ. சார்லியின் பின்னணி இசை எங்கெங்கு தேவையோ அந்த இடங்களில் உயிரோட்டத்தை ஏற்படுத்துகிறது.


இயக்குனர் ரகுபதி கதைக்களம் நடக்கும்



கிராமம், முக்கிய கதாபாத்திரங்களின் வடிவமைப்பு ஆகியவற்றில் காட்டிய அக்கறையை திரைக்கதையிலும் இன்னும் கூடுதலாகக் காட்டியிருக்கலாம்.

பாலாஜி, நிகிலா இடையில் காதல் மலர்வதற்கான காட்சி மிக அழுத்தமாகப் பதியவில்லை. அது சரியாக இருந்திருந்தால் அது அடுத்தடுத்து வரும் காட்சிகளுக்கும் படத்திற்கும் பலத்தைக் கொடுத்திருக்கும். நாயகி சம்பந்தப்பட்ட அந்த ஒரே ஒரு 'டுவிஸ்ட்டைத்' தவிர வேறு எதுவும் திரைக்கதையில் அழுத்தமாக சொல்லப்படவில்லை.

ஒன்பது குழி, சம்பத் ஆழம் குறைவு




# 'அஜந்தகுமாரின் இனிப்புக்கதைகள்'

## உருசியில் திளைத்தல்

உடுவில் அரவிந்தன்

இளமைப்பருவம் மிகவும் இனிப்பானது. கனவுகளைக் கணக்கின்றி விதைத்துச் செல்வது. அத்தகைய மாயங்களை இலாவகமாகக் கையாளக்கூடிய பக்குவத்தை அனுபவங்களின் வாயிலாகப் பரிசளிப்பது. காலங் கடத்தலின் அந்திமப்புள்ளியில் அவற்றை அசைபோடும் போது கிடைக்கின்ற சுகம் அலாதியானது. அஜந்தகுமாரின் இனிப்புகளும் அவ்வாறான உணர்வுகளையே எமக்குத் தருகின்றன.

ஜீவநதியின் 136வது வெளியீடாக வெளிவந்துள்ள இந்தத் தொகுப்பில் பதினான்கு இனிப்புப் பொதிகள் உள்ளன. ஒவ்வொரு பொதியும் தன்னளவில் மூன்று இனிப்புகளையும் அவற்றுக்கான சிறுகுறிப்பையும் கொண்டதாக்க் கட்டப்பட்டுள்ளது. அந்தக் குறிப்புகள் சுவைப்பின் எல்லையிலேற்படுகின்ற அனுபவத்தொற்றலுக்கு அனுசரணையாக விளங்குகின்றன. எழுத்தாளர் குப்பிழான் ஐ.சண்முகன் அவர்களின் கூற்றுப்படி, இதனை 'தமிழ் இலக்கியத் தின் புதிய வடிவம் அல்லது புதிய உத்தி" எனலாம்.

தங்களுடைய பேரர்களின் பெயர்களும் பெற்றோரின் பிறந்தநாள்களும் தெரியாத குழந்தைகளின் உலகம், அபாயகரமான பண்பாட்டுச் சிதைவைநோக்கிப் பயணிப்பதாகவே கருத வேண்டியுள்ளது. அதேபோன்று நடந்துமுடிந்த விடுதலைப் போராட்டம் குறித்த அறிதல் களுமற்ற உலகில் அவர்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். பிரபல நடிகர்களையும் அவர் களின் செயற்கையான மெய்வெளிப்பாடுகளையும் பிரதிபலிக்குமளவுக்கு எங்களுடைய வரலாற்றைத் தெரிந்துகொள்ளும் ஆர்வம் அவர்களிடமில்லையென்பது வருத்தத்துக்குரி யது. அதற்கான வழிகாட்டுதல்களை வழங்காத பெற்றோரினதும் ஆளுமைகளினதும் போக்குகள் வேதனைய ளிப்பவை. இப்போது வரலாறுகள் விரும்பி யவாறே எழுதப்படு கின்றன. அந்த வகையில் 'வரலாறு இல்லாமலும் வாழ்வோம்' என்ற அஜந்தகுமாரின் எள்ளலான ஆதங்கம் கவனத்துக்குரியதாகின்றது.

உறக்கம் மற்றும் விழிப்புப்பற்றிய அலசலாக அமையும் 'தூங்காமனம் கதைகள்' அகவிழிப் பின் அவசியம் குறித்துப் பேசுகின்றன. 'நாம் தூக்கத்தை மனதுக்குக் கொடுத்துவிடக் கூடாது. அது ஒரு விழிப்புநிலையில் பூனையின் கண்களைப்போல எந்தச்சாமத்திலும் மினுங்கிக்கொண்டிருக்க வேண்டும்' என்ற முத்தாய்ப்பு எமக்குள் உலாவத் தொடங்குகின் றது.

இதிலுள்ள சுவையான கதைகளாகச் 'சோறும் வேறும்' விளங்குகின்றன. நுள்ளான் கலந்த சோற்றை உண்ட அனுபவமும் மச்சக்கோப்பையின் மனைவி பரிமாறியதால் கோபித்துக் கொண்டு சாமியாராகப் போனவரின் (விட்டு)விடுதலை யாதலும் சோற்றின் அருமையை அறிந்த புலம் பெயர்ந்த ஒருவரின் தீவிர கவனமும் நுணுக்கமாகப் பதிவுசெய்யப் படு கின்றன. மலைமகளின் ஒருகோப்பை தேநீர்தொடக்கம் எஸ். ராமகிருஸ்ணனின் நெடுங்குருதிவரை சோற்றின் சுவை வாசத்துடன் பரவியிருக்கிறது.

அதேபோன்று, 'எங்கேயும் எப்போதும்' கதைகளில் பேருந்துப் பயணங்களில் சம்பவங் களினூடாக மனிதர்களைப் படிக்கும் பேறனுபவம் சித்திக்கின் றது. ஆசிரியரின் ஆய்வு மனமும், உளவியல்சார்ந்த அவதானிப்பும் இத்தகைய பதிவுகளுக்குத் துணையாகின்றன.

இந்தத் தொகுப்பின் தலைப்பாகிய இனிப்புக்கதைகள் உரையாடல்மொழியின் அற்புத மான நகர்வில் விதம்விதமான இனிப்புகளை எமக்குக் காண்பிக்கின்றன. இந்திய அமைதிப் படைக்காலத்தில் நாவிலே கசந்த இனிப்புகளும் நண்பர்களுக்குத் தெரியாமல் காற்சட்டைப் பைக்குள் வைத்துச் சாகசமாக உரித்த இனிப்புகளும் இனிப்பு வாங்குவதற்காகச் செய்த சின்னச்சின்னக் களவுகளும் அற்புதமான இளம்பிராயத்தை எங்களுக்கு நினைவூட்டு கின்றன. நாவின் இனிமையைவிடவும் நயக்கவல்ல பலவற்றைச் சொல்லி, உள்ளத்து இனிமையே நிறைவெனவும், உயிர்த்தமிழே உன்னதமெனவும் காட்டுவது சிறப்பு.

ஒரு படைப்பு முழுமைபெறுவது அதன் அனுபவத்தொற்றலிலேயே சாத்தியமாகிறது. அதுவே படைப்பின் நோக்கத்தை இலகுவாக்குகின்றது. அந்தவகையில், வரமும் சாபமும் கதைகள் தனித்துவமானவையெனலாம். பிள்ளைகளைப் பிரிந்து தனிமையில் தவிக்கும் முதுமைகளும், பிள்ளைகளோடிருந்தாலும் தனிமையாய் உணரும் முதுமைகளும் இவ்வாறு விதிக்கப்பட்ட வாழ்வுடன் அல்லாடுவதை உருக்கமாகச் சொல்கின்றன. குறிப்பாக, வெள்ளவத்தையில் அடுக்குமாடிக் குடியிருப்பில் தனிமையாக வாழும் முதியபெண்ணின் உணர்வுகள் அற்புதமாகப் பதியப்பட்டுள்ளன. வசதியான வாழ்வு வரமாகவும் அதுவே பெருஞ்சாபமாகவும் மாறுவதை வாசிப்பின் முடிவில் அனுபவித்துணரலாம். பொருத்தமான கவிதைவரிகள் இக்கதைகளுக்கு வலுச்சேர்க்கின்றன.

**"ஜன்னல்களுக்கு**
**ஒரு காலத்தில் கால்கள் இருந்தன**
**சிறகுகள் இருந்தன**
**ஆசைகள் இருந்தன...**
**இந்த ஜன்னல்களை யாராவது**
**திறந்துவிடுங்களேன்**
**குளிர் என்றாலும் பரவாயில்லை**
**உயிர்போகிறது"**

என்று தவிக்கும் முதுமை ஒரு வேதாளம்போல எங்களுடைய முதுகுகளில் தொற்றிக் கொள்கிறது. அது தீராப்பசியுடன் எழுப்பும் கேள்விகள் காலங்காலமாகத் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன.

இந்தத் தொகுதியிலுள்ள கதைகளில் சிறுபராய நினைவுகளை இன்றளவும் சுமப்பனவாக "நாவலும் ஆவலும்", "நீரின்றி அமையா நினைவு" ஆகியவற்றைச் சொல்லலாம். நாவல்களின் சுவையும், நீர்விளையாட்டுகளின் குதூகலமும் கதைகளின்வழியே இழையோ டிக்கொண்டிருக்கின்றன. வாய்க்கால் நீரிலே குளிக்கும் காகங்கள் அஜந்தகுமாரின் சொற்களால் "நீரை வரைந்துகொண்டே பறக்கின்றன".

மலநீக்கமென்பது, ஆன்மீகத்தில் மட்டுமன்றி அன்றாட வாழ்விலும் அவசியமானது. அளவில்லாத ஆனந்தத்தை அள்ளித்தருவது. அதையே பேரின்பப் பெருவாழ்வென்று பெரியோர் உரைத்தனர். அதுபற்றிய சுகமான அனுபவங்களை 'மலன்" கதைகள் இரசனையோடு அலசுகின்றன. மேலும், "சோதிடம் ஒரு திடம்" கதைகளைப் படிக்கும்போது, நெருக்கடிகள் முற்றிய காலத்தில் மலிந்திருந்த சோதிடநிலையங்கள், ஆன்மீகமென்ற மெய்ஞ்ஞான நிலைக்கப்பால் மக்களை உளரீதியாக வசப்படுத்தி, வருமானங்கொழிக்கும் வியாபாரமையங்களாக விளங்கியமை நினைவுக்கு வருகின்றது. இங்கு அந்தக் களங்கள் அற்புதமாகப் பதிவுசெய்யப்படுகின்றன.

இன்னும் சில கதைகள் இராணுவத்துப்பாக்கிகளின் அதிகாரங்களால் அப்பாவிகள் எதிர்கொண்ட பாடுகளைப் பேசுகின்றன. காலங்காலமாகச் சடலங்களைத் தாங்கிய "பெருமைகொண்ட" வாங்கும் துப்பாக்கி யேந்திய சிப்பாய் பல்கலைக்கழகமாணவனை மிரட்டிய சம்பவமும் பல்கலைக்கழக ஆர்ப்பாட்டத்தின்போது இராணுவம் நடாத்திய துப்பாக்கிச்சூட்டில் சிதறிக்கிடந்த செருப்புகளும், ஒரு காலத்தில் இம்மண்ணில் சாமானிய மக்கள் அனுபவித்த கொடுமைகளை உயிர்ப்புடன் சொல்கின்றன.


சைவவழிபாட்டு மையமான செல்வச்சந்நிதிகோவிலில் ஏற்பட்ட மூன்று அனுபவங்கள் 'நெருக்கடி குழந்தையாக மாறுதல்" கதைகளாக எழுதப்பட்டுள்ளன. தலைக்கவசம் மறந்த கதையும், சூரன் போரில் சிதறிய மாங்கொப்புக்காக அசுரர்களைப்போல மல்லுக்கட்டுதலும், அவிழ்ந்த வேட்டியால் குழந்தையின் ஆசைகளைப் புறந்தள்ளும் தந்தையின் மனநிலையும் உளரீதியான தர்க்கங்களுடன் முன்வைக்கப்படுகின்றமை சிறப்பாகும். இவற்றின் வரிசையில் "அவரவர் பார்வை அவரவர் கோணம்" நாங்கள் உள்ளூர நினைப்பதுவும் உண்மையும், ஒன்றுக்கொன்று மாறுபாடாக அமைவதைச் சொல்கிறது. பொதுவெளியில் ஏளனமாக நோக்கப்படும் மூன்றாம் பாலின மாந்தரை முன்வைத்து இக்கதைகளை எழுதியிருப்பது கவனத்துக்குரியது. இவ்வாறே "சதிபதி - சரிநிகர்" கதைகள் கணவன் மனைவிக்கிடையே வழக்கமாக ஏற்படுகின்ற முரண்பாடு களையும் அவற்றைக் கடந்த ஆழமான நேசத்தையும் அற்புதமாக வெளிப்படுத்துகின்றன. அத்தகைய முரண் நிலைதான் எங்கள் சமூகம் கட்டமைத்துள்ள வாழ்வு முறைமையாகும்.

நெறிகளைப் போதிப் பனவே இலக்கியங்களெனின், அந்த அறிதல் சாதாரணமான வாழ்க்கையிலிருந்தே எடுத்துக்கொள்ளப்படுகின்றது என்பது இக்கதைகள் மூலமாக உணர்த்தப்படுகின்றது.

இனிப்புக்கதைகளில் தொடக்கம், உச்சம் முடிவு என்ற வழக்கமான வாய்ப்பாட்டை எதிர்பார்ப்பவர்களும், அவற்றிலே சுவறியவர்களும் நிச்சயமாக ஏமாந்துபோவார்கள். இவை வாசிப்பதற்கு இலகுவானவை. மொழியின் கதவுகளை ஓசையின்றித் திறந்து ஒருகாலத்தின் அனுபவங்களைப் பரிசளிக்கக்கூடியவை. யாழ்.பல்கலைக்கழக சமூகவியல் துறையின் தலைவர் இராஜேஸ் கண்ணன் முன்னீட்டிலே குறிப்பிட்டதுபோல, "நிகழ்வின் வெளிப்பாட்டின் பிரதிபலிப்பு எழுத்தாக நாட்குறிப்பு எழுதுதலின் சுயசரி தைப்பாணி' என்பதை ஒவ்வொரு கதையும் உறுதிசெய்கின்றமை சிறப்பம்சமாகும்.

ஞாபகங்களால் கட்டப்பட்டதே வாழ்வு. அந்த ஞாபகங்களைத் திரும்பவும் மீட்டுப் பார்ப்பது பெருவாழ்வு. ஊருறங்கிய இராப்பொழுதுகளில், தனிமையின் நெடியகணங்களில் அமிழ்ந்தவாறு, இந்தக் கதைகளை வாசித்துப்பாருங்கள். நினைவிழைகளின் ஊடாடலில் உரு கிப்போவீர்கள். அதுவே இனிப்புக்கதைகளின் சுவைகளில் திளைக்கின்ற பேரனுபவமாகும்.

# மணம் வீசும் மல்லிகை



சிவசுப்பிரமணியம் சுரேன்

'மலர்களின் இராணி' என்று அழைக்கப்படும் மல்லிகையானது, புளியங்குளம் பகுதியில் இரண்டு ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்படுகின்றது. "மற்றவர்களுக்கு மணத்தை கொடுக்கின்ற மல்லிகை உங்களுக்கு பணத்தையும் கொடுக்கும்" என்கிறார் வவுனியா புளியங்குளத்தில் மல்லிகைத்தோட்டம் நடத்திவரும் தம்பாப்பிள்ளை பிரமேந்திரராஜா.

கோடைமுடிந்து ஆவணி முதல் கார்த்திகை வரையான காலப்பகுதியில் மல்லிகையைப் பயிரிடலாம். உழுவதற்கு முன்பாக ஏக்கருக்கு ஐந்நூறு கிலோ கிராம் வீதம் கூட்டெருவைத் தூவ வேண்டும். மண்புழு உரத்தையும் கூட்டெருவுக்குப் பதிலாகப் பயன்படுத்தி சிறந்த பலனைப் பெறலாம். அதன் பின்னர், நன்றாக உழுது, ஆறடிக்கு ஆறடி அல்லது மூன்றடிக்கு மூன்று அடி இடைவெளி விட்டு ஒரு அடி அகலத்திற்கு குழிகளைத் தயார் செய்தல் வேண்டும். ஒவ்வொர் குழியிலும் இரண்டு பதியன் தடிகளை அல்லது கன்று ஒன்றை நடுதல் வேண்டும். இரண்டு பதியன் தடிகளும் முளை விடுமாயினும், ஒன்று முளைக்காதபோது மற்றையது காப்பாற்றிவிடும். இடைவெளி குறையும் போது செடிகளில் விளைச்சல் குறைய வாய்ப்புள்ளது. நடும்போது, கன்றின் வேர்களை நான்கு புறமும் நன்றாகப் பரப்பி மண்ணையிட்டுமூடி உடனடியாக நீர்பாய்ச்சுதல் வேண்டும். அப்போதுதான் வேர்ப்பிடிப்பு நன்றாக அமையும். நான்கு நாட்களுக்கு ஒருதடவை தண்ணீர் பாய்ச்சலாம். கடும் கோடையில் அடிக்கடி தண்ணீர் பாய்ச்ச வேண்டியிருக்கும். நடுகை செய்ததில் இருந்து முப்பதாவது நாள் அளவில் செடி நன்கு தழைத்து வர ஆரம்பிக்கும். அப்போது செடிகளின் தூரில் ஐம்பது கிராம் அளவில் கடலைப் பிண்ணாக்கு அல்லது மண்புழு உரம் வைக்கலாம். மாதம் ஒருதடவை ஒவ்வொரு செடிக்கும் இவ்வாறு வைப்பது சிறந்தது.

இயற்கைமுறை செய்கை பண்ணும்பொழுது, மொட்டுக்கள் துளிர்க்க ஆரம்பிக்கையில் ஏக்கருக்கு இருநூறு லிட்டர் ஜீவாமிர்த கரைசலை பாசனத் தண்ணீருடன் கலந்து பிரயோகிக்கலாம் . ஜீவாமிர்த கரைசல், பஞ்சகவ்யா போன்றவற்றை செடிகளுக்கு விசிறுவதன் மூலம் பூச்சி. நோய்த்தாக்கத்தில் இருந்து செடிகளைக் காத்துக் கொள்ளலாம்.

ஐப்பசி, கார்த்திகை மாதங்கள் தவிர ஏனைய மாதங்களில் நல்ல விளைச்சல் கிடைக்கும். ஆரம்பத்தில் ஒரு செடியில் இருந்து நூறு கிராம் வரையான பூக்களே கிடைக்கும். விளைச்சல் சிறிது சிறிதாக அதிகரித்து, இருநூற்றைம்பது கிராம் வரையிலும் செல்லும். இரசாயனமுறையிலும் பார்க்க இயற்கைமுறையில் வளர்த்து பெறப்படும் பூக்கள் கூடுதலான நேரம் வாடாமல் இருக்கின்றன. இதன் மூலம் நீண்டநேர பாவனையுடன் கூடுதலான விலைக்கும் விற்க வாய்ப்பு ஏற்படும்.

ஒரு ஏக்கரில் மல்லிகை செய்கை பண்ணுபவர் ஆயிரம் செடிகளை நடலாம். ஒரு செடியில் இருந்து நூறு கிராம் பூக்கள் என கணக்கிட்டாலும், நாள்தோறும் நூறு கிலோ கிராம் பூக்கள் வரை பெற்றுக்கொள்ளலாம். நுகர்வோர் தேவையைப் பொறுத்து, சிறுதோட்டமாகவும் அமைத்து பூக்களைப் பெறலாம். மல்லிகைப் பூக்களைப் பொறுத்தவரை, வருடத்தில் எல்லாக் காலப்பகுதியிலும் நுகர்வுத் தேவை இருந்து கொண்டே இருக்கும். அனைத்து மங்கல, அமங்கல சடங்குகள், அனைத்து விதமான மதஆலயங்கள், அனைத்திலும் மல்லிகைப் பூக்களுக்கான தேவைகள் இருந்து கொண்டே இருக்கின்றது. அத்துடன் சித்த ஆயுள் வேத மருந்துத் தயாரிப்புகளிலும் மல்லிகைப்பூ பயன்படுத்தப்படுகின்றது. ஒரு செடியில் இருந்து இருபத்தைந்து நாட்களுக்கு பூக்கள் தொடர்ச்சியாகக் கிடைத்தவாறு இருக்கும். பின்னர் இருபது நாட்களுக்கு பூக்கள் உருவாகாது . சராசரியாக ஒரு செடியில் இருந்து ஒரு வருடத்திற்கு நூற்றைம்பது நாட்கள் வரை பூக்களைப் பெற்றுக் கொள்ளலாம். சுழற்சி முறையில் செடிகளைப் பராமரிப்பதன் மூலம், அதாவது கவ்வாத்து செய்வதன் மூலம் தேவையான நேரங்களில் பூக்கள் கிடைக்க வழி செய்யலாம்.

விளைவிக்கப்பட்ட பூக்களை விற்பனை செய்வதில் எந்தவிதமான பிரச்சனையும் இருப்பதில்லை. பெரும்பாலான பூ விற்பனையாளர்கள், மாலை கட்டுவோர் முன்னரேயே முன்பதிவு செய்து பூக்களை பெற்றுக்கொள்வார்கள். கார்த்திகை, மார்கழி மாதங்களில் பூக்கள் கிடைப்பது குறைவடையும் . அவ்வேளைகளில் செடிகளை கவ்வாத்துச் செய்தல் வேண்டும்.

இக்காலப் பகுதியில் ஆட்டெரு பயன்படுத்துதல் செடிகளின் வளர்ச்சிக்கு உகந்ததாகும் . எரு இட்ட பின்னர் செடிகளைச் சிறிது வாட விட்டு தண்ணீர் பாய்ச்சுதல் சிறந்தது. இயற்கை விவசாயிகளுக்கும், இரசாயன முறையில் செய்கை பண்ணுவோருக்கும் மல்லிகையைப் பொறுத்தவரை சாகுபடி செய்யும் முறைகள் ஒரே மாதிரியாகவே காணப்படுகின்றன. பூச்சித் தாக்கங்களைக் கட்டுப்படுத்துவதற்கு பொருத்தமான பூச்சி நாசினியை பயன்படுத்திக் கொள்வதுடன் செடி பூத்து வரும் போது பொட்டாசியத்தைத் தூவுதல் வேண்டும் .

2015ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த மல்லிகைத் தோட்டமானது, இப் பிரதேச மக்களுக்கு வேலை வாய்ப்பை வழங்குவதுடன், பிரதேசத்திற்கு புகழையும் ஈட்டித்தந்துள்ளது. இலங்கையில் மதுரை மல்லிகை விளைவிக்கப்படும் ஒரே ஒரு தோட்டம் இது மட்டுமேயாகும். தமிழ்நாட்டை சேர்ந்த பேராசிரியர்களான டாக்டர். மனோகரன், டாக்டர் . முத்துச்செழியன் போன்றோரினதும் இலங்கையைச் சேர்ந்த பேராசிரியர்கள் டாக்டர். ஜெயராஜா , டாக்டர். குமாரசிங்க ஆகியோரினதும் வழிகாட்டுதலுடன் மல்லிகைச் செய்கையை வெற்றிகரமாக நடாத்தி வருகிறார் தம்பாப்பிள்ளை பிரமேந்திரராஜா.

இலங்கையின் அனைத்து பாகங்களில் இருந்தும் மல்லிகைக்கான நுகர்வோர் இந்த மல்லிகை தோட்டத்தை தேடி வந்தவாறு உள்ளனர். இங்கு தனியே பூக்களாக மட்டுமன்றி மாலைகள், வர்ணம் சேர்த்த மாலைகள், ஏனைய அலங்கார பொருட்கள் போன்றனவும் தயாரித்து விற்பனை செய்து வருகின்றனர். மல்லிகையானது மணம் மட்டுமல்ல பணமும் ஈட்ட வழி செய்யும் என்பதை நிரூபித்துள்ளார் தம்பாப்பிள்ளை பிரமேந்திரராஜா.

# இலங்கையின் கண்கவர் அழகிய இடங்கள்!



கண்டி; மலை நகரான கண்டி சிங்கள மன்னர்களின் கோட்டையாக இருந்தது.



இலங்கை, தொன்மை வாய்ந்த வரலாற்று சிறப்பு ஒரு நாடாகும். நான்கு பக்கமும் நீர்சூழ, மலைகளும், அடர்ந்த காடுகளும் அதன் நடுவே விசாலமான நீர் வீழ்ச்சிக்களும் என சொர்க்கத்தையே கண்முன் காட்டிவிடுவதாய் அமைந்ததுதான் இலங்கைத் தீவு.



சிகிரியா இலங்கையின் இணையற்ற கலைப் பாரம்பரியத்தின் சின்னமாகக் கருதப்படுகிறது. 1144 அடி உயரமான இக்குன்றினுள் அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய சித்திரங்கள் பல உள்ளன.



நான்கு பக்கமும் நீர் சூழ, மலைகளும், அடர்ந்த காடுகளும் அதன் நடுவே விசாலமான நீர் வீழ்ச்சிக்களும் என சொர்க்கத்தையே கண்முன் காட்டி விடுவதாய் அமைந்ததுள்ளது இலங்கைத் தீவு.



கொழும்பு இலங்கையின் தலைநகரமாகும். பரபரப்பான நகரான இங்கு சிறந்த ஹொட்டல்கள், தங்கும் விடுதிகள், ஷாப்பிங் மால்கள் என அனைத்தும் அமைந்துள்ளது.



வெளிநாட்டவர்கள் வருகையால் துரிதமாக வளர்ச்சியடையும் நகரமாக கொழும்பு நகரம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.



**சிங்கராஜா வனம்;** இலங்கையில் அமைந்துள்ள பாதுகாக்கப்பட்ட தேசிய வனமாகும். இதன் உயிரியல் முக்கியத்துவம் காரணமாக 1988ஆம் ஆண்டு முதல் யுனெஸ்கோவினால் உலக உரிமை தளமாக அறிவிக்கப்பட்டுள்ளது.



# இன்றைய நாள்

**மேடம்:** முன்னேற்றம் உண்டாகும் நாள். பணவரவு திருப்தி தரும். மேலதிகாரி ஆதரவுடன் நடந்து கொள்வார். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். பெண்களின் பிரச்சினைகள் அகலும்.

**இடபம்:** நண்பர்களால் ஆதாயம் பெறும் நாள். வீட்டில் நிகழ்ச்சிகள் நடக்கும். உடல் ஆரோக்கியம் பெறும். நிம்மதி கூடும். கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வீர்கள். சிலர் உங்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள்.

**மிதுனம்:** தம்பதி இடையே இருந்த மோதல்கள் விலகும். தடைப்பட்ட வேலைகள் விரைந்து முடியும். கலைத் துறையினர் தேவையான பொருள்களை வாங்குவர்.

**கடகம்:** நல்ல மாற்றங்கள் ஏற்படும் நாள். பணவரவு திருப்தி தரும். உறவினர்கள் மதிப்பார்கள். பொருட்களின் சேர்க்கை அதிகரிக்கும். வியாபாரத்தில் போட்டிகள் குறையும். உத்தியோகத்தில் மேலதிகாரி ஆதரிப்பார்..

**சிம்மம்:** வேலையில் இழுபறி உண்டாகும் நாள். வியாபாரத்தில் கவனம் தேவை. பிறரை மட்டம் தட்டிப் பேச வேண்டாம். மேலதிகாரிகளை அனுசரித்துப் போகவேண்டும்.

**கன்னி:** என்றைக்கோ செய்த தவறுகள் வெளிவரும் நாள். போட்டிகளில் ஈடுபட வேண்டாம். வாக்குக் கொடுத்த விஷயங்களில் சிக்கல் ஏற்படக்கூடும். பொறுப்புகள் ஏற்பதால் வீண் விவாதங்களில் ஈடுபடுவீர்கள்.

**துலாம்:** கணவரின் செயல்பாடுகள் மனதுக்கு திருப்தி தரும் நாள். தாய்வழி உறவினர்களிடம் பகை வேண்டாம். வழக்குகளில் நிதானப் போக்கு காணப்படும்.

**விருச்சிகம்:** பெண்களின் தைரியம் கூடும் நாள். பணியிடத்தில் பெரிய பொறுப்புகள் தேடி வரும். அக்கம் பக்கத்தினருக்கு உதவி செய்வீர்கள். உடல் ஆரோக்கியம் மேம்படும்.

**தனுசு:** திட்டமிடாத விஷயங்களில் மனம் செலுத்தும் நாள். இதுவரை இருந்த சோர்வு நீங்கும். மனதில் புதிய உற்சாகம் பிறக்கும். உறவினருடன் கசப்பு ஏற்படாமல் கவனமாக இருங்கள்.

**மகரம்:** புதிய விஷயம் கற்கும் நாள். முயற்சியில் பொறுமை தேவை. வியாபாரத்தில் அனுபவமிக்க வேலையாட்கள் கிடைப்பர். உறவினருடன் எதிர்பார்த்த அளவு நெருக்கம் இருக்காது.

**கும்பம்:** முயற்சிகளில் வெற்றி கிடைக்கும் நாள். எதிர்ப்புகள் விலகும். எந்த ஒரு வேலையையும் ஆராய்ந்து செய்வீர்கள். வீண் அலைச்சல் இருக்காது.

**மீனம்:** அரசால் ஆதாயம் பெறும் நாள். உடன்பிறந்தவர்கள் பாசமழை பொழிவார்கள். முக்கிய பிரமுகரின் உதவி கிடைக்கும். பெண்களின் விருப்பத்திற்கேற்ப எதுவும் நடக்கும்.

# தொழில் கிடைக்காத பட்டதாரிகள் 17வரை மேன்முறையீடு செய்யலாம்

*அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவிப்பு*

கொழும்பு, செப்.6

62,000 பட்டதாரிகளுக்கு தொழில் வாய்ப்பு வழங்கும் அரசாங்கத்தின் வேலைத் திட்டத்தின் கீழ், இதுவரை தொழில் கிடைக்காத பட்டதாரிகள் எதிர்வரும் 17 ஆம் திகதி வரை மேன்முறையீடு செய்யமுடியும் என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பட்டதாரி அல்லது இதற்கு முன்னர் தொழில் ஒன்றிலிருந்து ஊழியர்



சேமலாபநிதி நிதியத்தின் அங்கத்துவராக இருந்தால் மேற்படி தொழில் வாய்ப்பு கிடைக்காமல் போகும் என்று அதற்கான செயற்பாட்டு முறைமைகளில் குறிப்பிடப்பட்டிருந்தாலும், விண்ணப்பதாரிகள் தமது உண்மையான நிலையைக் குறிப்பிட்டு மேன்முறையீட்டைச் சமர்ப்பிக்க முடியும். சில பட்டதாரிகள் கடந்த காலங்களில் அவர்களுக்கு தொழில் இல்லாத நிலையில், ஏற்பட்ட பொருளாதார பின்னடைவைக் கருத்திற்கொண்டு தாம் பெற்றுக்கொண்ட பட்டத்திற்கு பொருத்தமற்ற சிறு தொழில்களில் ஈடுபட்டுள்ள நிலையில், அவர்கள் ஊழியர் சேமலாப நிதியத்தின் அங்கத்தவர்களென மேற்படி செயற்பாட்டு முறைமைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு தமக்கு பொருத்தமில்லாத சம்பளத்தைப் பெற்றுக்கொள்கின்ற பட்டதாரிகள் இத்தகைய அனைத்து காரணங்களையும் குறிப்பிட்டு தமது மேன்முறையீட்டை எதிர்வரும் 17 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்ப வேண்டும் -என்றார். (ற.இ)

## ஹெரோய்னுடன் நால்வர் கைது!



கொழும்பு, செப்.6

பாணந்துறை பகுதியில் ஹெரோய்னுடன் நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அந்தப் பகுதியில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பில் இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடமிருந்து 422 கிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (வ-இ)



## விழிப்புணர்வு கருத்தரங்கு

கொடிகாமம், செப்.6

சட்ட ஆவணங்களைப் பெறுதல், சிறுவர், பெண்கள் பிரச்சினைகள் மற்றும் காணிப் பிரச்சினைகளைக் கையாள்வது தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில், இந்த விழிப்பு ணர்வுக் கருத்தரங்கானது புத்தூர்ச் சந்தியில் அமைந்துள்ள மீசாலை வடக்கு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

இராமாவில், கைதடி மேற்கு, கைதடி தெற்கு, கைதடி கிழக்கு நவபுரம், மீசாலை கிழக்கு கோயிற் குடியிருப்பு, மீசாலை வடக்கு, அல்லாரை வடக்கு, நுணாவில் மேற்கு, சந்திரபுரம், மட்டுவில் கிழக்கு ஆகிய 10 கிராமங்களைச் சேர்ந்தவர்கள் இந்தக் கலந்து ரையாடலில் கலந்து கொண்டனர். (ற-159)



## சிற்பசாஸ்திரி கௌரவிப்பு

கொடிகாமம், செப்.6

கொடிகாமம் வடக்கு கேசரப்பிட்டி பிள்ளையார் ஆலயத் துக்கான சிற்பத் தேரை உருவாக்கிய சிற்பசாஸ்திரி கடந்த வியாழக்கிழமை ஆலய நிர்வாகத்தி னரால் கௌரவிக்கப்பட்டார்.

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையைச் சேர்ந்த சின்னத் துரை சிற்பாலய விஸ்வப் பிரம்ம ஸ்ரீ சின்னத்துரை நந்த குமார் விநாயகப் பெருமானுக்கும் அம்பாளுக்கும் சிற்பத்தேர்களை உருவாக்கியிருந்தார். (வ-159)

## கனடா விபத்தில் தமிழ் இளைஞர் இருவர் சாவு!


கொழும்பு, செப்.6



கனடாவில் இடம்பெற்ற வீதி விபத்தில் தமிழ் இளைஞர்கள் இருவர் உயிரிழந்துள்ளனர் எனத் தெரியவந்துள் ளது. ஒன்டாரியா பகுதியில் நேற்று முன்தினம் இரவு இவ் விபத்து இடம் பெற்றுள்ளது. உயிரிழந்தவர்களில் ஒருவர் ஒஷாவா பகுதியைச் சேர்ந்த 29 வயதுடைய ஜகன் தனபாலசிங்கம் என்பவர் எனத் தெரியவந்துள்ளது. இவருக்கு கடந்த மாதமே திருமணம் ஆகியிருந்தது மற்றொரு இளைஞர் விட்சேர்ச் ஸ்டொவ்வில் பகுதியைச் சேர்ந்த 24 வயதுடையவர் எனத் தெரியவந்துள்ளது.

இவர்கள் இருவரும் பயணித்த கார் வேகக்கட்டுப் பாட்டை இழந்து மரத்துடன் மோதுண் டதிலேயே விபத்து ஏற்பட்டுள்ளது என அந்நாட்டுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (வ-இ)





# ராஜமஹா விகாரையில் பிரதமர் மத வழிபாடு

கொழும்பு, செப்.6

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கதிர்காமம் கிரிவெகர ராஜமஹா விகாரையில் தாதுகோபுர வழிபாட்டில் நேற்று ஈடுபட்டார்.

ருஹுணு மாகம்பத்துவையின் தலைமை சங்கநாயக்கரும், கதிர்காமம் சாஷனாரக்ஷக சபையின் தலைவரும் கிரிவெகர ரஜமஹா விகாரையின் விகாராதிபதியுமான சங்கைக்குரிய கொபவக தம்மிந்த தேரரை சந்தித்து பிரதமர் ஆசி பெற்றார். தொடர்ந்து கதிர்காமம் ஆலய வளாகத்துக்கு வருகை தந்து அஷ்டஎல போதியில் வழிபாடு நடத்தினார். (வ-இ)

# 20க்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தொடர முடியும்!

## ரோஹித அபேவர்த்தன தெரிவிப்பு

**கொழும்பு, செப்.6**

**அரசமைப்பின் 20ஆவது திருத்தத்தை எதிர்த் தரப்பினர் உயர் நீதிமன்றில் சவாலுக்குட்படுத்த முடியும். எந்தத் தடையையும் அரசு ஏற்படுத்தாது. அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தை காட்டிலும் 20ஆவது திருத்தம் சிறந்ததாகவே உள்ளது.**

இவ்வாறு துறைமுக அபிவிருத்தி அமைச்சர் ரோஹித அபேவர்தன தெரிவித்தார்.

களுத்துறை பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

நாட்டுக்கு பொருந்தும் வகையில் புதிய அரசமைப்பு உருவாக்கப்படும் என்ற வாக்குறுதியை மக்களுக்கு வழங்கினோம். அதைக் கருத்தில்கொண்டே மூன்றில் இரண்டு பெரும்பான்மையிலான அரசு தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றும் விதமாகவே அரசமைப்பின் 20ஆவது திருத்தம் உருவாக்கப்பட்டு சட்டமூல வரைபு வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது. குறைபாடுகள் காணப்படுமாயின் எதிர்தரப்பினர் சட்ட மூலத்தை சவாலுக்குட்படுத்தி நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யலாம்.

ஜனாதிபதிக்கு அதிகாரங்கள் முழுமையாக வழங்கப்பட்டுள்ளது. அரச நிர்வாகம் முறையாக இடம்பெற வேண்டும். அரசமைப்பின் 19ஆவது திருத்தம் நிறைவேற்று அதிகாரத்தை மாத்திரமல்ல ஏனைய துறைகளின் அதிகாரங்களையும் மலினப்படுத்தியது . இதன் பெறுபேறு பாரதூரமாக அமைந்தது. இவ்வாறான நிலைமை இனியொரு போதும் ஏற்படாது. என்றார்.(எ-இ)

# மணல் ஏற்றினரென 5 சாரதிகள் கைது

கிளிநொச்சி, செப். 6

மணல் ஏற்றினர் என்ற குற்ற ச்சாட்டில் சிறப்பு அதிரடிப் படையினரால் ஐவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான சிறப்பு அதிரடிப்படையினருக்குகிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்லாற்றுப்பகுதியில் அனுமதிப்பத்திரத்துக்கு முரணான வகையில் மணல் ஏற்றினர் என்ற குற்றச்சாட்டில் நான்கு டிப்பர்களின் சாரதிகளும் ஓர் உழவு இயந்திர சாரதியும் கைது செய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என பொலிஸ் சிறப்பு அதிரடிபடையினர் தெரிவித்தனர். (த-113)

# மதில் விழுந்ததில் சிறுவன் உயிரிழப்பு

திருகோணமலை, செப்.6

திருகோணமலை தம்பலகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் மதில் விழுந்ததில் இரண்டு வயது சிறுவன் உயிரிழந்துள்ளான் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச் சம்பவம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது. உயிரிழந்த சிறுவன் முள்ளிப்பொத்தானை யூனிட்-8 பகுதியைச் சேர்ந்த நசீர் முஸ்ரிப் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

உடைந்திருந்த மதிலுக்கு அருகில் சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருந்தபோது குறித்தசிறுவன் மீது மதில் விழுந்ததில் சிறுவன் உயிரிழந்தமை ஆரம்பகட்ட விசாரணை மூலம் தெரியவந்துள்ளது. உயிரிழந்த சிறுவனின் சடலம் தற்போது கந்தளாய் வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ந)

# சிங்கராஜ வனப்பகுதிக்கு அச்சுறுத்தல்

## யுனெஸ்கோவிடம் மங்கள முறையீடு

கொழும்பு, செப்.6

இலங்கையில் உள்ள சிங்கராஜ வனப்பகுதிக்கு அச்சுறுத்தல் இருப்பதாக ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் கலாசார அமைப்பான யுனெஸ்கோவுக்கு முன்னாள் வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர முறையிட்டுள்ளார். அவர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளதாவது;

1988ம் ஆண்டில் யுனெஸ்கோ வால் உலக பாரம்பரிய சொத்தாக அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் உள்ள சிங்ராஜ வன இருப்பு அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது. முன்னைய சந்தர்ப்பங்களிலும் வனப்பகுதியின் எல்லையில் சாலைகள் அமைக்க பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

எவ்வாறாயினும் 2020 ஓகஸ்ட் 10ஆம் திகதியன்று, இலங்கை இராணுவத்தின் உதவியுடன் சிங்கராஜ வன எல்லையில் அமைந்துள்ள லங்காகமவிலிருந்து தெனியாய வரையும் சாலை ஒன்றை அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எனினும் இதன்போது வரலாற்று இடங்களில் மண்சரிவு உட்பட்ட இயற்கை அனர்த்தங்கள் குறித்த எவ்வித வழிகாட்டுதல்களும் இராணுவத்தினருக்கு வழங்கப்பட்டிருக்க வில்லை.

இந்நிலையில் ஐக்கிய நாடுகள் சபைக்கு அறிவிக்கப்பட்ட நிலையில் 2020 ஓகஸ்ட் 19ஆம் திகதியன்று இக் கட்டுமாணப் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன. இந்தத் திட்டம் லங்காகம கிராம மக்களின் போக்குவரத்து வசதி கருதி மேற்கொள்ளப்படுகின்றது என கூறப்பட்டபோதும், அது தனிப்பட்டவர்களின் வர்த்தக நோக்கத்தின் அடிப்படையிலேயே ஆரம்பிக்கப்பட்டது எனத் தெரிவித்துள்ளார். (ந-இ)

# கொவிட் -19 விழிப்புணர்வு

பருத்தித்துறை, செப் 6

கொவிட்-19 விழிப்புணர்வு செயலமர்வு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை யாழ்.வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெற்றது. இதில் பருத்தித்துறை பொது சுகாதாரப் பரிசோதகர் ஆ.ஜென் சன் றொனால்ட் வளவாளராகக் கலந்துகொண்டு கொரோனா தடுப்பு பற்றிய விழிப்புணர்வை பல்லூடகம் வழியாக படக்காட்சிகளுடன் தெளிவு படுத்தினார்.

பாடசாலையின் சுகாதார மேம்பாட்டு நடவடிக்கைகளில் தன்னார்வத்துடன் ஈடுபவதற்காக தெரிவுசெய்யப்பட்ட மாணவிகளுக்கு தனிமைப்படுத்தல் அறையின் பயன்பாடு, முதலுதவி மற்றும் கொரோனா பாதுகாப்பு ஆயத்தங்களை சுற்றறிக்கைக்கேற்ப கடைப்பிடித்தல் தொடர்பாகவும் செயலமர்வு இடம்பெற்றது.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் ஒருங்கிணைப்பு மற்றும் அனுசரணையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பாட சாலையின் தனிமைப்படுத்தல் அறையின் பயன்பாட்டை மேம்படுத்துவதற்கான உபகரணங்களும் செஞ்சிலுவைச் சங்கத்தினால் வழங்கப்பட்டன. (ந-9)



# சிறைக் கூரை பிரித்து தப்பிய கில்லாடிகள்

கொழும்பு, செப்.6

குருநாகல், குளியாப்பிட்டிய சிறைச்சாலையில் இருந்து 4 கைதிகள் கூரையைப் பிரித்துத் தப்பிச் சென்றுள்ளனர்.

கம்புரப்பொல, கல்பொல, நாரங்கொட, அலஹிட்டியாவ ஆகிய பிரதேசங்களில் போதைப்பொருள் பாவனை குற்றச்சாட்டில் கைதாகி சிறை வைக்கப்பட்டிருந்த கைதிகளே தப்பிச் சென்றுள்ளனர் என்று சிறைச்சாலை அதிகாரிகள் கூறுகின்றனர்.

குளியாப்பிட்டி பொலிஸஸார் சிறப்புக் குழு அமைத்து இவர்களைக் கைது செய்வதற்கான விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (எ-இ)

# NCT / NCIT / NVQ LEVEL 5 / 6 கற்கும் தொழில்நுட்பவியல் மாணவர்களே !

## IVQ Level-5 UK Standard

City & Guilds Believe you can

June Dec 2021

**Level 5 பாடநெறி**

- Civil Engineering
- Electrical and Electronics
- Telecommunication

Open For Registration

6 Month Duration (Including Practical Assignments & Projects)

ஆரம்பம் :- 19,20 September 2020.

வார / வார இறுதி / மாலை நேர வகுப்புக்கள்

Course Director :- Prof. K. Chandirabose

**APSS International**
189, 1st Floor, K K S Road,
Chunnakam, Jaffna.

SRI LANKA'S NO 1 AWARD WINNING CENTER

Hotline:021-2244666,077-2306642.

## VACANCIES @ APSS INTERNATIONAL (JAFFNA BRANCH)

### Lecturers / Instructors & A/L Teachers

We the APSS INTERNATIONAL have been conducting foreign Engineering / Technology courses sucessfully for the past two decades.
We have decided to open a branch in Chunnakam, Jaffna shortly.
interested personnel can apply for the following Lecturer / Instructor posts .

**Engineering**

- *Civil Engineering*
- *Quantity Surveying*

**Vocational**

- *ICT Technician*
- *Dress maker/ Tailor*
- *Beauty Therapy*
- *Graphic Designing*
- *Multimedia Designing*
- *Computer Network Technician*

**AL Technology Stream (Tamil Medium Teachers)**

- *Engineering Technology*
- *Science For Technology*
- *Bio system Technology*
- *Information Technology*

Please forward your CV with contact details & two non-related referees within 10 days of this advertisement Via email :
chelvanbose@hotmail.com
apssengineer@gmail.com

CEO
APSS International

Chelvan
0772306642

## வட மாகாண மாணவர்களுக்குரிய Engineering கற்கைநெறிகள்

APSS INTERNATIONAL லின் கல்வி புரட்சி இப்போது வடமாகாணத்திலும் ஆரம்பிக்கவுள்ளது.
கடந்த இருபத்தாறு ஆண்டுகாலமாக மேல் மாகாணம் மற்றும் கிழக்கு மாகாணத்தில் எமது சேவை முன்னெடுக்கப்பட்டது.
இதன் மூலம் பெருமளவு மாணவர்கள் தங்களது கல்வியை பூர்த்தி செய்தது மட்டுமில்லாது அரச, தனியார் துறைகளில் தொழிலையும் பெற்று எமது நிறுவனத்துக்கு பெருமை தேடி தந்துள்ளனர்.
தற்போது வடமாகாணத்தில் எமது சேவையை விஸ்தரித்திருக்கிறோம்.
எமது நிறுவனத்தில் பாடசாலை மாணவர்கள் முதல் பல்கலைக்கழக மாணவர்கள் வரை அவர்களுக்கு தேவையான பயனுள்ள சகல துறைகளையும் கொண்ட பாடநெறிகள் இருக்கின்ற வேளையில் அவற்றை முறையாக கொண்டுசெல்லக் கூடிய திறமையான அனுபவமுள்ள ஆசிரியர்களும் நிர்வாகமும் இருக்கின்றது என்பதை பெருமையாக சொல்லிக்கொள்ள விரும்புகிறோம்.

எமது நிறுவனம் பாடசாலை மாணவர்களுக்காக School Level English , School Level சிங்களம் Kids Computer Studies, Business English, Business Sinhala, Basic Mathematics, Advanced Mathematics, A/L Technology Studies, சாதாரணதரம் இல்லாத மாணவர்களுக்காக தொழில் அனுபவமுள்ளவர்களுக்கு சாதாரண தரத்துக்கு சமப்படுத்தப்பட்ட NVQ Level 3 தகுதிக்கான சான்றிதழையும் வழங்கும் திட்டத்தையும் வழங்கவுள்ளோம் என்பதனை பெருமையுடன் கூற விரும்புகிறோம் இதன் மூலம் சாதாரண தரம் இல்லையே என்ற ஏக்கத்தை போக்கி மேலும் படிப்பதற்குரிய சந்தர்ப்பத்தை வழங்குகிறோம்.

A/L படித்து பல்கலைக்கழகம் செல்லமுடியாதவர்களுக்காக NVQ Level 3, 4, 5 மற்றும் IVQ Level 3, 4, 5 பாடநெறிகளையும் அதன் மூலம் தொழில் வாய்ப்புக்களை அதிகரிக்கும் வண்ணம் சில நிறுவனங்களோடு இணைந்து தொழில் வாய்ப்புகளையும் வழங்குகிறோம் இதை தவிர பெண்களுக்கான தையல். மற்றும் அழகு சிகிச்சை, சிகை அலங்காரம் போன்ற பாடநெறிகளையும் முன்னெடுக்க உள்ளோம். வறிய குடும்பங்களை சேர்ந்தவர்களுக்கும், அரச ஊழியர்களின் பிள்ளைகளுக்கும், ஓய்வூதியம் பெறும் பெற்றோரின் பிள்ளைகளுக்கும் , போரினால் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தில் உள்ள பிள்ளைகளுக்கும் விசேட சலுகை திட்டமொன்றும் எமது நிறுவனத்தால் வழங்கப்படும் என்பதனையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம்.

NVQ Level 3,4,5 பயிலும் மாணவர்களுக்கு (Electrical & Electronic Engineering & Civil Engineering) துறையில் City & Guilds UK IVQ level 3,4,5 பயில்வதற்கான சந்தர்ப்பத்தையும் வழங்குகிறோம்.

செப்டம்பர் 19ம் திகதி பின்வரும் பாடநெறிகள் ஆரம்பிக்க பட உள்ளன. உங்கள் பதிவுகளை செப்டம்பர் முதலாம் திகதியில் இருந்து செய்து கொள்ளலாம்.

School Level English, Spoken English (School Level), Spoken Sinhala (School Level), Spoken Sinhala (Advanced Level), Kids Computer Studies, Business English, Business Sinhala, Basic Mathematics, Advanced Mathematics, CCTV Camera Systems with wiring (சுய தொழில் வாய்ப்பு ), Computer Hardware Engineering (சுய தொழில் வாய்ப்பு ). தையல் (சுய தொழில் வாய்ப்பு ). Beauty therapy & Hair Dressing (சுய தொழில் வாய்ப்பு ). IVQ Level 4 & 5 Electrical & Electronic Engineering City & Guilds UK Qualification (அரச, தனியார் தொழில் வாய்ப்பு ). IVQ Level 4 & 5 Civil Engineering City & Guilds UK Qualification (அரச, தனியார் தொழில் வாய்ப்பு ). Graphic Designing (சுய. அரச. தனியார் தொழில் வாய்ப்பு.

**குறிப்பு:** எமது சகல பாடநெறிகளும் ஆரம்பிக்கும் நேரம் முடிவடையும் நேரம் அனைத்தும் பெற்றோர் , பாதுகாவலருக்கு குறுந்தகவல் (SMS) மூலம் அறிவிக்கப்படும். மற்றும் ஒவ்வொரு மாதமும் கடைசி சனிக்கிழமைகளில் பெற்றோர், பாதுகாவலருடன் கலந்துரையாடல்கள் இடம்பெறும். இதன் மூலம் ஆசிரியர் மாணவர்கள், பெற்றோர்கள் அனைவரினதும் குறை நிறைகளை அறிந்து செயட்பட முடியும் என நம்புகிறோம்.

Corona போன்ற இக்கட்டான சூழ்நிலைகளில் மாணவர்கள் வருகை தருவதில் சிக்கல் இருக்குமானால் அவர்களின் கல்வியை நவீன தொழில்நுட்பத்தின் மூலம் வீட்டிலிருந்து கற்கை நெறிகளை தொடரும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன் எப்போதுமே அனைவரும் சுகாதார முறையை கடை பிடிக்கும் வண்ணம் எமது நிறுவனத்தில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

எமது நிறுவனம் தற்போது 189, (1st Floor), K K S Road, Chunnakam, Jaffna. வடமாகாணத்துக்கான கிளை அமைந்துள்ளது. விபரங்களுக்கு எமது நிறுவனத்துக்கு வருகை தரமுடியும் தொலைவில் உள்ளவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம்.

APSS International
College of Technological Studies
189, 1st Floor, KKS Road, Chunnakam, Jaffna.021-224-4666
Hotline: 077-2306642, 0772418804.

## தேவை

கிளிநொச்சியில் உள்ள பிரபல புடைவையகத்திற்கு உதவியாளர் தேவை

077 373 4109

## வேலையாள் தேவை

பருத்துறை வீதி, நல்லூரில் உள்ள Good Morning Multi Shop கடைக்கு பெண் வேலையாள் தேவை.

077 790 6224

## விற்பனைக்கு

ATLAS ELECTRONIC BIKE 48 பற்றி மோட்டார் சைக்கிள் (China) விற்பனைக்குண்டு.

077 138 9152

**வவுனியாவில்** விவசாயம், கால்நடை வளர்ப்பு ஆகியவற்றில் அறிவும் அனுபவமும் வாய்ந்த மற்றும் எங்கள் பண்ணைக்கடையை ஒருங்கிணைத்து நிர்வகிக்கக்கூடிய ஆற்றல் வாய்ந்த நபர் தேவை.

சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு : 0762 477 729

## தேவை

தையல் அனுபவமுள்ள பெண்கள் உரும்பிராயிலுள்ள பை உற்பத்தி தொழிற்சாலைக்கு வேலைக்கு தேவை.

077 4764817, 076 711 6566

## வேலையாள் தேவை

Charty Beach Resort Hotel க்கு
1). முகாமையாளர் (Manager) தேவை.
2). தங்குமிட பராமரிப்பாளர்(House Keeper) தேவை.
அனுபவம். வயதிற்கேற்ப சம்பளம் வழங்கப்படும்.

தொடர்பு: 077 3438 373

## சேவை

நீங்கள் அடகுவைத்து மீட்டெக்கமுடியாத நகைகளை எமது நிறுவனத்தின் ஊழியர்கள் மூலமாக நீங்கள் அடகுவைத்த நிறுவனத்திற்கு வருகைதந்து மீட்டு எடுத்து அதற்கான பெறுமதிப்பணம் அவ்விடத்திலேயே தரப்படும் நாடளாவிய ரீதியில் சினேகபூர்வமான சேவை
AAA Gold Centar

076 568 4346

## வீடு காணி விற்பனைக்கு

மானிப்பாய் சந்தியில் 3 பரப்புக்காணியில் 6 படுக்கையறைகளுடன் மேல்மாடி வீடு 14 மில்லியன். மேலும் 2 பரப்புக்காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு.
விலை 4 மில்லியன்

072 768 1144

## காணி விற்பனைக்கு

கோண்டாவில் சந்தியில் இருந்து 500 mதொலைவில் 1 ½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தரகர் தேவையில்லை

077 871 5430, 077 810 3798

## திருத்த வேலைகளுக்கு

கேற் ஓட்டு வேலைகள், கோழிக்கூடுகள், பெயின்ட், பிளம்பிங் போன்ற அனைத்து விதமான வீட்டு வேலைகளும் விலைகளுக்குச் சென்று செய்து கொடுக்கப்படும்.

077 483 5500

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1989 இல் பிறந்த அரச தொழில் புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.

070 126 0678

## வாகனங்கள் வாடகைக்கு தேவை

சொந்த வாகனம் உள்ள வாகன உரிமையாளர்களிடம் இருந்து அனைத்து விதமான வாகனங் களும் எம்மால் வாடகைக்கு பெறப்படும்.
(கார், வான் சிறிய வான். டாட்டா. மகேந்திர. வட்டா. கண்டர். லொறி. டிப்பர். பஸ் வண்டி.மினி பஸ். உழவு இயந்திரம். திருமணக்கார். ஆட்டோ மற்றும் அனைத்து வாகனங்களும் வாடகைக்கு பெறப்படும். (வடமாகாணம் மட்டும்)

தொடர்பு :077 760 9015
திங்கள் முதல் சனி வரை காலை 09.00 மணி தொடக்கம் 5.00 மணி வரை

## வேலையாட்கள் தேவை

மில்லுக்கு வேலையாட்கள் தேவை.

இல.104, மாப்பியன் மில் வீதி, சுதுமலை, மானிப்பாய்

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளிற்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்து தரப்படும்.
1 சதுர அடி - 45 ரூபா

077 334 1281

## கடை வாடகைக்கு

மந்திகையில் மாபிள் பதிக்கப்பட்ட புதிய கடை வாடகைக்கு உண்டு.

077 670 9034

## விற்பனைக்குண்டு

ஆடுக்கடாய் விற்பனைக்குண்டு.

077 488 4470

## தேவை

யாழ்ப்பாணத்தில் Online Learning Application ஐ Market பண்ணுவதற்கு Marketers, Marketing Executive உடன் தேவை.

077 719 9404

## நாகபூசணி திருமண சேவை

மிகப்பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் உடன்தரப்படும்.
இல.5, ஐந்தாம் ஒழுங்கை, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
0771387596, 0719999306

## பதவி வெற்றிடம்

1. முகாமையாளர் (ஆண்)
2. விற்பனை உதவியாளர் (பெண்)
3. பொதியிடலாளர் (பெண்)

முன் அனுபவமும், தகைமையுடையோர் நேரில் சமுகம் தரவும்

No. 175, K.K.S. Road. Jaffna.
077 477 3481, 021 221 6889, 077 623 1295

## தேவை

நல்லூர் கோயில் வீதி மற்றும் சுற்றயல் பகுதியில் 3/4 பரப்பு தொடக்கம் 2 பரப்பு வரையான காணி தேவை

075 55 74444

## பணியாளர் தேவை

வவுனியாவில் அமைந்துள்ள மாபிள் களஞ்சியத்திற்கு களஞ்சிய உதவியாளர் (Labours) உடன் தேவை.
நேரில் வரவும்.

இல. 58, யாழ் வீதி, வவுனியா.
075 925 1270

## விற்பனைக்கு

மாங்கன்று, தேசி, தோடை, ஈரப்பலா, ஒட்டுபலா, கயூ, கொய்யா, மாதுளை, கமுகு, யம்பு, பசன்புறுட், ரகன் புறுட், தென்னங்கன்று, செவிழை தென்னை, விலும்பி நெல்லி, முருங்கன், பப்பா, டொமினேசி மா, அல்போன்சா மா, கோப்பி, பட்டர்புறூட், றம்பிட்டான், கறுவா, கராம்பு, மங்குஸ்த்தான், ஏலக்கா, சீ... அன்னமுன்னா, நாவல், இலுப்பை, பாலை, முதிரை, வா... சவுக்கு, தேக்கு, மலை வேம்பு, ஊர்வேம்பு, சித்திரவே... சமண்டலை, கருங்காலி, காயா கொண்டல்-கொன்றை, நாகமர... அன்னாசி, பொக்ஸ்பிரல், ரெட்பாம், கேவி, கொழும்பு வெற்றிலை, மிளகு மேலும் பல இன பூங்கன்று வகை, சாடி வகை, துளசி மாட... ஐந்தூரியம் விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு: நியூ லங்கா பாம்**
பலாலி வீதி, ஊரெழு மேற்கு பிள்ளையார் கோயில் வீதி, கணேசா பாடசாலை அருகில்
077 612 9343

**நியூ லங்கா பாம்** கிளை:
K.K.S. வீதி, இணுவில்

## பதவி வெற்றிடங்கள்

பேக்கரியில் காலியாக உள்ள பணியிடத்திற்கு பணியாற்ற தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்கள் மாத்திரம் அழைப்பினை மேற்கொள்ளேட்கேட்டுக்கொள்கின்றோம்

வெற்றிடம்
**பேக்கரி பொருள்கள் தயாரிப்பாளர்**
அழைப்பினை மேற்கொள்ள வேண்டிய

தொ.பே: 077 785 8317

## விற்பனை பிரதிநிதிகள் தேவை

கிளிநொச்சி நகரில் இயங்குகின்ற பிரபல வியாபார நிறுவனத்திற்கு ஆண், பெண் விற்பனை பிரதிநிதிகள் தேவை. பல தரப்பட்ட மக்களுடனும் தொடர்புகொள்ளக்கூடிய ஆளுமை உடைய விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. முடிவுதிகதி: 16.09.2020 விண்ணப்பங்களை salesrepresentative1933@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்

கொடுப்பனவுகள் பேசித் தீர்மானிக்கப்படும்.

## THE Royal College of Jaffna

3 மாதங்களில் ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்கப் பயில ஆசிரியர் விஸ்வப்பிரம்ம ஸ்ரீ நடராஜா விக்னேஸ்வரன் ஆச்சாரியார்.

இல.424/3, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.

077 675 1649

# பொதுக் கழிப்பறைக்குள் மாணவிகள் துன்புறுத்தல்

## 6பேர் கொண்ட குழு கைது

கண்டி, செப்.6

கண்டி நகரில் பொதுக் கழிப்பறைக்குள் பாடசாலை மாணவிகளை பாலியல் ரீதியில் துன்புறுத்தல் மேற்கொள்ளும் கும்பல் ஒன்று கைதுசெய்யப்பட்டுள்ளது. கண்டி பொலிஸ் தலைமை அதிகாரிகளினால் இந்த குழுவினர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று குறிப்பிடப்படுகின்றது. பாடசாலை மற்றும் மேலதிக வகுப்புகளுக்குச் செல்லும் மாணவர்கள் பொதுக் கழிப்பறைக்குச் செல்லும் போது இந்தக் குழுவினர் அச்சுறுத்தி பலவந்தமாக துஷ்பிரயோகம் செய்துள்ளனர் என்றுகுற்றஞ்சாட்டப்பப்படுகிறது. .

சம்பவங்களுக்கு முகம் கொடுத்த மாணவிகள் சிலர் சம்பவம் தொடர்பில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுதத் மாசிங்கவிடம் தெரியப்படுத்தியுள்ளனர். அதற்கமைய 6 பேர் கொண்ட கும்பல் ஒன்று கைதுசெய்யப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்டவர்களுக்குள் ஆசிரியர் ஒருவரும் உள்ளடங்குகிறார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ப)

## மரண அறிவித்தல்



### மரியான் தமியான் அருளானந்தம்

குளமங்கால் மல்லாகத்தை பிறப்பிடமாகவும் சென் ஜேம் இளவலையை வசிப்பிடமாகவும் கொண்ட மரியான் தமியான் அருளானந்தம் நேற்று (05.09. 2020) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தமியான் ஞானப்பு தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான பிலிப்பு யக்கோவா தம்பதியரின் மருமகனும், இராக்கினியம்மாவின் பாசமிகு கணவரும், பெயிலோன் ராஜன், டெசி ஜோய்சி ஆகியோரின் பாசமிகு தந்தையும், அகஸ்ரின் ஜெயக் குமார், மெற்றில்டா ஆகியோரின் மாமனும், ஜொனாத் செரினோவின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான மரிய மோட்சமுத்து, றோசமுத்து, ஜோசப் ஆகியோரின் சகோதரரும், அந்தோனி மரியம்மா, பிலிப்பு, எட்வேட் சவரிமோசேஸ், அந்தோனிப்பிள்ளை, ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு நாளை (07.09.2020) திங்கட்கிழமை பி.ப 3.30 மணியளவில் இளவாலை புனித யாகப்பர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, புனித யாகப்பர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

## உடல் எடை குறைய வேண்டுமா?

◎ எடை கூடுகிறதா?
◎ வயிறு, மார்பு குறைய வேண்டுமா?
◎ உடல் எடை குறைகிறதேயில்லை என்கின்ற கவலையா?

**பால்மா குளிசை** - வயிறு, மார்பு குறைக்கும் கிறீம்
15 நாள்களில் அற்புத மாற்றத்தை உணர்வீர்கள்.

## தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?

தலைமுடி வளரவேண்டுமா? பேன், பொடுகு தொல்லையா?
➤முடிகொட்டுகிறதா? ➤இளநரையா? ➤தலையிடியா? முடி அடர்த்தி இல்லையா?➤புதிதாக முடி முளைக்க வேண்டுமா?
➤பொன்னாங்காணி? கரிசலாங்காணி, இலாமிச்சை வேர், கருவேப்பிலை, வல்லாரை, நெல்லி சேர்த்துக்காய்ச்சிய எண்ணைய் குளிசை
இந்த எண்ணையைப்பாவித்து பயனடைய

077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

## தேவை

வெதுப்பகத்திற்கு சமையலாளர், சமையல் உதவியாளர், சுத்திகரிப்பாளர் தேவை

070 159 0990

## உடனடி வேலைவாய்ப்பு

யாழ் நகரில் அமைந்துள்ள பிரபல்யமான புத்தகக் கடைக்கு அனுபவமுடைவர்கள் தேவை.

தொடர்புகள் : 077 079 5316
காலை 9.00 மணிமுதல் மாலை 5 மணி வரை
தொடர்பு கொள்ளவும்
(சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்)
யாழ் மாநகர சபைக்கு உட்பட்டவர் விரும்பத்தக்கது




## வேலையாட்கள் தேவை

யாழ்நகரில் சைவ உணவகம் ஒன்றிற்கு கீழ்வரும் வேலையாட்கள் தேவை (கவர்ச்சிகரமான சம்பளம், தங்குமிட வசதியுடன்)

1. உணவுபரிமாறுபவர் (ஆண்,பெண்)
2. அலுவலக உதவியாளர் (இலகுரக வாகனம் ஓட்டக்கூடியவர்)
3. தோசை போடுபவர்
4. சமையல் உதவியாளர்
5. சமையலாளர்
6. அரையல் வேலையாள்
7. இடியப்பம் தயாரிப்பாளர் (பெண்கள்)
8. சுத்திகரிப்பாளர்
9. குசினி வேலையாட்கள்

தொடர்புகளுக்கு - 071 641 7174, 021 568 1660

## VACANCY

### VENUS SPECIALITY HOSPITAL (PVT) LTD

Venus Speciality Hospital has been newly built in Jaffna peninsula to offer the best in best service for all people. Here's an excellent opportunity for you to join with us and the following positions are available.

1. **Nurses for medical ward, surgical ward, Intensive Care Unit (ICU), and the maternity ward.**

   **Qualifications:**
   - Should qualified in the related fields.
   - Minimum 02 years experience.
   - Ability to handle the relevant units.

2. **IT Technician (Information Technology) – Male**

   **Qualifications:**
   - Degree holder in IT / HND IT / SLIIT or any other equal qualification.
   - Minimum one year experience in the field of IT.
   - Ability to handle the hardware issues and maintain the software system.

THE SELECTED CANDIDATE CAN BE EXPECT AN ATTRACTIVE RENUMERATION PACKAGE IN ACCORDANCE TO OUR HOSPITAL STANDARDS.

Interested candidates may forward the CV to on or before 10th September, 2020 by e-mail.

**Walk - in -interview, at 10.00 am on 11th September 2020 and 12th September 2020.**

**HR Department,**
Venus Speciality Hospital (Pvt) Ltd.,
136, Palaly Road, Kandarmadam, Jaffna.
+94-21-222 4172, +94-21-222 8470,
e-mail:venushos136@gmail.com

## தேவை

வீட்டில் தங்கியிருந்து வேலை
பார்க்ககூடிய ஆண் அல்லது பெண்
வேலையாள்கள் தேவை

மேலதிக விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்
**077 735 0108**

## வேலையாள்கள் தேவை

கடையில் வேலை செய்யக்கூடிய அனுபவமுள்ள அல்லது
வேலை பழக விரும்பும் கணக்காளர் மற்றும்
விற்பனையாளர் வேலைக்குத் தேவை.
(ஆண்.பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது)

தொடர்பு: **076 0333 034**

## அறைகள் வாடகைக்கு

வேலைக்கு செல்லும் ஆண்கள்
விரும்பத்தக்கது.

**077 9535 479**

## கடைகள் வாடகைக்கு

219, ஸ்ரான்லி றோட்டில் (பெற்றோலியம்
கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக) அருகருகாக
இருக்கும் இரண்டு கடைகள் வாடகைக்கு
விடப்படும்.

தொடர்பு: **077 805 2520**

## வீடு வாடகைக்கு உண்டு

சிறிய குடும்பத்திற்கு வீடு வாடகைக்கு உள்ளது.
(அனெக்ஸ்) அத்துடன் அறைகளும்
வாடகைக்கு உண்டு.

தொடர்பு:
**0777 412 713, 0777 2424 27**

## Vacancy for Jaffna Cooks

யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல
ஹொட்டல் ஒன்றுக்கு யாழ்ப்பாணச்
சுவையில் உணவு சமைக்கக் கூடிய
ஆண்/பெண் cooks தேவை.

தொடர்பு **0707 414 356, 070 750 3573, 0707 416 951**

# IPS

இலவச ஆங்கில, கணினி வகுப்புக்கள்
புதிய பிரிவுகள் -பிரிவு 28

**ஆங்கில வகுப்புக்கள்:**
Diploma in English / Spoken English
க.பொ.த (சா/த) மாணவர்களுக்கான விசேட
மீட்டல் வகுப்புக்கள் - Mon 7 AM, 5 PM

**கணினி வகுப்புக்கள்:**
Diploma in MS-Office/Website Development/
Programming
ICT (A/L), (O/L) -2020 மீட்டல் வகுப்புக்கள்

**சிங்கள வகுப்புக்கள்:**
அடிப்படையிலிருந்து எழுத்து, பேச்சு, அரச
உத்தியோகத்தர்களுக்கு விசேட பிரிவு.

**IELTS வகுப்புக்கள்
ஆரம்பமாகின்றன
(Free one week course)
Register Now.....**

ஆரம்பம்: **12.09.2020, 10.00 AM**
காலம் : 3 மாதங்கள் சான்றிதழ்கள்

**IPS** பல்கலைக்கழகத்திற்கு அண்மையில்
திருநெல்வேலி.
**076 685 2529/ 077 602 1794**

## வேலையாட்கள் தேவை

அழகுக் கலை நிலையம் ஒன்றிற்கு
வேலைக்கு ஆள் தேவை(அனுபவ
முள்ளவர்கள் விரும்பத்தக்கது)

தொடர்பு:- **077 401 1204**
பலாலி வீதி, கோண்டாவில் சந்தி கோண்டாவில்

## வேலையாட்கள் தேவை

தனியார் நிறுவனமொன்றிற்கு Machinary இல் வேலை செய்யக்
கூடியதுடன் Driving தெரிந்தவர்களும் (Gens), Office cleark
ஆக பணிபுரியக் கூடிய computer தெரிந்தவர்களும் (Female)
தேவை. ஆர்வமுள்ளவர்கள் எதிர்வரும் 11.09.2020 ம் திகதிக்கு
முன் Biodata வினை e-mail அல்லது தபாலில் அனுப்பி
வைக்கவும்

**Quest cleaners private limited**
987/2, K.K.S Road Jaffna
email-nobertpriska1995@gmail.com
Phone Number- 077 003 0442

## சேவை நலன் பாராட்டு



திருமதி **தெய்வநாயகி குணபாலன்**
Best Wishes Best Wishes

**சேவைக்காலம் - 28 வருடங்கள்**

எமது பாடசாலையில் ஆசிரியராக கடமையாற்றி
ஓய்வுபெற்றுச் செல்லும் **திருமதி தெ. குணபாலன்**
அவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
பாடசாலைச் சமூகம்
யா/ பன்னாலை சேர் கனகசபை அ.த.க பாடசாலை.

## பொதுமக்களுக்கான அறிவித்தல்
## இத்தால் சகலரும் அறிவது

எமது நிறுவனங்களான **செல்வா ஹாட்வெயார் சாரா இன்டஸ்ரீஸ் (Pvt) Ltd** மற்றும் **சன்ட்ரா மெஸ் இன்டஸ்ட்ரீஸ் (Pvt) Ltd** ஆகியவற்றில் முகாமையாளராக கடமையாற்றிய F.A.ஜீவனாயகம் எமது நிறுவனக் குழுமத்தில் வகித்த பதவியிலிருந்தும் பணியிலிருந்தும் முழுமையாக நீக்கப்பட்டுள்ளார் என்பதை அறியத்தருகின்றோம். எனவே மேற்படி நபருடன் எமது நிறுவனம் சம்மந்தமாக இடம்பெறும் எந்தவொரு கொடுக்கல் வாங்கல்களுக்கும் எமது நிறுவனக்குழுமம் பொறுப்பல்ல என்பதை இத்தால் தெரிவிக்கின்றோம்.

**நிர்வாகி**

## செவிப்புலனுக்கான முழுமையான தீர்வு
## ஜேர்மன் தொழிநுட்பத்தில் தயாரிக்கப்பட்ட
## பல வகையான

# காது கேள் கருவிகள்




இலவச செவிப்புலன் பரிசோதனை மற்றும் காது கேட்கவைக்கும் கருவிகளை பொருத்தி பரீட்சித்தல்



இலவச கண்பரிசோதனை
மூக்குக் கண்ணாடி, மற்றும்
காதுகேள் கருவிகளுக்கு விசேட
விலைக்கழிவுகள் வழங்கப்படும்.



**WICKRAMARACHCHI**
OPTICIANS & HEARING CARE
J.M.விக்கிரமராச்சி அன் கம்பனி 021 221 9288, 021 222 8109
No.178, KKS வீதி, யாழ்ப்பாணம். Batticalo: 065 222 9114

## ஏலவிற்பனை

**வடகோவை ஸ்ரீ சித்திரவேலாயுதசுவாமி
கோயில் - கோப்பாய்**

மேற்படி ஆலய நிர்வாக சபையினராகிய நாங்கள் இன்று (06.09.2020) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் எமது ஆலயத்தில் இருக்கின்ற பாவித்த பொருட்களான
**1). சிலாகைகள் 2). ஓடுகள்**
மற்றும் இடிபாட்டுக் கற்துகள்கள் போன்றவற்றை பகிரங்க ஏல விற்பனை மூலம் விற்க இருக்கின்றோம்.

**பரிபாலன சபை.**

## நாகபூஷணி திருமண சேவை

1994, செவ்வாய்குற்றமற்ற சூரிய. செவ் 15 பாவம் உடைய
டாக்ரர் மணமகளுக்கு மணமகன் எதிர்பார்க்கப்படுகிறது

இல.5, ஐந்தாம் ஒழுங்கை, பலாலி வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்
077 138 7596, 071 999 9306

# தேவை

திருகோணமலையில் உள்ள பிரபல
உணவகத்திற்கு **சமையல் உதவியாளர்**
**Waiter, Ice cram Maker** ஆகியோர்
தேவை. ஆண் / பெண் இருபாலாரும்
விரும்பத்தக்கது . 3 நேர உணவும் தங்குமிட
வசதியும் செய்து தரப்படும். கவர்ச்சிகரமான
சம்பளம் வழங்கப்படும்.

# 077 735 0108

DISTRIBUTORS WANTED
Browns
A Heritage of Trust

# பொருள் விநியோகஸ்தர்கள் தேவை

BROWNS நிறுவனத்தினுடைய பொது விற்பனைப்
பிரிவின் பொருட்களை விநியோகம் செய்வதற்கு
கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிரதேசங்களிலிருந்து
விநியோகஸ்தர்கள் (DISTRIBUTORS) தேவை:

■ யாழ்ப்பாணம் ■ கிளிநொச்சி ■ வவுனியா
■ திருகோணமலை

விநியோகஸ்தர்களாக இணைந்துகொள்ள
விரும்புபவர்கள் கீழ்வரும் தகைமைகளைக்
கொண்டிருத்தல் வேண்டும்

- ரூபா. 2 மில்லியன் பெறுமதியான வங்கி உத்தரவாதமொன்றினை (BANK GUARANTEE) வைத்திருத்தல்.
- களஞ்சியசாலை வசதிகளைக் கொண்டிருத்தல்.
- விநியோகத்திற்கான வாகன வசதி.

எம்முடன் இணைந்துகொள்ள ஆர்வமுள்ளோர்
கீழே கொடுக்கப்பட்டுள்ள தொலைபேசி
இலக்கத்திற்கு அழைப்பினை ஏற்படுத்தவும்:

**076 214 0832**

General Trading Division
**BROWN & COMPANY PLC.**
223, T.B. Jayah Mawatha, Colombo 10.

## UNIVERSITY COLLEGE OF JAFFNA
UNIVERSITY OF VOCATIONAL TECHNOLOGY
MINISTRY OF EDUCATION

**VACANCY**

University of Vocational Technology invites applications from suitable qualified persons for the below mentioned post in University College of Jaffna.

DIRECTOR / CHIEF EXECUTIVE OFFICER

**Closing Date: 22.09.2020**
FOR MORE DETAILS AND APPLICATION FORM, PLEASE VISIT www.univotec.ac.lk

**Assistant Registrar
University College of Jaffna**

06.09.2020

## UNIVERSITY COLLEGE OF JAFFNA
UNIVERSITY OF VOCATIONAL TECHNOLOGY
MINISTRY OF EDUCATION

**VACANCIES**

TVEC Reg No: P25/0071
Applications are invited from suitable qualified persons for the below mentioned posts in University College of Jaffna.


1. LECTURER (PROBATIONARY) IN FOOD TECHNOLOGY
2. DEMONSTRATORS IN FARM MACHINERY TECHNOLOGY, PRODUCTION TECHNOLOGY, MECHATRONICS TECHNOLOGY, FOOD TECHNOLOGY, COSMETOLOGY & BUILDING SERVICES TECHNOLOGY
3. MANAGEMENT ASSISTANT – GRADE III

**Closing Date: 21.09.2020**
FOR MORE DETAILS AND APPLICATION FORM, PLEASE VISIT www.ucj.ac.lk or call 021 221 7792

**Assistant Registrar
University College of Jaffna**

06.09.2020

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 10.08.2020 திங்கட்கிழமை
இறைபதமடைந்த எமது
குடும்பத்தலைவர்

### அமரர் கதிரன் இராசதுரை

அவர்களின் அந்தியேட்டி நிகழ்வு நாளை (07.09.2020) திங்கட் கிழமை கீரிமலையில் நடைபெற வுள்ளது.

அதனைத் தொடர்ந்து வீட்டுக் கிருத்திய நிகழ்வு 09.09.2020 புதன் கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, நண்பகல் 12.00 மணியளவில் நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.**

**படித்த மகளிர் திட்டம்,
மிருசுவில்,
எழுதுமட்டுவாழ் வடக்கு.**

**மனைவி,
இ.இரத்தினேஸ்வரி.**

## 14ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் சிவராசா சிவசேகர்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 01 . 05 . 1978 | 06 . 09 . 2006 |

திதிவெண்பா


பதின்னான்கு ஆண்டுகள் சென்றாலும் நாளாக நாளாக
தீராது உங்கள் பிரிவின் வலி
உங்கள் கருணை முகம் காணாது
அடங்காது நாம் கதறி அழும் ஒலி
வானுறையும் தெய்வ சந்நிதியில்
ஆன்ம ஈடேற்றம் பெற உங்கள்
இறையாசி வேண்டி அஞ்சலிக்கின்றோம்.

இராமலிங்கம் வீதி,
முடமாவடி.

தாய்

E.S Printers
மக் பிரிண்ட் (MUG)
# 357, Kasthuriyar Road, Jaffna.
021 492 7471 / 021 492 7472

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த (10.08.2020) திங்கட்கிழமை அன்று
சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர்
### கந்தசாமி பாலகணபதிப்பிள்ளை

(ஓய்வுபெற்ற பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப்பரிசோதகர்)
அவர்களின்

அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (07.09.2020) திங்கட்கிழமை காலை 8.00 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 09.09.2020 புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறும்.


அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த் தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**புளியங்கூடல் தெற்கு,
ஊர்காவற்துறை,
தொ.பே:0777 708708**

**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### நடராசா சிறிஸ்கந்தராசா



| தோற்றம். | மறைவு |
|---|---|
| 02.03.1944 | 05.09.2020 |

புலவர் வீதி, நவாலி வடக்கு, மானிப் பாயைப் பிறப்பிடமாகவும் இல.8/6, சிவன் புதுவீதி, திருநெல்வேலியை வசிப் பிடமாவும் கொண்ட நடராசா சிறிஸ்கந்த ராசா நேற்று (05.09.2020) சனிக் கிழமை காலை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நட ராசா சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல் லையா பரிபூரணம் தம்பதியரின் அன்பு மருமகனும் சந்திரவதியின் அன்புக் கண வரும் ரஜனி, பாலமுரளி, கார்த்திகா ஆகி யோரின் அன்பு தந்தையும் ஜெயகாந்தன், அரவிந்தன், கௌரி ஆகியோரின் அன்பு மாமனாரும் அஜித்தா, சகிலன், திர்ஷாந், டிவாணி, கஜா ஆகியோரின் அன்பு பேரனும் காலஞ்சென்றவர்களான கடம் பேஸ்வரன்,குகேஸ்வரன், ஜெகதீஸ்வரன், கார்த்திகைப்பிரகாசம் மற்றும் சிறி முருகன், புவனேஸ்வரி, சறோஜா ஆகியோரின் அன்பு சகோதரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.09.2020) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**ஜெயகாந்தன் :- 077 7321 849
பாலமுரளி : - 077 699 7568
அரவிந்தன் :- 0047 915 221745**

**தகவல்:
ரஜனி (மகள்)**

## 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 29 . 12 . 1939 | 06 . 09 . 2012 |

### அமரர் சின்னத்தம்பி தர்மராஜன்

(ஓய்வு பெற்ற அஞ்சல் அத்தியட்சகர்)


அன்பும் பாசமும் நிறைந்த
எம தருமை அப்பாவே !
எமை விட்டுப் பிரிந்து சென்று
ஆண்டுகள் எட்டு ஆகிவிட்டாலும்
உங்கள் அன்பும் அரவணைப்பும்
எமை விட்டு அகலவில்லை
எத்துயர் கண்டும் தளராத நெஞ்சமும்
உங்களின் உற்சாகமும் திறனும்
என்றும் எங்களை வழிநடத்த
தெய்வமாக இருந்து என்றும்
எங்களை வழிநடத்தி ஆசீர்வதியுங்கள் அப்பா!

41/17, பாடசாலை வீதி,
தாவடி தெற்கு,
கொக்குவில்.

உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### நடராசா இராசேந்திரா



| தோற்றம். | மறைவு. |
|---|---|
| 15.04.1943 | 05.09.2020 |

மூளாயைப் பிறப்பிடமாகவும் சிவபூதவராயர் கோயிலடி பன்னாலை, தெல்லிப்பழையை வசிப் பிடமாகவும் கதிரமலை வீதி, சுன்னாகத்தில் தற்காலிகமாக வசித்து வந்தவருமான நடராசா இராசேந்திரா நேற்று (05.09.2020) சனிக்கிழமை அதிகாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா - சிவகொழுந்து தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான வன்னித்தம்பி சின்னாட் சிபிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ் சென்ற இராசம்மாவின் (சிவபாக்கியம்) அன்புக் கணவரும் புவனேஸ்வரி (சுவிஸ்), இரத்தி னேஸ்வரி( உதவிதிட்டமிடல் பணிப்பாளர், பிரதேச செயலகம் உடுவில்), ஜெகதீஸ்வரி (அராலி), ஞானேஸ்வரி ஆகியோரின் அன்பு தந்தையும் லோக நாதன் (சுவிஸ்), மதியுகன், காலஞ்சென்ற சிவனேசன் மற்றும் செல்வகுமார் ஆகியோரின் அன்பு மாமனாரும் கேசிகா, வினோதா (மாணவி - யா / மகாஜனாக் கல்லூரி, தெல்லிப்பளை) ஆகியோரின் அன்பு பேரனும் கமலாதேவி,காலஞ்சென்ற இந்திராதேவி மற்றும் மகேந்திரா, காலஞ்சென்றவர்களான விமலாதேவி, தெய்வேந்திரா, ரவீந்திரா ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்றவர்களான வேலாயுதம், திருநாவுக்கரசு, விநாயகமூர்த்தி மற்றும் துரைசிங்கம் காலஞ்சென்றவர்களான சீராளன், பத்மசோதி மற்றும் கதிர்காமத்தம்பி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.09.2020) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது தற்காலிக இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கீரிமலை செம்மண் வாய்க்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கதிரமலை வீதி,
சுன்னாகம்**

**தகவல்:
பிள்ளைகள்**

077 . 186

## மரண அறிவித்தல்

பிறப்பு 27.09.1951



மறைவு 05.09.2020

### திருமதி மங்களேஸ்வரன் பூபதி

இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மங்களேஸ்வரன் பூபதி நேற்று (05.09.2020) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் யோகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்புத்துரை மங்கையக்கரசி தம்பதியரின் மருமகளும், தம்புத்துரை மங்களேஸ்வரனின் அன்பு மனைவியும், சுபரஞ்சினி (கால்நடை வைத்திய அலுவலகம், பூநகரி), சதீஸ்வரன் (மங்களம் வியாபாரி, மருதனார் மடம், பொதுச்சந்தை) ஆகியோரின் அன்புத் தாயாரும், இந்திராணி, லோகேந்திரன், தெய்வேந்திரன், இந்திரலீலா, வசந்தகுமாரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், புனிதவதியம்மாள், உருத்திரகுமாரி, சகலகலாவாணி, மனோகரி, விஜயலக்சுமி, யோகேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.09.2020) ஞாயிற்றுக்கிழமை பி.ப 1.00 மணியளவில் இடம்பெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக இணுவில் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குமாரலிங்கம் வீதி,
இணுவில் கிழக்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 04.05.1935



மறைவு 05.09.2020

### திருமதி குமாரசாமி அன்னமணி

சங்குவேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி குமாரசாமி அன்னமணி நேற்று (05.09.2020) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரசாமியின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சின்னையா-ஆச்சிமுத்து தம்பதியரின் மகளும், சுப்பையா ஆச்சிமுத்து தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற கனகரத்தினத்தின் பாசமிகு சகோதரியும், வரலட்சுமி, பாஸ்கரன், நவசக்தி, சந்திரா, நக்கீரன், குமரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற ஜெயரட்ணம், சத்தியாதேவி, இன்பராசா, பிறேமவதனி, சர்மினி ஆகியோரின் அன்பு மாமியாரும், ருஷானி, நிரோஷன், சாஜினி, சர்வினி, நிசாந், நிவேதா, நிதுஷன், அவனேஷ், மகிஷா, அகரன் ஆகியோரின் பேர்த்தியும், சரினியின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.09.2020) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சங்குவேலி.

தகவல்: குடும்பத்தினர்.
ஜெ.நிரோஷன்
077 8900074, 078 8966660

## மரண அறிவித்தல்



### பொன்னையா தம்பிராசா

ஐங்கரன் ஸ்ரோர்ஸ், மானிப்பாய், ஐங்கரன் மோட்டோஸ் மானிப்பாய், ஐங்கரன் ஓட்டோஸ் யாழ்ப்பாணம், நிறுவனங்களின் உரிமையாளரும் முன்னை நாள் நிக்கவரட்டியா ஸ்ரோர்ஸ் உரிமையாளரும், PTN நிறுவனத்தின் ஸ்தாபகரும்.

சண்டிலிப்பாய் மேற்கை பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா தம்பிராசா இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் பொன்னையா சின்னக்குட்டி தம்பதிகளின் மகனும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி, சின்னத்துரை, சிவக்கொழுந்து, ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், பிரபாகரன் (கனடா), கிருபாகரன் (பிரான்ஸ்), தர்பாகரன், பவளரஜனி, விஜிகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் றேணுகா, அபர்ணா, ஜெனனி, கேதீஸ்வரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், உடுவில்), ருஜித்தா ஆகியோரின் அன்பு மாமனாரும், விஷால், விகாஸ், வினேஸ், விஷானிக்கா, நிகில், கஜில், அவந்திக்கா, சயித்தன்ஜன், மனஸ்வி, ஆருக்ஸி, ஆதித்தியன், ஆர்வலன், சமீரா, கிருஸ்மீரா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.09.2020) ஞாயிற்றுக்கிழமை மதியம் 11.45 அளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 8364 889,
077 843 5287

தகவல்.
குடும்பத்தினர்

## நான் சாவை....

தம் உயிர், வாழ்வு என்று அனைத்தை
யும் பல ஆயிரக்கணக்கான இளைஞர்
கள் இனத்துக்காகத் தியாகம் செய்த
இந்த மண்ணில், எங்கள் தனிப்பட்ட
பாதுகாப்புக்காகவும் உயிர்வாழ்தலுக்கா
கவும் பொய்களைப் பேசி, மக்களுக்கு
அநியாயங்களைச் செய்வது எந்த வகை
யிலும் நியாயம் ஆகாது என்பதை உறு
திபடச் சொல்கின்றேன். இன்றைய கால
கட்டத்தில் மரணபயம் இருந்தால் அரசி
யல் செய்யமுடியாது. இவ்வாறு தமிழ்
மக்கள் தேசியக் கூட்டணியின் நாடாளு
மன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன்
தெரிவித்தார்.

தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தேர்
தல் வெற்றி பற்றிய கிளிநொச்சி மக்க
ளின் பொதுக்கூட்டம் கிளிநொச்சி சந்
தைக்கருகில் நேற்றுக் காலை இடம்பெற்
றது. இந்தக் கூட்;டத்தில் பங்கேற்று
கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்
கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

**அரசியல் வெறுப்பு**

'கடமையை செய் பலனை எதிர்பாராதே'
என்றது கீதை. ஆனால் தங்கள் கட
மையை நிறைவேற்றாமல், காலத்துக்கு
காலம் சொல்வது ஒன்று, செய்வது ஒன்று
என்று எமது அரசியல் தலைமைகள்
இருந்தமையால்தான் மக்களுக்கு எமது
அரசியல் மீது வெறுப்பு ஏற்பட்டுள்ளது.
எனினும் இப்போது ஏற்பட்டுள்ள மாற்றம்
தமிழ்த் தேசியத்தின் எழுச்சிக்கான பாதை
யைத் திறந்திருக்கின்றது என்றே நம்பு
கின்றேன். இம்முறை தேர்தலில், தென்
னிலங்கையின் பேரினவாத சக்திகள்
மாத்திரமின்றி, நாம் பிரதானமாக விமர்
சிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
மாத்திரமின்றி எம்முடன் கடந்த காலத்
தில் இணைந்து நின்றவர்களும் மற்றும்
என்னைத் தனிப் பயணத்துக்கு அழைத்
தவர்களுங்கூட எம்மீது அவதூறுகளை
யும் சேறடிப்புக்களையும் செய்துள்ளனர்.

**மௌனிகள்**

இப்போது நாடாளுமன்றத்தில் எனக்கு
எதிர்ப்பு வருகின்றபோது எம் நாடாளு
மன்ற உறுப்பினர்கள் பலர் மௌனிக
ளாக இருக்கின்றார்கள். நான் பேசுவது
அவர்களுக்காகவுந் தான் என்பதை
மறந்து நிற்கின்றார்கள

தமிழ் உலகின் மூத்த மொழி; தமிழர்கள்
இந்த நாட்டின் மூத்த குடிகள் என்றேன்.
தமிழ் மக்கள் இந்நாட்டில் இரண்டாயிரம்
ஆண்டுகளுக்கு முன்னரே இருந்து
வாழ்ந்து வருகின்றார்கள் என்பதற்கு
இலக்கியங்கள், தொல்பொருள்கள், கல்
வெட்டுக்கள் என பல ஆதாரங்கள் உள்
ளன. இதனை ஆதாரங்களுடன் முன்
வைத்தேன். அதற்கு எதிராக தென்னி
லங்கை அரசியல்வாதிகள் போர்க்கொடி
தூக்கி வருகின்றார்கள். அவர்கள் இதுகா
றும் செய்துவந்த மோசடி எங்கே வெளி
வந்துவிடுமோ என்று அஞ்சுகின்றார்கள்.

**உண்மையைப் பேசவேண்டும்**

அவர்கள் தங்கள் வரலாற்றைப் புனை
கின்றார்கள். புனைந்து பேசுகின்றார்கள்.
நாமோ எங்களுக்கு என இருக்கின்ற
உண்மையான வரலாற்றை இதுகாறும்
பேசாது இருந்துவிட்டோம். இந்த உண்
மைகளை நான் பேசுவது, நாட்டைப்
பிரிக்கவல்ல. இனப்பிரச்சினையில் இனி
யாவது சிங்கள மக்கள் விட்டுக் கொடுப்பு
டன் நடப்பார்கள் என்ற எதிர்பார்ப்பி
லேயே. அப்படி நடந்தால் இலங்கைத்
தீவின் அமைதிக்கு அது வழியமைக்கும்
என்பதே என்னுடைய எதிர்பார்ப்பு.
நெருக்குதல் ஒன்று தான் பெரும்பான்
மையினரை தமது மாட மாளிகைகளில்
இருந்து கீழிறக்கும் என்பது எனது கருத்து.
துரதிஷ்ட வசமாக எமது தலைவர்கள்
எமது வரலாற்றைப் பேசத் தயங்குகின்
றார்கள்.

**யாரும் இல்லையே**

எல்லா வினைகளுக்கும் எதிர்வினை
உண்டு என்பதை நாடாளுமன்றத்தில்
சுட்டிக்காட்டிய போது, அதனைப் பிரிவி
னைவாதம் என்று எச்சரிக்கின்ற சிங்களத்
தலைவர்கள் இருக்கும் நாடாளுமன்றத்
தில், எங்கள் நியாயங்களை இனத்திற்கா
கப் பேசுகின்ற தமிழ் நாடாளுமன்ற
உறுப்பினர்கள் இல்லையே! படைத்
துறை உயர்தளபதி சரத் பொன்சேகா
என்னைச் சுடுவோம் என்ற தொனியில்
பேசியதை நீங்கள் பார்த்துக் கேட்டிருப்பீர்
கள். அதாவது சிங்கள மக்களைக்
கோபம் ஊட்டியவர்களைத் தாம் சுட்டுக்
கொன்றதை எனக்கு நினைவுபடுத்து
வதாகத்தான் பொன்சேகா சொல்லி எச்ச
ரித்தார். மரணம் என்பது எல்லோருக்கும்
பொது. படைத்துறை உயர் தளபதிகளுக்
கும் கூட மரணம் வரும். நான் ஓய்வெ
டுத்து என் பேரப்பிள்ளைகளுடன் பொழு
தைக் களிக்கலாம். ஆனால் வடக்கின்
முதலமைச்சர் பதவிக்காக இழுத்து வரப்
பட்ட எனக்கு, சில கடமைகள் இருப்பதை
உணர்ந்தேன். பல உண்மைகளை
அழுத்தம் திருத்தமாக எடுத்துச் சொல்ல
வேண்டும் என்பதையும் இப்போது
உணர்ந்துகொண்டுள்ளேன். அதைத்
தடுக்க சிங்களப் பாராளுமன்ற உறுப்பி
னர்கள் அல்லது உயர் இராணுவ அதிகா
ரிகள் எனக்கு மரண பயம் ஊட்டுவதால்
ஆவதொன்றுமில்லை- என்றார். (ஒ.5)

## 2 கிலோ...

கைது செய்யப்பட்டுள்ளார் என ஓமந்தை
பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா பாலமோட்டையிலிருந்து
ஓமந்தை நோக்கி மோட்டார் சைக்கிளில்
நேற்றுக் காலை சென்று கொண்டிருந்த
பெண்ணை கடமையில் இருந்த பொலி
ஸார் வழிமறித்து சோதனை மேற்கொண்
டனர். மோட்டார் சைக்கிளில் 2 கிலோ
கஞ்சா இருந்ததையடுத்து அவரைக்
கைதுசெய்ததாகப் பொலிஸார் தெரிவித்
தனர். வவுனியாநெளுக்குளத்தைச்சேர்ந்த
42 வயதுடைய பெண்ணே பொலிஸா
ரால் கைது செய்யப்பட்டுள்ளார். (ஒ.5,110)

## 15 பவுண்...

அதிகாலை இடம்பெற்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்
னாள் உதவிப் பதிவாளரான கந்தசாமி
யின் வீட்டிலேயே திருட்டு இடம்பெற்றுள்
ளது. அவருடைய மனைவி மற்றும்
உறவினர்கள் சிலர் வீட்டில் உறக்கத்தில்
இருந்த நிலையில் ஓடு பிரித்து நுழைந்த
திருடர் சல்லடை போட்டுத் தேடுதல் நடத்தி
அவற்றைத் திருடிச் சென்றுள்ளனர்.
காலையில் விழித்தபோது சம்பவம் அவர்
களுக்குத் தெரியவந்தது என்று தெரிவிக்
கப்பட்டது. சாவகச்சேரி பொலிஸ் நிலை
யத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.
பொலிஸார் மோப்ப நாயுடன் வந்து
தேடுதல் நடத்தினர். திருடப்பட்ட வீட்;டிலி
ருந்து சில மீற்றர்கள் தொலைவிலுள்ள
இன்னொரு வீட்டில் சென்று மோப்ப நாய்
படுத்துள்ளது. இதனையடுத்து அந்த
வீட்டிலிருந்தவர் சந்தேகத்தில் கைது செய்
யப்பட்டுள்ளார். (ஒ.த,288)

## 20ஆம் திருத்தத்தை...

குமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் அவரது கட்சி அலுவல
கத்தில் நேற்று நடத்திய பத்திரிகையாளர்
சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்த
தாவது:

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நாடா
ளுமன்றத்தில் முன்வைக்கப்படும் எந்த
வரைவாக இருந்தாலும் இரண்டு விடயங்
களின் அடிப்படையில்தான் அதனை
ஆதரிக்கும். ஈழத் தமிழர்களின் தேசத்தை
அங்கீகரிக்கின்ற ஓர் அரசியல் தீர்வை
ஆதரிப்போம். அதனை விட ஜனநாயகத்
தைப் பலப்படுத்துகின்ற பொதுவான சட்
டவரைவுகளையும் நாம் ஆதரிப்போம்.
அதனடிப்படையில் 20ஆம் திருத்தச்
சட்டவரைவை நாம் ஆதரிக்க மாட்டோம்,
என்றார். (ஒ.5,26)

## தமிழர்களுக்கான...

ருக்க வேண்டும். ஆனால் ஆரம்பத்தில்
யாரும் வாய் திறக்கவில்லை. மக்கள் மத்
தியில் வந்து நாங்கள் தான் தமிழ்த் தேசி
யத்தின் பாதுகாவலர்கள் வேறு யாரும்
இல்லை என்று ஏட்டிக்குப் போட்டியாக
கூறக்கூடிய அனைவரும் இதனை
யோசிக்க வேண்டும். இப்போதுதான்
தமிழ் மக்களுக்கான சரியான பாதை
ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு தமிழ்
மக்கள் தேசியக் கூட்டணி யின் இணை
ஊடகப் பேச்சாளர் சுரேஸ் பிரேமச்சந்தி
ரன் தெரிவித்தார். கிளிநொச்சியில்
நேற்று இடம்பெற்ற கூட்டத்தில் பங்கேற்று
கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்
கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்றத்தில் விக்னேஸ்வரன்
தனது கன்னியுரையில் தெரிவித்த
வற்றை சிங்கள நாடாளுமன்ற உறுப்பி
னர்களால் ஏற்றுக் கொள்ள முடிய
வில்லை. அவர் பொய் பேசவில்லை.
தமிழ் மூத்த மொழி என்பதையும், தமிழர்
களுக்கு சுயநிர்ணய உரிமை இருக்கின்
றது என்று அவர் கூறியதும் சிங்கள
நாடாளுமன்ற உறுப்பினர்களை கொதிப்
படையச் செய்துள்ளது.

சர்வதேச தமிழ் வரலாற்றுப் பேராசிரியர்
கள் விக்னேஸ்வரனின் கருத்து பிழையா
னது அல்லது. சிங்கள நாடாளுமன்ற
உறுப்பினர்கள், விக்னேஸ்வர னின்
கருத்து பிழையானது என்று கூறுவார்க
ளாயின் சரியானதை நிரூபித்து அதனை
ஹன்சாட்டில் பதிவிடவேண்டும். அதனை
விடுத்து விக்னேஸ்வரனின் உரையை
நீக்கச் சொல்வது நியாயமில்லை. அப்ப
டிக் கோருவது விக்னேஸ்வரனின் பேச்சுச்
சுதந்திரத்தை பறிக்கும் செயலாகும்.

விக்னேஸ்வரன் ஒரு பிரிவினைவாதி என்
றும் இனவாதி என்றும் இவர் நாடாளுமன்
றத்தில் இருக்கக்கூடாது என்றும் விரட்டி
அடிக்கப்பட வேண்டும் என்றும் பிரபாக
ரன், அமிர்தலிங்கம் போன்றோருக்கு
ஏற்பட்ட கதியே இவருக்கு ஏற்படும் என்
றும் முன்னாள் இராணுவத் தளபதி சரத்
பொன்சேகா உட்பட பலர் நாடாளுமன்றத்
தில் மிக மோசமான முறையில் தமது
வார்த்தைப் பிரயோகங்களைக் கூறிவரு
கின்றார்கள்.

இந்தக் கருத்துக்களால் நாங்கள் பயந்து
ஓடி ஒழியப்போவது இல்லை. விக்னேஸ்
வரன் தனது கருத்தை மிகத் தெளிவாகக்
கூறியிருக்கின்றார். நான் கூறிய இந்தக்
கருத்துக்கள் நீங்கள் தவறு என்று கருது
வீர்களாக இருந்தால் ஒரு விசாரணைக்
குழுவை அமையுங்கள். அதில் சர்வதேச
உள்நாட்டு வரலாற்று ஆய்வாளர்களை
நிறுத்தி அதனூடாக நான் சொன்னதில்
தவறு இருந்தால் அதை நிரூபியுங்கள்
என்று கூறியுள்ளார்.

ஆகவே, பந்து இப்பொழுது அவர்களு
டைய பக்கத்தில் இருக்கின்றது. விசார
ணைக் குழுவை அமைக்கப் போகின்றார்
களா? இலங்கையின் பூர்வீக குடிமக்கள்
யார் என்று அறியப்போகின்றார்களா?
அல்லது பொய்யையும் புனை கதையை
யும் சொல்லப்போகின்றார்களா? சிங்கள
மக்கள் உண்மையை அறிந்தால் இந்த
நாட்டினுடைய பிரச்சினையை தீர்ப்பதற்கு
வழிவகுக்கும். ஆனால் சிங்கள மக்க
ளுக்கு உண்மை மறுதலிக்கப்படுகின்
றது.

பாடப்புத்தகங்களில் தாங்கள் வரலாற்று
ஆசிரியர்கள் என்று கூறக்கூடிய இனவா
திகள் தமிழர்கள் இந்த மண்ணுக்கு
சொந்தமில்லை என்றும் சிங்கள மக்
களே இந்த மண்ணின் மைந்தர்கள்
என்று கூறுகின்ற போக்கையும் நாங்கள்
பார்க்கின்றோம். அது அவ்வாறு இல்லை
இந்த மண்ணின் ஆதிக் குடிமக்கள் தமி
ழர்களே! ஆகவே, எங்களுக்கு சமத்துவ
மான உரிமை, இறையாண்மை இருக்கின்
றது, -என்றார். (ஒ.5)

## இந்தியா தலையிட்டும்...

யாக இருக்கின்றோம். எனவே இந்திய
அரசு தலையிடுவதால் எந்தப் பயனும்
இல்லை. இவ்வாறு அமைச்சர் விமல்
வீரவன்ச தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த நாட்டில் இனப்பிரச்சினை தொடர
13ஆவது திருத்தமும் ஒரு காரணமாக
இருக்கின்றது.

அரசமைப்பின் 13ஆவது திருத்தமும்
19ஆவது திருத்தமும் நாட்டுக்குச் சாபக்
கேடாக அமைந்துள்ளன. இரண்டுக்கும்
புதிய அரசமைப்பில் முடிவுகாண வேண்
டும். நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்
படவுள்ள அரசமைப்பின் 20 ஆவது
திருத்தம் தற்காலிக ஏற்பாடு. அதன்பின்
னர் வரவுள்ள புதிய அரசமைப்பு ஆபத்
தான திருத்தங்களுக்கு முற்றுப்புள்ளி
வைக்கும். எனவே புதிய அரசமைப்பில்
இந்தியா விரும்பும் 13ஆவது திருத்தத்
தின் பரிந்துரைகளை உட்புகுத்த அரசு
நடவடிக்கை எடுக்கவேமாட்டாது, என்
றார். (ஒ.5,22)

## உள்விவகாரங்களில்...

அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர
தெரிவித்தார். 13ஆம் திருத்தம் தொடர்
பில் இலங்கை அரசுடன் பேச்சு நடத்த
இந்தியா சிறப்புத் தூதுவரை நியமிக்க
வுள்ளமை தொடர்பில் கேட்டபோதே
அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்
துமாறு இலங்கைக்கு இந்தியா எந்த
வகையிலும் அழுத்தம் கொடுக்கவே
முடியாது.

13ஆவது திருத்தத்தின் பிரகாரம்தான்
இலங்கை 9 மாகாணங்களாகப் பிரிக்கப்
பட்டது. அதாவது இலங்கை 9 துண்டு
களாக்கப்பட்டது. இதனால்தான் தமிழீழ
விடுதலைப் புலிகளின் கையும் ஓங்
கின.

அதேவேளை, வடக்கு, கிழக்கு மாகா
ணங்கள் தமது தாயகம் என்று தமிழர்கள்
உரிமை கோரினர். இப்போதும் அதே
நிலைப்பாட்டில்தான் தமிழர்கள் இருக்
கின்றார்கள். அதனால் தனிநாட்டுக்
கோரிக்கை அன்று தொடக்கம் இன்று
வரை வலுப்பெறுகின்றது.

13 ஆவது திருத்தத்தின் பிரகாரம்
மாகாண சபைகளுக்குச் சிக்கலுக்குரிய
அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளமை
யால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.
அதனால்தான் மாகாண சபைகளுக்குக்
காணி, பொலிஸ் அதிகாரங்களை
வழங்க வேண்டாம் என்று நாம் கூறு
கின்றோம்.

புதிய அரசமைப்பின் ஊடாக 13ஆவது
திருத்தத்தில் உள்ள சிக்கலான விடயங்க
ளுக்கு முடிவுகட்டப்பட வேண்டும். அதன்
பின்னர்தான் மாகாண சபைத் தேர்தலை
நடத்த முடியும், என்றார். (ஒ.5,22)

*உறுப்புரிமை...*

தப்பட்டுள்ளதாகவும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

கொக்குவிலில் உள்ள அவர்களது கட்சி அலுவலகத்தில் நேற்று பி.ப. 2.45 மணிக்கு இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர், தேசிய அமைப்பாளர் பதவிகளை வகித்த வி.மணிவண்ணன் கட்சியின் அடிப்படைக் கொள்கைகளுக்கு முரணாகவும், தலைமைத்துவத்தைக் கேள்விக்கு உட்படுத்தும் வகையிலும் செயற்பட்டார். இதனையடுத்து அவர் அந்தப் பதவிகளில் இருந்து நீக்கப்பட்டார்.

கட்சியின் மத்திய குழுவில் எடுக்கப்பட்ட இந்த முடிவு வி.மணிவண்ணனுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அது தொடர்பாக அவர் தனது பதிலை அனுப்பியிருந்தார். அவர் அனுப்பியிருந்த பதில் தொடர்பாக மத்திய குழுவில் ஆராயப்பட்டது. அவரது பதில் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கவில்லை. அத்துடன் மத்திய குழுவின் முடிவுகளை மீறி, உதாசீனம் செய்து அவர் செயற்பட்டமையால் உடனடியாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்து அவரை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்புரிமையில் இருந்து இடைநிறுத்துவது என்று மத்திய குழு தீர்மானித்துள்ளது.

இந்த முடிவு வி.மணிவண்ணனுக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பப்பட்டுள்ளது. பதிவுத் தபால் மூலமும் அனுப்பப்பட்டுள்ளது.

இரு வாரங்களுக்குள் இது தொடர்பாக அவர் பதிலளிக்க முடியும். உறுப்புரிமை இடைநிறுத்தம் நிரந்தரமானதாக இல்லாது இருப்பதற்குரிய பதிலளிப்புக்களையே அவர் தெரிவிக்க முடியும். இரு வாரங்களின் பின்னர் ஒழுக்காற்றுக்குக் குழு இந்த விடயங்கள் தொடர்பான விசாரணைகளை ஆரம்பிக்கும். 6 குற்றச்சாட்டுக்கள் தொடர்பில், சாட்சியங்களின் அடிப்படையில் விசாரணை மேற்கொள்ளப்படும். விசாரணையின் முடிவில் கட்சியின் உறுப்புரிமை நிரந்தரமாக நீக்கப்படுவதா என்பது தொடர்பாக இறுதி முடிவெடுக்கப்படும்.

வி.மணிவண்ணன் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பெயரில் கட்சி நடவடிக்கைகளில் ஈடுபடுவது தடை செய்யப்பட்டுள்ளது. வி.மணிவண்ணன் கட்சியின் சின்னத்தையோ, கட்சியின் பெயரையோ பயன்படுத்தத் தடை செய்யப்பட்டுள்ளது. கட்சியின் தலைவர், செயலர் என்றவகையில் நாம் மக்களுக்கு இதனை அறிவிக்கின்றோம்.

மணிவண்ணன் விடயத்தில் இதுவரை அமைதி காத்தமையால் பாதிக்கப்பட்டது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிதான் என்பதையும் விளங்கிக் கொள்ள வேண்டும். மணிவண்ணனோ அவரது ஆதரவாளர்களோ அந்தக் கோணத்தில் செயற்படவில்லை.

இதன் பின்னர் பத்திரிகையாளர்களின் கேள்விக்கு கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பதிலளித்தார்.

**கேள்வி:** மணிவண்ணனுக்கு எதிராக 6 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன என்று குறிப்பிடு கின்றீர்கள். அவற்றை வெளிப்படுத்த முடியுமா? கட்சித் தலைமைக்கு எதிராக 'சதி' செய்தார் என்று கூறுகின்றீர்கள். அந்தச் சதி நடவடிக்கை என்ன என்பதை வெளிப்படுத்த முடியுமா?

**பதில்** : இப்போதைக்கு அவற்றை வெளிப்படுத்த முடியாது.

**கேள்வி:** கட்சி பதிவு செய்யப்படாத நிலையில் மணிவண்ணனை உறுப்புரிமையிலிருந்து நீக்குவது எப்படி சட்டவலுவுள்ளதாகும்?

**பதில்:** கடந்த காலங்களில் மணிவண்ணன் தேசிய அமைப்பாளர் பதவியை வைத்து ஏனையோரை கட்சியிலிருந்து எப்படி நீக்கினாரோ அதேபோன்றதொரு நடவடிக்கை அவரது விடயத்திலும் செல்லுபடியாகும்.

**கேள்வி:** மணிவண்ணனை ஆதரிக்கும் கட்சி உறுப்பினர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?

**பதில்** : மணிவண்ணனை கட்சியிலிருந்து தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளதை இப்போதுதான் எமது கட்சி உறுப்பினர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும், எமது கட்சிக்கு வாக்களித்தவர்களுக்கும், பொதுமக்களுக்கும் தெரியப்படுத்துகின்றோம். எதிர்காலத்தில் மணிவண்ணனுடன் இணைந்து செயற்படும் கட்சி உறுப்பினர்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

**கேள்வி:** மணிவண்ணனுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை மத்திய குழுவில் முன்வைத்தது?

**பதில்** : மத்திய குழுவாகக் கூடிதான் முடிவெடுத்தது.

**கேள்வி:** மத்திய குழுவில் தன் மீதான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு ஆராயப்படும்போது மத்திய குழு உறுப்பினரான தன்னை அந்தக் கூட்டத்துக்கு அழைக்கவில்லை என்றும், தனது பக்க நியாங்கள் முன்வைக்க சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை என்றும் மணிவண்ணன் பத்திரிகையாளர் சந்திப்பில் தெரிவித்திருந்தாரே?

**பதில்** : இல்லை. மத்திய குழுக் கூட்டத்துக்கு முன்னதாகவே மணிவண்ணன் மத்திய குழு உறுப்பினர்கள் ஒவ்வொருவரையும் தொடர்பு கொண்டு தனது நியாயப்பாடுகளைத் தெரிவித்திருந்தார். இறுதியாக கட்சியின் தலைவர் என்ற ரீதியில் என்னுடனும் கதைத்திருந்தார். மணிவண்ணன் விடயம் மத்திய குழுவில் ஆராயப்படும்போது அவரை அழைப்பது தொடர்பில் பேசப்பட்டது. தம்முடன் மணிவண்ணன் ஏற்கனவே கலந்துரையாடியதாக மத்திய குழு உறுப்பினர்கள் ஏகமனதாகத் தெரிவித்தனர்.

**கேள்வி:** தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியிலிருந்து மாத்திரமா அல்லது அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸிலிருந்தும் மணிவண்ணன் இடைநிறுத்தப்பட்டுள்ளாரா?

**பதில்:** மணிவண்ணன் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் மாத்திரமே. அவர் காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர் அல்ல.

**கேள்வி:** தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஏன் பதிவு செய்யப்படவில்லை?

**பதில்** : அது அரசியல் இயக்கம். தேர்தல் காலங்களில் மாற்றுத் தரப்புக்கள் எங்கள் மீது குற்றச்சாட்டுக்களைச் சுமத்துவது வழமை. அதாவது அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸின் சின்னத்தில் போட்டியிடுவதற்காகத்தான் நாங்கள் கட்சியைப் பதிவு செய்யவில்லை என்று சொல்வார்கள். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை கட்சியாகப் பதிவு செய்ய நான் வலியுத்திய போதும், கட்சியின் செயலர் செல்வராஜா கஜேந்திரனும், கட்சியின் தேசிய அமைப்பாளர் வி.மணிவண்ணனுமே கட்சியாகப் பதிவு செய்யத் தேவையில்லை என்று விடாப்பிடியாக நின்றார்கள். தேர்தல் அரசியலுக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைக் குறுக்கவேண்டாம் என்றார்கள். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கொள்கைகளும், காங்கிரஸின் கொள்கைகளும் ஒத்துச் செல்லாத சந்தர்ப்பத்தில் இது தொடர்பான அடுத்த கட்ட நடவடிக்கையைப் பார்க்கலாம்.

**கேள்வி:** மணிவண்ணன் கட்சியின் அறிவிப்பையும் மீறி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பெயரைப் பயன்படுத்தினால் நீங்கள் சட்டநடவடிக்கை எடுக்கலாம்தானே?

**பதில்:** உரிய நடவடிக்கை எடுப்போம்.

**கேள்வி:** நீங்கள் வாக்குக்காக மணிவண்ணனை தேர்தலில் பயன்படுத்திவிட்டு அதன் பின்னர் தூக்கி எறிந்ததாக குற்றம் சுமத்தப்படுகின்றதே?

**பதில்** : எப்படி அப்படிச் சொல்ல முடியும். அவரை விட இருவர் கூடுதலாக விருப்பு வாக்குகளைப் பெற்றுள்ளனரே. 800 வாக்குள் வித்தியாசத்தில் அவரை விட இன்னொருவர் நான்காவது இடத்தில் உள்ளார். பின்னர் எவ்வாறு அப்படிக் கூற முடியும்.

**கேள்வி:** புலம்பெயர் தேசத்தில் உள்ள ஒருவருடன் தொடர்பை பேணக்கூடாது என்று கூறப்பட்ட நிலையிலும், மணிவண்ணன் அவரிடம் பணம் பெற்றுக் கொண்டார் என்று மணிவண்ணன் மீது முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளில் ஒன்றாகச் சொல்லப்படுகின்றது. பணத்தை வழங்கியவர் என்று சொல்லப்படுகின்றவர், மணிவண்ணனுக்கு மாத்திரமல்ல கட்சியிலுள்ள பலருக்கு நிதி வழங்கியதாகப் பகிரங்கமாகச் சொல்லியுள்ளார். அவரிடமிருந்து நிதியைப் பெற்றுக் கொண்ட ஏனையோருக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படுமா?

**பதில்** : அது தொடர்பில் ஆராயப்படுகின்றது.

**கேள்வி:** மணிவண்ணன் கட்சியிலிருந்து நீக்கப்பட்டால் அல்லது அவர் விலகினால் உங்கள் ஆதரவுத் தளம் பாதிக்கப்படுமா?

**பதில்** : எமது கட்சிக்குக் கிடைத்த வாக்குகள் கொள்கைக்காக கிடைத்தவை. (ஒ,5,26)

## இத்தாலிய முன்னாள் பிரதமருக்கு கொரோனா தொற்று

ரோம், செப்.6



இத்தாலிய முன்னாள் பிரதமர் சில்வியோ பெர்லுஸ்கோனிக்கு பி.சி.ஆர் பரிசோதனையில் கொரோனாத்தொற்றுஉறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதையடுத்து இதய நோய் உட்பட வேறுநோய்களுக்கும்உட்பட்டுள்ள 83 வயதான பெர்லுஸ்கோனி, வியாழக்கிழமை இரவு மிலனின் சான்ரஃபேல்வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (வ)

## கொரோனாவால் வறுமையின் பிடியில் 4.7 கோடி பெண்கள்

நியூயோர்க். செப்.6

உலகம் முழுவதும் 4.7 கோடி பெண்கள் கொரோனாத் தொற்று நெருக்கடியால் வறுமை நிலைக்குத் தள்ளப்படுவார்கள் என ஐக்கிய நாடுகள் சபை எச்சரித்துள்ளது. ஐ.நா.வின் பெண்கள் மேம்பாட்டு நலப் பிரிவு (யு.என்.டி.பி) வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரி விக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பெண்கள் இடை யேயான வறுமை வீதம், 2019ஆம் ஆண்டிலிருந்து 2021ஆம் ஆண்டுக்குள் 2.7 சதவீதம் குறையும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், கொவிட் 19 நோய்த்தொற்று பரவல் நெருக்கடி காரணமாக பெண்களின் வறுமை வீதம் 9.1 சதவீதம் அதிகரிக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. கொரோனா நெருக்கடியின் விளைவுக ளால் 2021ஆம் ஆண்டளவில் உலகம் முழுவதும் கூடுதலாக 9.6 கோடி பேர் மிக வறுமையான நிலைக்குத் தள்ளப்படுவர். அவர்களில் 4.7 கோடி பேர் பெண்கள் மற்றும் சிறுமிகளாக இருப்பார்கள். இதன் மூலம், உலகில் வறுமையில் வாடும் பெண்களின் எண்ணிக்கை 43.5 கோடியாக அதிகரிக்கும்.

இந்த நிலையிலிருந்து கொவிட்19 நெருக்கடிக்கு முன்பிருந்த நிலைக்கு முன்னேற்றமடைய 2030ஆம் ஆண்டு வரை காத்திருக்க வேண்டியிருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-இ)

## மூன்று மாதங்களின் பின் நியூசிலாந்தில் முதல் சாவு

வெலிங்டன், செப்.6



நியுசிலாந்தில் மூன்று மாதங்களுக்குப் பின், முதியவரொருவர் கொரோனாத் தொற்றினால்உயிரிழந்துள்ளார் எனத்தகவல்வெளியாகியுள்ளது. சிறப்பான யுக்திகளைக் கையாண்டு நியூசிலாந்து அரசு கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்தியிருந்தது.

எனினும் நூறு நாட்களின் பின்னர் கடந்த மாதத்திலிருந்து நியூசிலாந்தில், மீண்டும் கொரோனாப் பாதிப்பு ஏற்பட்டது.

அதையடுத்து கொரோனா தொற்று தொடர்பாக விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 01ஆம் திகதி வரை நீடிக்கும் என அந்நாட்டு பிரதமர் ஜெசிந்தா ஆர்டன் அறிவித்திருந்தார்.

இந் நிலையில் 3 மாதங்களின் பின்னர் மீண்டும் கொரோனா இறப்பு நியூசிலாந்தில் பதிவாகியுள்ளது. நியுசிலாந்தில் இதுவரை, 1,700 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில். 23 பேர் உயிரிழந்துள்ளனர். (வ)

# அம்பு எய்தல் பயிற்சி வடக்கில் ஆரம்பம்

கிளிநொச்சி, செப்.6

தனிநபர் மற்றும் குழு ரீதியில் தற்போது பிரபல்யமாகி வரும் அம்பு எய்தல் விளையாட்டானது இலங்கை வரலாற்றில் முதன் முறையாக வடக்கு மாகாணத்தில் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப் பட்டது.

இந்த விளையாட்டானது, கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள அம்பாள் குளத்தில் அமைந்துள்ள, கிளிநொச்சி விவேகானந்த மகாவித்தியாலயத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் முத்தையா காந்தச்செல்வன், பாடசாலை உப அதிபர் பொன்னுத்துரை பிரகலாதன் ஆகியோர் தலைமையில் இந்த விளையாட்டு ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதில் கிளிநொச்சி மாவட்ட செயலக விளையாட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர் அனுராகாந்தன் கலந்து சிறப்பித்தார். தரம் 7, தரம் 8 இல் கல்வி கற்கும் ஆண், பெண் இருபாலாருமாக 150 மாணவர்கள் இதில் கலந்துகொண்டனர். இதன் போது இந்த விளையாட்டை கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள ஐந்து பாடசாலைகளில் தொடர்ந்து முன்னெடுப்பது எனத் தீர்மானிக்கப்பட் டுள்ளது.

இதற்கான அடிப்படை உடற் பயிற்சிகள், பாரம்பரிய சிலம்ப தமிழ் முறைப்படி வழங்கப்படும். உலகளாவிய ரீதியில் சர்வதேச ஒலிம்பிக் போட்டிகளிலும் உள்ளடக்கப்பட்ட ஒரு விளையாட்டாக இது காணப்படுகின்றது.

(ற-222)



# தமிழ்மொழி மூலம் தோற்றிய அனைத்து நடுவர்களும் சித்தி

மெய்வல்லுநர் நடுவர்கள் தரம் 2 இற்கான பரீட்சையை இலங்கை மெய்வல்லுநர் சங்கம் நடத்தியது. இந்தப் பரீட்சையில் தமிழ் மொழி மூலம் தோற்றிய அனைத்து நடுவர்களும் சித்தியடைந்துள்ளனர்.

அந்தவகையில், என்.சிவநேசன் (98), என்.பிரதாஸ் (95), எல்.விஸ்வநாதன் (91), ஏ.றொஸ்கோ (88), ரி.கருணாகரன் (90), எஸ்.மயூரன் (94), எஸ்.யோகேஸ்வரன் (80), ஜி.ஏ.கிறேசியன் (89), எஸ்.குமரேசன் (91), கே.துற்ஜெயந்தன் (88), என். ராதாகிருஸ்ணன் (84) ஆகியோர் வடக்கு மாகாணத்திலிருந்து சித்தியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ற-422)


## வீடு வாடகைக்குண்டு
யாழ் நகரில் Annex வீடு வாடகைக்கு உண்டு.
077 873 4805

## பணியாளர்கள் தேவை
யாழ் நல்லூரில் இயங்கும் உயர்தர
**சைவ உணவகத்திற்கு**
பணியாளர்கள் தேவை.
077 766 1083, 021 222 8294

## கட்டடம் வாடகைக்கு
யாழ். மின்சார நிலைய வீதியில் மத்திய பேருந்து நிலையத்திற்கு பின்புறமாக மூன்று மாடிகள் கொண்ட கட்டடம் வாடகைக்குண்டு.
077 437 3786, 077 271 8186

## வீடு விற்பனைக்கு
சாவகச்சேரி கற்குழி 1ம் வீதியில் 4 1/2 பரப்பு காணியில் 6 படுக்கை அறை கொண்ட புத்தம் புதிய மேல்மாடி வீடு விற்பனைக்கு உண்டு. விலை நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.
தகவல்: 077 1995 709

## ALLIANCE FRANCAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSY கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANCAISE மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.



www.ambafrancelk.org
021 222 8093 17, Kandy Road, Jaffna

## Water agents தேவை
**Water agents** தேவை.
(வடக்கு / கிழக்கு Province)
மேலதிக தொடர்புகளுக்கு :
076 360 7189,021 493 0200
021 493 0098

## Techno World
தொழில்நுட்பக் கல்லூரி
வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்.
**A/L 2020** தொழில்நுட்ப பிரிவு
மாபெரும் விசேட செயலமர்வு
தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்
சக்தி, ராகவன், முருகநிரோஜன், லவன்
திகதி - 07-09,12-15,25-27
ஆரம்பம் 07.09.2020 (8am - 2.30pm)

மாவட்ட முதல்நிலை பெற்ற மாணவர்கள்

| 2019 | | 2018 | |
|---|---|---|---|
| மதுசாளினி | (Kili) 01(BT) | கலக்சிகா | (JAF) 01(BT) |
| யோகதீபன் | (JAF) 01(BT) | ரஜிதா | (MULLAI) 01(BT) |
| யசிதா | (MULLAI) 01(BT) | விதுர்சன் | (KILI) 01(BT) |
| அருள்ராஜ் | (MAN) 01(ET) | **2017** | |
| தனுஜன் | (MULLAI) 02(BT) | | |
| தர்சன் | (KILI) 02(BT) | | |
| ஜீவரதன் | (MULLAI) 02(ET) | | |
| பிரியங்கன் | (KILI) 02(ET) | கேசனா | 01(BT) |
| தக்சயன் | (MULLAI) 03(ET) | தமிழின்யன் | 01(ET) |
| நிலவன் | (KILI) 03(BT) | மேரிகனிஸ்ரா | 02(BT) |
| ஐந்துசன் | (JAF) 03(ET) | சரண்சனா | 03(BT) |
| லாவண்ஜா | (JAF) 04(BT) | கோகுலன் | 03(ET) |

தொடர்புகளுக்கு : 0770175346, 0771703549

## வீடு வாடகைக்கு விடப்படும்
கோண்டாவில் டிப்போ முன்பாக கலைவாணி வீதியில் நல்ல புதிய சகல வசதிகளுடன் கூடிய வீடொன்று வாடகைக்கு விடப்படும். அரச உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது
077 7280 268

## காணி உடன் தேவை
வடமராட்சியில் நெல்லியடி, வதிரிச் சந்தி, மாலுசந்தி, இரும்புமதவடி, துலாக்கட்டு அண்மித்த பகுதிகளில் நான்கு பரப்புக் காணி அல்லது வீட்டுடன் சேர்ந்த காணி உடன்தேவை
077 390 9278

## விற்பனை
அலுவலக தளபாடங்கள் விற்பனைக்குண்டு.
**(Desk table and chairs (DAMRO)**
076 691 1081

## விசேட பொதுக்கூட்டம்
தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் எதிர்வரும் 13.09.2020 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 9.00 மணியளவில் சங்கப் பணி மனையில் இடம்பெறும். இக் கூட்டத்தில் அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.
இணைச் செயலாளர்கள்

## வீடு வாடகைக்கு உண்டு
யாழ் நகரில், கன்னாதிட்டி சந்திக்கு அருகாமையில்
வீடு வாடகைக் உண்டு.
தொடர்பு:077 1995 709

## IELTS CLASSES
கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால் யாழ். நகரில் IELTS (Academic and General), A1 UK Exam (வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை) English Grammar and Spoken English தனியாகவும் குழுவாகவும் கற்பிக்கப்படும்.
*Guarnteed to 7.5 in IELTS Exam
**Jaffna College Undergraduate Department**
464, Hospital Road, Jaffna.
Please contact:-
Tel: 077 780 3970 / 021 222 3382

## வாகனம் விற்பனைக்கு உண்டு
## JAC MOTOR LORRY
LIGHT MOTOR LORRY (NP LN ****)
With boby, 30672 km மட்டுமே பயன்படுத்தப்பட்ட வாகனம் விற்பனைக்கு உண்டு.
- Body registered
- விலை பேசித் தீர்மானிக்கப்படும்.

077 734 7578, 021 221 7664

## உடனடி வேலைவாய்ப்பு
நிதி நிறுவனம் ஒன்றிற்கு கீழ்வரும் பதவிகளுக்கான நேர்முகத் தேர்வு

**பதவி நிலைகள்**
1. Branch Coordinator-Male / Female

**தகைமைகள்**
சிங்களம், மொழி தேர்ச்சி பெற்றவராக இருத்தல் வேண்டும்.
சிறந்த தொடர்பாடல் ஆளுமை உடையவராக இருத்தல் வேண்டும்.
40 - 50 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.



**பதவி நிலைகள்**
1. Junior Executives - Micro Finance
2. Credit Executives - Business Loan
3. Customer Relations Officer - Branch (female)

**தகைமைகள்**
க.பொ.த (சாதாரணம்) சித்தி அல்லது க.பொ.த (உயர்தரம்) சித்தி பெற்றவராக இருத்தல் வேண்டும்.
சாரதி அனுமதிப்பத்திரம் உடையவராக இருத்தல் வேண்டும்.
சிறந்த தொடர்பாடல் தன்மை கொண்டவராக இருத்தல் வேண்டும்.
30 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

**அனுகூலங்கள்**
1. அடிப்படைச் சம்பள அளவுத்திட்டம் - 25.000 - 50.000
2. மாதாந்த பிரயாணப்படி - 10.000 - 15.000
3. மாதாந்த ஊக்குவிப்பு கொடுப்பனவு - 10.000 - 20.000

**நேர்முகத் தேர்வு**
இடம் - இல. 400/2, 1st floor, மணிக்கூட்டுக் கோபுர வீதி, யாழ்ப்பாணம்,
காலம் - 07.09.2020, 08.09.2020, 09.09.2020
நேரம் - காலை 10.00 a.m - 12.00 a.m மாலை 3.00 pm - 5.00 pm
தொடர்புகளுக்கு - 0777247267

## காணிகள் விற்பனைக்கு
1) அளவெட்டி மேற்கில் 2 பரப்பு 2 குழி அளவு கொண்ட 2 அறை கொண்ட வீடு உடன் விற்பனைக்கு. 2) அவ்வாறே திருநெல்வேலி சம்பத் வங்கிக்கு அருகில் பலாலி வீதியில் இருந்து 150 மீற்றரில 1½ பரப்பு வெறுங்காணி உடன் விற்பனைக்கு.
தொடர்பு: 077 221 6683

## வேலையாள்கள் தேவை
எமது ஸ்தாபனத்திற்கு பின்வரும் பணிநிலைகளுக்கு ஆள்கள் தேவை.
01. காசாளர் (பெண், வயதெல்லை 20 - 35)
02. விற்பனையாளர் (பெண், ஆண் - வயதெல்லை 20-35)
03. களஞ்சிய காப்பாளர் (ஆண், வயதெல்லை 25 - 35)
நேரில் சமூகம் தரவும் (ஞாயிற்றுக்கிழமை)
NORTHWAY FAMILY MART
இல.184, பலாலி வீதி, திருநெல்வேலி.
T.P.: 021 222 6002




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.09.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.